# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 08 ஞாயிற்றுக்கிழமை (24.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 240


# வடக்கில் தமிழருக்கு பெரு வெற்றி 18 சபைகளும் கூட்டமைப்பு வசம்

## ஈ.பி.டி.பியினருடன் இணைந்து களமிறங்கிய ஆளும் கட்சி தோல்வி

யாழ்ப்பாணம்,ஜூலை24

நேற்று நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர்களுக்குப் பெரு வெற்றி கிடைத்துள்ளது. அரச அடக்குமுறைக்கு எதிராக மக்களை வாக்களிக்கக் கோரிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத் தமது ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்ததன் மூலம் தமிழர்கள் இந்தப் பெரு வெற்றியைப் பெற்றுள்ளார்கள். வடக்கில் உள்ள 20 பிரதேச சபைகளில் 18 சபைகளையும் கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் நடந்த இரு சபைகளையும்கூட கூட்டமைப்பே கைப்பற்றி உள்ளது.

யாழ். மாவட்டத்தில் 3 நகர சபைகளுக்கும் 13 பிரதேச சபைகளுக்கும் கிளிநொச்சியில் 3 பிரதேச சபைகளுக்கும் முல்லைத்தீவில் ஒரு பிரதேச சபைக்கும் தேர்தல் நடத்தப்பட்டது. கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் 2 பிரதேச சபைகளுக்கும் வாக்களிப்பு இடம்பெற்றது. திருகோணமலை மாவட்டத்தில் 3 பிரதேச சபைகளுக்கும் தேர்தல் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் 48 சதவீத வாக்களிப்பு இடம்பெற்றதாக தெரிவத்தாட்சி அதிகாரி இமெல்டா சுகுமார் அறிவித்தார். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் 65 சதவீத வாக்குகள் பதிவாகி இருந்தன என்று அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கிழக்கிலும் 60 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குப் பதிவு இடம்பெற்றுள்ளது.

வன்னியில் சுமார் 30 வருடங்களின் பின்னர் முதல் தடவையாக உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றுள்ளது. படை

(27 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் சபைகள் அனைத்திலுமே ஆளும் கட்சிக்கு அமோக வெற்றி

கொழும்பு, ஜூலை 24

தெற்கில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நேற்று அதிகாலை வரை வெளிவந்த முடிவுகளின் பிரகாரம் சகல பிரதேச சபைகளின் அதிகாரத்தையும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

வெளியான சில முடிவுகள் வருமாறு:-

**கண்டி மாவட்டம்**

ஹரிஸ்பத்துவ பிரதேசசபை

ஐ.ம.சு.கூ. - 19,967 - 11 ஆசனங்கள்
ஐ.தே.க. - 13,892 - 06 ஆசனங்கள்
சுயேச்சை 3 - 1,353 - 01 ஆசனம்

யட்டிநுவர பிரதேச சபை

ஐ.ம.சு.கூ. - 27,921 - 15 ஆசனங்கள்

(27 ஆம் பக்கம் பார்க்க)

## திருகோணமலை நகரம் கூட்டமைப்புக்கு

திருகோணமலை, ஜூலை 24

திருகோணமலை மாவட்டப் பட்டணமும் சூழலும் பிரதேச சபையின் நிர்வாகத்தை தமிழரசுக்கட்சி கைப்பற்றியுள்ளது.

தமிழரசுக்கட்சி 8986 வாக்குகளைப்பெற்று 5 ஆசனங்ளையும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 6353 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களையும் ஐ.தே.கட்சி 2,859 வாக்குகளைப்பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின.

கந்தளாய் பிரதேசசபை

ஐ.ம.சு.கூ. - 14,270 - 8 ஆசனங்கள்
ஐ.தே.க - 5,820 - 3 ஆசனங்கள்

குச்சவெளி

ஐ.ம.சு.கூ. - 8,451 - 6 ஆசனங்கள்
தமிழரசுக்கட்சி -2,961 - 2 ஆசனங்கள்
ஐ.தே.க - 1,639 - 1 ஆசனம்

## ஜனநாயக வழிமுறையில் அரசுக்கு தமிழ் வாக்காளர்கள் சாட்டையடி

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஆளும்கட்சி வடக்கில் அரசின் அனைத்து வளங்களையும் பயன்படுத்தி, களத்தில் படை பட்டாளத்துடன் இறங்கிப் பிரசாரத்தில் ஈடுபட்ட போதும், மாணம் கொண்ட தமிழ் மக்கள் ஜனநாயக வழிமுறையில் தகுந்த பதிலடி கொடுத்துத் தலைநிமிர்ந்து நிற்கின்றனர்.

- இவ்வாறு தமிழர் தரப்பு மூத்த அரசியல்வாதிகளும் புத்திஜீவிகளும் கருத்து வெளியிட்டனர்.

இலவசப் பொதிகள், சைக்கிள், வேட்டி, சேலை என்று இலவசங்களை அள்ளி வழங்கியபோதும் தமிழ் பெருமக்கள் அசைந்து விடவில்லை.

நாட்டின் ஜனாதிபதி முதல் அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசின் உயர்மட்ட அதிகாரிகள் என முழு அதிகார ஆளணியும் வடக்கில் முகாமிட்டு அடிக்கற்கள் நட்டும், பாடசாலைக் கட்டடங்களைத் திறந்தும், வீதிகளைத் திறந்து வைத்தும், மீள்குடியமர்வுகளைச் செய்த போதும் அவலங்களை அனுபவித்த எம்மக்கள் ஏமாறவில்லை; அவர்கள் சரியான வேளையில் -

(27 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் இரு சபைகளையும் கைப்பற்றியது கூட்டமைப்பு

அம்பாறை, ஜூலை 24

அம்பாறை மாவட்டத்தில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் திருக்கோவில், காரைதீவு ஆகிய பிரதேச சபைகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது.

அசம்பாவிதங்கள் ஏதும் இன்றி அமைதியான முறையில் இடம்பெற்ற இந்தத் தேர்தலின் வாக்கு எண்ணும் பணி நேற்றிரவு அம்பாறை செயலகத்தில் இடம்பெற்றது.

திருக்கோவில்

தமிழரசுக்கட்சி - 6,865 - 7 ஆசனங்கள்
சுதந்திரக் கூட்டமைப்பு - 1,249 - 1 ஆசனம்
ஐக்கிய தேசியக் கட்சி - 810 - 1 ஆசனம்
மொத்த வாக்கு - 9,776
செல்லுபடியானவை - 9,421

காரைதீவு

தமிழரசுக்கட்சி - 4,284 - 4 ஆசனங்கள்
மு.காங். - 2,364 - 1 ஆசனம்

## தமிழ் மக்களுக்கு நன்றி கூறுகிறார் சேனாதிராசா

யாழ்ப்பாணம், ஜூலை 24

நடந்துமுடிந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு தமிழரசுக் கட்சி பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நன்றி தெரிவித்தார்.

சர்வதேசத்தின் எதிர்பார்ப்பை நிறைவுசெய்யும் வகையில் மக்கள் தமது விருப்பை வெளிப்படுத்தியுள்ளனர் என்று மாவை மேலும் கூறியுள்ளார். (ஒ-ஐ)

### கிளிநொச்சியில் வாக்களிப்பு முடிந்த கையோடு

## ஈ.பி.டி.பியினரின் தாக்குதலுக்கு கூட்டமைப்பு ஆதரவாளர் காயம்

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி விவேகானந்த நகரில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் காய மடைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணித் தலைவர் சுந்தரலிங்கம் லோகேஸ்வரன் (வயது 34) யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

வாக்களிப்பு முடிவடைந்த பின்னர் வாக்குப் பெட்டியைக் கண்காணித்துக் கொண்டு மோட்டார்

(27 ஆம் பக்கம் பார்க்க)



## ஊர்காவற்றுறை பிரதேச சபையில் வாக்கு எண்ணும் பணி இடைநிறுத்தம்

### 10 பெட்டிகளில் பாதுகாப்பு 'ஸ்ரிக்கர்' இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 24

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தேர் தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை எண்ணும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் வாக்கு எண்ணும் பணிகள் நேற்றிரவு ஆரம்பமானது.

வாக்கு எண்ணும் பணியின் போது, இரு வாக்குப் பெட்டிகளில் சிரேஷ்ட தேர்தல் அதிகாரி கையொப்பம் இல்லாததன் காரணமாகவும் 10 பெட்டிகளில் பாதுகாப்பு 'ஸ்ரிக்கர்' காணப்படாமையும் காரணமாக வாக்கு எண்ணும் பணி இடைநிறுத்தப்பட்டது.

இந்த விடயம் குறித்து யாழ்.தெரிவத்தாட்சி அதிகாரியும் அரச அதிபருமான திருமதி இமெல்டா சுகுமார் தேர்தல் ஆணையாளருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

அவரின் முடிவைப் பொறுத்தே

(27 ஆம் பக்கம் பார்க்க)


நவீன் செரமிக் Naveen Ceramic

#212, பலாலி வீதி, யாழ்ப்பாணம் ☎ 021 222 0033 / 021 222 0044

#5, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் ☎ 0212224777 / 0212224888

Metro Engineering (Pvt) Ltd

எமது இரண்டாவது கிளை யாழ் நகரில் தடம் பதிப்பதை வாடிக்கையாளர்களுக்கு பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம் . . . .

7 Days Open


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### கிளிநொச்சி, கரைச்சிப் பகுதி கிராமங்களில்

# இராணுவச் சீருடை தரித்தவர்கள் மக்களை அச்சுறுத்தி வாக்காளர் அட்டைகள் அபகரிப்பு

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி, கரைச்சிப் பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமங்களில் நேற்றுமுன்தினம் இரவு முதல் அதிகாலைவரை இராணுவச் சீருடை தரித்தவர்கள் மக்களை அச்சுறுத்தி அவர்களின் வாக்காளர் அட்டைகளை அபகரித்துச் சென்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் மேற்கண்டவாறு முறையிட்டுள்ளார்.

கிளிநொச்சி தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அவர் அனுப்பியுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

* 2011.07.22 ஆம் திகதி இரவு 9.30 மணிமுதல் 2011.07.23 ஆம் திகதி அதிகாலை 5 மணிவரை கரைச்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட கிராமங்களான வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடுநகர், சம்புக்குளம், மாயவனூர், பன்னங்கண்டி, மலையாளபுரம், கிருஷ்ணபுரம், பாரதிபுரம், கோணாவில், உருத்திரபுரம், செல்வாநகர் ஆகிய பகுதிகளில் இராணுவச் சீருடை தரித்தவர்கள் துப்பாக்கிகள், பொல்லுகள் சகிதம் வீடுகளுக்குச் சென்று மக்களின் வாக்காளர் அட்டைகளைப் பறித்துச் சென்றுள்ளார்கள். மக்கள் பயப்பீதியுடன் வாக்களிக்க முடியாமல் வீடுகளுக்குள் முடங்கியிருக்கிறார்கள்.

* இதேநேரப் பகுதியில் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்குட்பட்ட அரசர்கேணி, செந்தில்நகர், தம்பகாமம், முல்லையடி, பளை நகரம், பெரியபளை, சோரன்பற்று, மாசார், கோயில்வளவு கிராமங்களிலும் இராணுவச் சீருடை தரித்தவர்கள் வீடுகளுக்குள் புகுந்து வாக்காளர் அட்டைகளைப் பறித்துள்ளனர். மக்கள் பயப்பீதியுடன் வாக்களிக்க முடியாது வீடுகளுக்குள் முடங்கிப் போயுள்ளனர்.

#### பல்வேறு அடாவடி சம்பவங்கள் குறித்து முறைப்பாடு

* நேற்றுக் காலை 6.30 மணிமுதல் கண்டாவளைக் கிராமத்தின் வெளிக்கண்டல் சந்தியில் இருந்து சிவில் உடை தரித்த இராணுவத்தினர் தமது வாகனத்தில் கமக்காரர் அமைப்புச் செயலாளரையும் ஏற்றிக்கொண்டு வீடு வீடாக அரிசி, கருவாட்டுப் பொதிகளை வழங்குகின்றனர்.

* மாயவனூர், மாவடிப் பகுதிகளில் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று வாக்குச் சீட்டுக்களைப் பணத்துக்கு வாங்குகின்றனர். கொடுக்க மறுக்கும் மக்களுக்கு அடி உதைகளுக்கு இலக்காகியுள்ளனர்.

* திருவையாற்றுப் பகுதியில் எமது வாக்கெடுப்பு நிலைய முகவர் இளங்கோ அந்தப் பகுதி இராணுவ அதிகாரியால் பணிக்குப் போக வேண்டாம் என்று மறிக்கப்பட்டு மிரட்டப்பட்டுள்ளார். இதனால் அவர் பணிக்குப் போகவில்லை.

இவற்றுக்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்-என்றுள்ளது. (ஒ-ஐ)

### தமிழகக் கட்சிகளின் எதிர்ப்பை அடுத்து

# இந்தியா சென்ற இலங்கை இராணுவத்தினர் பயிற்சி நிறுத்தப்பட்டு நாடு திரும்புகின்றனர்

சென்னை, ஜூலை 24

நீலகிரி மாவட்டம், குன்னூர் வெலிங்டன் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிக்காகச் சென்றிருந்த இலங்கை இராணுவ அதிகாரிகள் நாட்டுக்குத் திருப்பி அனுப்படவுள்ளனர்.

ஈழத்தமிழர் ஆதரவுக் கட்சிகளான பெரியார் திராவிடர் கழகம், நாம் தமிழர் கட்சி மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இராணுவக் கல்லூரிக்கு அண்மையில் நடத்திய ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

தமிழர் ஆதரவுக் கட்சிகள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டங்களை அடுத்தே இலங்கை இராணுவத்தினருக்கான பயிற்சி நிறுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஒ-எ)

# மட்டு. சிறைக் கைதிகள் 10 பேர் கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஜூலை 24

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டுள்ள கைதிகளில் 10 பேர் கூரை மீது ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை குடிதண்ணீர் பிரச்சினையால் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் கைதிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் எதிரொலியாகவே இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் நீதியான விசாரணைகளை நடத்தி தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்றும் கோரியே இந்தப் போராட்டத்தில் தாங்கள் ஈடுபட்டதாக கைதிகள் தெரிவித்தனர். (ஒ-ஐ)

# புலிகள் மூழ்கடித்த கப்பல் சிதைவுகள்; அகற்றுவதற்கு 2180 கோடி ரூபா செலவு

### இந்தியாவுடன் அரசு உடன்பாடு

கொழும்பு, ஜூலை 24

காங்கேசன்துறை துறைமுகப் பகுதியில் புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட ஏழு கப்பல்களின் சிதைவுகள் உள்ள போதும் அவற்றில் ஆறு கப்பல்களின் சிதைவுகளை அகற்ற உடன்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட ஆறு கப்பல்களின் சிதைவுகளை அகற்ற இந்தியா 2180 கோடி ரூபாவை செலவிடவுள்ளது. ஆனால் ஏழு கப்பல்களின் சிதைவுகள் அங்கு காணப்படுவதாக இலங்கை இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இவற்றில் விடுதலைப் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி மூழ்கிய 'சீடான்சர்' என்ற கப்பல் உள்ளடக்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது. காங்கேசன்துறைத் துறைமுகத்தின் நுழைவாயிற் பகுதியில் காணப்படும் இந்தக் கப்பலின் சிதைவுகளில் 'மாகோ' என்ற சரக்குக் கப்பல் முன்னர் ஒருமுறை சிக்கிக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

துறைமுகப் பகுதியில் இலங்கை கடற்படையின் எடித்தாரா, ஓர் இழுவைப்படகு போன்றவற்றின் சிதைவுகளும் துறைமுகத்துக்கு மிக அருகில் காணப்படுவதாகவும் படை வட்டாரங்கள் கூறியுள்ளன. இந்த ஆறு கப்பல்களின் சிதைவுகளை அகற்றவே இந்தியாவுடன் இலங்கை உடன்பாட்டில் கையெழுத் திட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-எ)



# சந்தியடிச் சோமு

## எடுப்பார் கைப்பிள்ளையாய் பள்ளிக்கூடங்கள்

சந்திக்கு வரக் கொஞ்சம் பிந்திப்போட்டுது. நேற்றுத் தேர்தல் நாளெண்டபடியால் பெடிபெட்டைகளுக்கு ரியுசனுகளும் இல்லை, எல்லாம் வீட்டில நிண்டு ஒரே விளையாட்டு. போதாக்குறைக்குத் தாத்தா நீங்களும் வாங்கோ எண்டு என்னையும் தங்களின்ர கூத்துக்களுக்க இழுத்துவிட்டு உண்டு இல்லையெண்டு ஆக்கிப்போட்டாங்கள்.

அதில என்ன முக்கியமான விஷயம் தெரியுமே? சின்னனுகள் எல்லாமாச் சேந்து, வீட்டில கிடந்த கொங்கிரீற் கல்லுகள், தடியள், தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாத்தையும் வச்சு ஒரு வீட்டைச் செய்து, அதுக்குக் குறுக்கால ரிபன் ஒண்டையும் கட்டிப் போட்டு அதை வெட்டி என்னை ஒருக்கா திறக்கச் சொல்லி ஒற்றக் காலில நிக்குதுகள்.

சரியெண்டு நானும் கத்திரிக்கோல வாங்கி வெட்டித் திறந்து வைச்சன். ஒருக்கா நான் திறந்து வச்சாப் பிறகு, திரும்பவும் ரிபனக்கட்டி இவள் பிள்ளையையும் கூப்பிட்டு வெட்டித் திறக்கச் சொல்லுச்சுதுகள்.

இப்பிடியே ரிபனக்கட்டுறதும் வீட்டில உள்ளவை எல்லாரையும் ஒவ்வொருத்தராக கூப்பிட்டு ரிபன வெட்டித் திறக்கச் சொல்லிலுறதுமா விளையாட்டு நீண்டு போச்சுது... விளையாட்டுத்தானே எண்டு போட்டுப் பாத்து ரசிச்சுப் போட்டு, நான் சின்னனுகளுக்குச் சொன்னன், ''வீட்டுக்கு ஒரு தடவைதான் ரிபன் வெட்டிக் குடி புகுந்து போறது. உங்களப்போல கன தடவ திறந்து குடி புகுகிறதில்லை'' எண்டு.

என்ர வயசு போன குணத்தில அட்வைஸ் குடுத்தன்... அதைக் கேட்டிட்டு கெக்க... பிக்க... எண்டு பெரிசாச் சிரிச்சுப் போட்டு எல்லாச் சின்னனுகளுமா ஏகத்துக்கு சொல்லிச்சுதுகள். ''அதெல்லாம் உங்கட காலத்திலதான் அப்படி. இப்ப எங்கட பள்ளிக்கூடத்தில புதுசாக் கட்டின ஒரே கட்டிடத்தை ஒரே நாளில ரெண்டு தரம் ரிபன் வெட்டி திறந்தவை. அதுதான் நாங்களும் எல்லாரையும் கூப்பிட்டு திருப்பத்திரும்ப ரிபன் கட் பண்ணித் திறந்தனாங்கள்'' எண்டு.

நான் அரண்டு போனன். பிறகு சுதாகரிச்சுக் கொண்டு மெல்லக் கதையக் குடுத்து எந்தப் பள்ளிக்கூடத்தில அப்பிடி நடந்தது எண்டு விசாரிச்சன். எல்லாத்தையும் கேக்க மண்டை விறைச்சுப் போச்சு. பின்ன நேர சந்திக்கு நடந்தன்.

விசயம் இதுதான். கடந்த வாரத்தில ஒருநாள், நல்லூர்க் கந்தனுக்கு முன்னாலையும் பின்னாலையும் இருக்கிற பள்ளிக்கூடங்களில சில புது அறையள, தியட்டர்காரரின்ர (சைக்கிள் மன்னன்–புதுப் பேர் வைக்க வேண்டிக் கிடக்குப் பாருங்கோ, ஏனென்டால் நகரில உள்ள தியட்டர் சொந்தக்காரர்மார் அந்தப் பேர் தங்களையும் குத்திக்காட்டுதாம் எண்டு கவலைப்படுகினம்) அன்புத் தம்பி ஒருத்தர் முதலில வந்து மாலை மரியாதை எல்லாத்தையும் வாங்கிப் போட்டு ரிபனும் வெட்டித் திறந்து வச்சார்.

நல்லூரானுக்குப் பின்னால இருக்கிற பள்ளிக்கூடத்தில, திறப்பு விழா எல்லாம் முடிச்சு கதிரையில குந்தி இருந்ததுதான் தாமதமாம் ஒரு போன் கோல் வந்திருக்கு. ''நாங்கள் வந்து கொண்டிருக்கிறம் நாங்கள் திறக்கிறத்துக்கு ஒழுங்குகள் செய்யுங்கோ'' எண்டு அந்தக் கோலில சொல்லப்பட்டிருக்குது. இத சைக்கிள் மன்னனின்ட தம்பி அங்க இருந்தவைக்கு எடுத்துச் சொல்ல, திரும்ப மாலை மரியாதை ரிபன் எல்லாம் ஏற்பாடு செய்திட்டார் பிறின்சிப்பல்.

வந்திறங்கினவர் எங்கட முன்னால் தளபதி (பின்னால காட்டிக் குடுப்புக்கு உதாரணமா மாறிட்டார் எண்டது வேற விசயம்). அவரோட மற்றொரு முஸ்லிம் அமைச்சரும். பிறகு மூண்டு பேருமாச் சேர்ந்து மாலை மரியாதை எல்லாம் வாங்கிப் போட்டு இரண்டாம் தரமும் திறப்பு விழா நடத்திச்சினம்.

பிறகு அங்க இருந்து சைக்கிள் மன்னனின்ட தம்பி போட்டார். மற்ற அமைச்சர்மார் ரெண்டு பேருமா நல்லூரானுக்கு முன்னால இருந்த பள்ளிக்கூடத்துக்குப் போய் ரெண்டாம்தரம் அங்கையும் ஏற்பாடுகளச் செய்யச் சொல்லி திரும்பவும் திறந்து வச்சினம்.

சந்தியில நான் இந்தக் கதையச் சொன்னன். கேட்டுக்கொண்டிருந்த பென்சனியர் சொன்னார் ''பாடம் சொல்லிக் குடுத்து நல்லதுகளைச் சொல்லிக் குடுக்க வேண்டிய பள்ளிக்கூடங்களில பொய்யும் போலியும் கூரையில ஏறி நிண்டு கூத்தாடுது. இவங்கட அரசியல் கூத்து ஆடுறதுக்கு இடம் கிடைக்காமல் பள்ளிக்கூடங்களில நிண்டு ஆடுறாங்கள். அறுவார் சின்னங்களையே சிரழிக்கிற வேலை செய்யிறாங்கள். சீரழிவார் இத்தின சண்டைக்குள்ளையும் எச்ச சொச்சமா எஞ்சிக்கிடக்கிற கல்வியையும் பாழாக்கிறாங்கள்'' எண்டு கோவப்பட்டார்..

இதைக்கேட்ட கதிரண்ணை தன்ர பக்கத்து வீட்டு வாத்திப்பெடியன் சொன்ன தேர்தல் திருகு தாளமொண்டை எடுத்து விட்டார். தேர்தலுக்காக தெஹிவள மிருகக்காட்சிசாலையில இருந்த பாம்புகளையும் உவையள் விட்டு வைக்கேல்லையாம் எண்ட செய்திதான் அது. இதில மற்றொரு விசயம் என்னெண்டால் சில பல பேராசிரியர்மாரையும் கூட்டிக்கொண்டு வந்து பிள்ளைகளுக்கு பாம்புக்கதை சொல்லிப்போட்டு கடைசியில பள்ளிப்பிள்ளைக்கு பாம்பு காட்டச் சொன்னது பசில் மாமா தான் எண்டு அவற்ர புகழும் பாடிச்சினமாம்.

கொக்குவிலில இருக்கிற ஒரு பெரிய பள்ளிக்கூடத்துக்கு ஒரு நாள் வடக்கு மாகாணக் கல்விப் பொறுப்பாளர் திடீரெண்டு அறக்கப்பறக்க ஓடி வந்து, அதிபரிட்டச் சொன்னாராம், ''கொழும்பிலயிருந்து பாம்போட வந்திருக்கிறாங்கள் முதல் முதலா உங்கட பள்ளியிலதான் காட்டப்போறங்கள். பிள்ளையளை ஒழுங்குபடுத்துங்கோ'' எண்டு. எல்லாரும் பாம்பாட்டத்தப்பாத்தவையாம். ஒரு மலைப்பாம்புக் குட்டியும் அதுக்குள்ள இருந்ததாம். அதை பிறின்சிப்பலும் தொட்டு பாத்துப் பூரிச்சுப்போனாராம்.

இது பத்தாது எண்டு, மாகாணத்தை ஆளுரவரின்ட செயலர் ஒவ்வொரு அலுவலகமாக் கோல் எடுத்து ''திறக்கிறத்துக்கு ஏதும் இருக்கோ?'' எண்டு விசாரிச்சுத் திரிஞ்சவராம் கடந்த ஒரு வாரமா? ''ஏதேனும் இருந்தா எங்களுக்குத் தெரியாம திறக்க வேண்டாம்'' எண்டு அட்வைஸும் குடுத்தவராம். சேவை நீடிப்பு வேணும் எண்டால் ''சேவகம்'' செய்யத்தானே வேணும் பாருங்கோ.

''இந்த தேர்தலுக்கு முழுக்க முழுக்க பள்ளிக்கூடங்களெல்லாம் எடுப்பார் கைப்பிள்ளைகளாப் போயிட்டுதுகள். என்னெண்டாலும் ஒரு வழியில கேவலம் கெட்ட வேலைகள் செய்தெண்டாலும் வோட்டெடுத்துப்போட வேணுமெண்டு கோவணத்த வரிஞ்சு கட்டிக்கொண்டு நிக்குது இந்த வெறும் இலைக் கூட்டம்'' எண்டு கம்பஸ் வாத்தியும் பொருமிச்சுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் 2011 வடக்கு மாகாணம்

கட்சிகள் பெற்ற வாக்குகளும் ஆசனங்களும்

| நகர சபை-வல்வெட்டித்துறை | வாக்காளர்கள்: 5,550 அங்கத்தவர்கள்: 9 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 2,416 | 07 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 653 | 02 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 93 | - |
| சுயேச்சைக் குழு 1 | 02 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 3,394
செல்லுபடியான வாக்குகள்: 3,164

| நகர சபை-பருத்தித்துறை | வாக்காளர்கள்: 7,376 அங்கத்தவர்கள்: 9 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 3,263 | 7 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 1,107 | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 115 | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 07 | - |
| சுயேச்சைக் குழு 1 | 01 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 4,763
செல்லுபடியான வாக்குகள்: 4,493

| நகர சபை-சாவகச்சேரி | வாக்காளர்கள்: 10,987 அங்கத்தவர்கள்: 11 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 4,307 | 9 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 1,232 | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 38 | - |
| ஐக்கிய சோசலிசக் கட்சி | 28 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 5,952
செல்லுபடியான வாக்குகள்: 5,605

| பிரதேச சபை- வலி.வடக்கு | வாக்காளர்கள்: 63,224 அங்கத்தவர்கள்: 21 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 12,065 | 15 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 4,919 | 6 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 78 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 18,705
செல்லுபடியான வாக்குகள்: 17,062

| பிரதேச சபை- வலி.தென்மேற்கு | வாக்காளர்கள்: 31,022 அங்கத்தவர்கள்: 16 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 11,954 | 12 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 4,428 | 4 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 216 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 18,369
செல்லுபடியான வாக்குகள்: 16,598

| பிரதேச சபை- நெடுந்தீவு | வாக்காளர்கள்: 3,082 அங்கத்தவர்கள்: 9 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 216 | 1 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 1,609 | 8 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 83 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 3394
செல்லுபடியான வாக்குகள்: 3164

| பிரதேச சபை- நல்லூர் | வாக்காளர்கள்: 22,012 அங்கத்தவர்கள்: 12 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 10,207 | 10 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 2,238 | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 105 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 13,257
செல்லுபடியான வாக்குகள்: 12,550

| பிரதேச சபை- வலி.தெற்கு | வாக்காளர்கள்: 32,857 அங்கத்தவர்கள்: 16 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 12,895 | 13 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 4027 | 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 435 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 19,031
செல்லுபடியான வாக்குகள்: 17,357

| பிரதேச சபை- பருத்தித்துறை | வாக்காளர்கள்: 24,348 அங்கத்தவர்கள்: 9 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 8,938 | 7 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 3,022 | 2 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 133 | - |
| சுயேச்சைக் குழு 1 | 57 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 13,181
செல்லுபடியான வாக்குகள்: 12,150

| பிரதேச சபை- வலி.கிழக்கு | வாக்காளர்கள்: 46,570 அங்கத்தவர்கள்: 21 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 16,763 | 16 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 6,635 | 5 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 113 | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 27 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 25,740
செல்லுபடியான வாக்குகள்: 23,538

| பிரதேச சபை- வேலணை | வாக்காளர்கள்: 12,028 அங்கத்தவர்கள்: 11 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 2,221 | 3 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 3,973 | 8 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 39 | |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 6,947
செல்லுபடியான வாக்குகள்: 6,233

| பிரதேச சபை- காரைநகர் | வாக்காளர்கள்: 8,140 அங்கத்தவர்கள்: 5 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 1,781 | 3 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 1,667 | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 921 | 1 |
| மக்கள் விடுதலை முன்னணி | 3 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 4,705
செல்லுபடியான வாக்குகள்: 4,372

| பிரதேச சபை- வடமராட்சி தென். மேற்கு | வாக்காளர்கள்: 32,566 அங்கத்தவர்கள்: 18 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 12454 | 15 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 2522 | 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 290 | |
| சுயேச்சைக் குழு 1 | 22 | |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 16,674
செல்லுபடியான வாக்குகள்: 15,288


வாக்களிப்பு நிலையத்தில் இருந்து புறப்பாடு..


வாக்களிப்பு நிலையத்தில் இருந்து புறப்பாடு..

| பிரதேச சபை- பூநகரி | வாக்காளர்கள்: 11,301 அங்கத்தவர்கள்: 10 | |
|---|---|---|
| த[illegible]லைக் கூட்டணி | 3,814 | 6 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 3,679 | 4 |
| ஸ்ரீ[illegible]முஸ்லிம் காங்கிரஸ் | 154 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 8,404
செல்லுபடியான வாக்குகள்: 7,647

| பிரதேச சபை-பச்சிலைப்பள்ளி | வாக்காளர்கள்: 7,116 அங்கத்தவர்கள்: 8 | |
|---|---|---|
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1,637 | |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 1,158 | |
| ஐக்கிய தேசியக் கட்சி | [illegible] | |
| மக்கள் விடுதலை முன்னணி | 04 | |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்:
செல்லுபடியான வாக்குகள்:

| பிரதேச சபை- கரைச்சி | வாக்காளர்கள்: 42,800 அங்கத்தவர்கள்: 19 | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 18,609 | 15 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 6,097 | 4 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 133 | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 39 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 24,878
செல்லுபடியான வாக்குகள்: 21,588

| பிரதேச சபை- துணுக்காய் | வாக்காளர்கள்: 5227 அங்கத்தவர்கள்: 9 | |
|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 2,198 | 07 |
| பிரஜைகள் குழு | 847 | 02 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 21 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 3,401
செல்லுபடியான வாக்குகள்: 3,066

## கிழக்குத் தேர்தல் முடிவுகள்

| பிரதேச சபை- திருமலை பட்டினமும் சூழலும் | வாக்காளர்கள்: 31,791 அங்கத்தவர்கள்: 9 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 8,986 | 5 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 6,353 | 3 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,869 | 1 |
| லிபரல் கட்சி | 347 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 19,636
செல்லுபடியான வாக்குகள்: 18,735

| பிரதேச சபை- திருக்கோவில் | வாக்காளர்கள்: 18,076 அங்கத்தவர்கள்: 9 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 6,865 | 07 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 1,249 | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 810 | 01 |
| தமிழ் மக்கள் வி. புலிகள் | 497 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 9,776
செல்லுபடியான வாக்குகள்: 9,421

| பிரதேச சபை-காரைதீவு | வாக்காளர்கள்: 12,044 அங்கத்தவர்கள்: 5 | |
|---|---|---|
| தமிழரசுக் கட்சி | 4284 | 4 |
| முஸ்லிம் காங்கிரஸ் | 2364 | 1 |
| சுதந்திரக் கூட்டமைப்பு | 1134 | - |
| தமிழ் மக்கள் வி.புலிகள் | 152 | - |
| ஐக்கிய தேசியக் கட்சி | 50 | - |
| சுயேச்சைக் குழு 2 | 143 | - |

அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள்: 8,327
செல்லுபடியான வாக்குகள்: 8,128

23/07/2011 அன்று நாட்டில் உள்ள 65 உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல் நடைபெற்றது. அதில் வடக்கில் உள்ள 20 சபைகளுக்கும் வாக்களிப்பு இடம்பெற்றது. யாழ். மாவட்டத்தில் 16 சபைகளுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 3 சபைகளுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு பிரதேச சபைக்கும் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். திருகோணமலையில் 4 சபைகளுக்கும் அம்பாறையில் 2 சபைகளுக்கும் தேர்தல் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திில்லையம்பலம் செல்வராஜா



திருநெல்வேலி கிழக்கு, செங்குந்தா வீதி, கல்வியங் காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் செல்வ ராஜா நேற்று (23.07.2011) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான தில்லையம்பலம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வர்களான முத்தையா - திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் யோகா வின் பாசமிகு கணவரும் தனுஜா, விஜிஜேந்திரன் (விஜேய்கிப்ற் எம்போறியம், விஜேய் றொக்கோடிங் சென்ரர்), சுமந்திரன் (Alpha Industries (Pvt) Ltd) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவீந்திரன் (அமெரிக்கா), றேக்கா ஆகியோரின் பாசமிகு மாமனும் பதுஜனாவின் பாசமிகு பேரனும் தங்கம்மா, காலஞ் சென்றவர்களான கைலாசபிள்ளை, சோமசுந்தரம், சண்முகநாதன் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 35/2, செங்குந்தா வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு.*
*(வெள்ளைப்பிள்ளையார் கோயிலடி).*

தகவல்:
குடும்பத்தினர்.

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்




கடந்த 24.06.2011 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குலவிளக்கு

## அமரர் அண்ணாமலை பவளம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.07.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எமது குடும்பத் தலைவியின் பிரிவுத் துயர் கேட்டு உடன் வந்து உதவிய உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் இறுதிக்கிரியையில் கலந்து மலர்வளையம், மலர்கள், மலர்மாலைகள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் இரங்கல் செய்தி வெளியிட்டும் தொலைபேசிமூலமும் தபால், தந்தி மூலமும் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எம் உள்ளம் கனிந்த நன்றிகள்.

கழாவடி ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

குடும்பத்தினர்.

MY TOOLS OF THE SHAVE

## யாழ்.மாவட்டத்தில் முதன் முறையாக கணனி மயப்படுத்தப்பட்ட

முற்று முழுதான வாகனப் பரிசோதனை Auto Diagnostic Scanner

# துர்க்கா வாகனத் திருத்தகம்

இன்று 24.07.2011 ஞாயிற்றுக்கிழமை,
25.07.2011 திங்கட்கிழமை ஆகிய
இரு நாட்களும் கொழும்பிலிருந்து வருகை தந்த
My Tools நிறுவனத்தின் விசேட நிபுணர்களும் துர்க்கா
வாகனத் திருத்துனர்களும் இணைந்து முதன் முறையாக
யாழ்ப்பாணத்தில் நவீன தொழில் நுட்பத்துடன்
கூடிய Auto Diagnostic Scanner மூலம் முற்றிலும்
இலவசமாகப் பரிசோதிக்கப்படுகிறது.

இச்சந்தர்ப்பத்தை அனைத்து வாகன உரிமையாளர்களும்
பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்



☞ எமது வழமையானசேவைகள்:

- Wheel Alignment.
- Wheel Balancer.
- E.F.I. Methods Vehicle repairs.
- Fuel System Cleaner
- Full Vehicle Maintaining
- All type (Diesel or Petrol) Vehicle Mechanic
- Automatic oil changer
- Tinkering, Painting, Warring
- மற்றும் அனைத்து சேவைகளும் ஒரிடத்தில்




துர்க்கா வாகனத் திருத்தகம், இல. 16A சிவன் வீதி, திருநெல்வேலி.

உரிமையாளர் : தங்கராஜா சிறிகாந் (காந்தன்), தொலைபேசி இலக்கம் : 077 9785790

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அமெரிக்காவின் நிபந்தனையும் அரசும்

வடக்கில் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு முன்னர், இந்த நாட்டு அரசாங்கத்துக்குப் பாதகமாக அமெரிக்க நாடாளுமன்றம் (அதாவது காங்கிரஸ்) நிறைவேற்றிய ஒரு தீர்மானம் குறித்த செய்தி காலைப் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது.

வாக்காளர்களில் பலரும் அந்தச் செய்தியைப் படித்த பின்னரே வாக்களித்திருப்பர். எனினும் குறிப்பிட்ட அந்தச் செய்தி வாக்காளர் மத்தியில் ஒரு வித்தியாசமான உணர்வை ஏற்படுத்தியிருக்கும். அது வேட்பாளர்களில் ஒரு சாராருக்கு சாதகமான பலனைத் தந்திருக்கலாம்.

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறும் வரை நாட்டுக்கான உதவிகளை நிறுத்துவது என்று அமெரிக்க நாடாளுமன்றம் முடிவு செய்திருக்கிறது. ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆளும்கட்சியான ஜனநாயகக் கட்சியினர் இதற்கான பிரேரணையை காங்கிரஸின் வெளிவிவகாரக் குழுவில் சமர்ப்பித்து நிறைவேற்றி இருக்கின்றனர்.

இலங்கையில் நடைபெற்ற வன்னிப் போரின் போது - இறுதி யுத்தத்தின் போது - இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கம் விசாரணை நடத்தாவிடில் அந்த நாட்டுக்கான மனிதாபிமான உதவிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து நிதியுதவிகளையும் நிறுத்த வேண்டும்- என்பதே அந்தத் தீர்மானம் ஆகும்.

அவசரகாலச் சட்ட விதிகளை நீக்குதல், பத்திரிகைச் சுதந்திரத்தை மேம்படுத்துதல் என்பவற்றையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க நாடாளுமன்ற முடிவு - தீர்மானம் - திடீரென, இன்று நேற்று உற்பவித்தது அல்ல. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம், போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரித்து, ஆராய்ந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்க நிபுணர்குழு நியமித்த குறுகிய காலத்திலேயே, அமெரிக்க அரசு, தான் இப்போது நிறைவேற்றி உள்ள அம்சங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து இலங்கை அவற்றில் நாட்டம் காட்டிப் பதிலளிக்க வேண்டும்; பொறுப்புக்கூற வேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்தி வந்தது.

ஆனால் இலங்கை அரசு மிகுந்த விம்புத் தனத்துடன், அந்தக் கோரிக்கையைப் புறமொதுக்கி வந்தது. மொத்தத்தில் மேற்சொன்ன குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்துவதற்குப் பின்னடித்து வந்தது; மறுத்து வந்தது. அமெரிக்க மற்றும் வெளிநாடுகளின் தாளத்துக்கு ஆடுவதற்குத் தான் தயார் இல்லை என்று மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்தது.

இத்தனைக்கும், போர்க்குற்றங்களை இலங்கை அரசு இழைத்தது என்ற குற்றச்சாட்டுகளை, வெளிநாட்டு நீதி விசாரணை நிபுணர்கள் அடங்கிய நீதிவிசாரணைக்குழு ஒன்றை நியமித்துப் பொறுப்புக் கூற வேண்டும் என்று அமெரிக்கத் தரப்பு பல தடவைகள் வலியுறுத்தி வந்தது. ஆகக் கடைசியாக, கொழும்புக்கு வந்திருந்த தெற்கு மற்றும் மத்திய ஆசிய வட்டகைக்கான அமெரிக்க உதவி அமைச்சர் றொபேர்ட் ஒ பிளேக் போர்க்குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார். இலங்கை அரசு தான் நியமித்துள்ள நல்லிணக்க ஆணைக்குழுவை வைத்துப் போக்குக் காட்ட முடியாது என்றும் அதனை ஒருபுறம் வைத்துவிட்டு, சர்வதேச நீதியாளர்கள் அடங்கிய விசாரணைக்குழுவை நியமிக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார்.

இலங்கை அவ்வாறு செய்வதற்குப் பின்னடித்தால் சுதந்திரமான சர்வதேச நிபுணர்குழு ஒன்றை நியமித்து உண்மையை வெளிக் கொண்டு வர வேண்டிய நிர்ப்பந்தம் அல்லது கட்டாயம் உருவாகும் என்று எச்சரிக்கைத் தொனியில் அப்போது கூறியிருந்தார்.

அதன் மறுவடிவமே அமெரிக்கக் காங்கிரஸின் (நாடாளுமன்றில்) வெளிவிவகாரக் குழுவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் என்று கொள்ளலாம். காங்கிரஸின் தீர்மானத்தைப் பொருட்படுத்தாமல், ரஷ்யாவையும் சீனாவையும் தனது இரு மருங்கிலும் அமர்த்திக் கொள்வது என்ற புதிய போக்குகளை அல்லது தந்திரோபாயங்களை கையாண்டு மேற்கு உலகத்தைப் புறந்தள்ள மஹிந்த அரசு நினைத்தால், போர்க்குற்றங்களை மறுப்பதால் அல்லது மறைப்பதால் ஏற்படக் கூடிய பாதிப்புகளை விட நாட்டுக்குப் பெரும் பாதக நிலையை வலிந்து தேடுவதாகவே அமையும்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் அடங்கிய ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்குப் பதிலளிப்பதற்கு, எதிர்க்கட்சித் தலைவர் ரணிலை பான் கீ - மூனிடம் 'விசேட' தூதனுப்பிய ஜனாதிபதி -

அமெரிக்க அரசிடம் தூது அனுப்புவதற்கு இனி இன்னொரு அரசியல் ஜாம்பவானை கண்டுபிடிக்க நேரிடும்.

மேற்குலகின் தலையாரியாக இடம்பிடித்துவிட்ட அமெரிக்காவுடன் நேருக்குநேர் மோதுவதற்கு இலங்கை அரசு தீர்மானம் செய்தால் இப்போதுள்ள போர்க்குற்றம் என்ற பொறியை விட அதிக சக்தி வாய்ந்த காந்த வலையில் சிக்குப்பட நேரிடும் என்பதனை அரசின் ஆலோசகர்களும் நிபுணர்களும் சுட்டிக்காட்டுவார்களோ என்னவோ...?

அமெரிக்க நாடாளுமன்றம் வெறும் சிபார்சையோ அல்லது அறிக்கையையோ வெளிப்படுத்தவில்லை. இலங்கைக்கு வழங்கும் உதவிகளை நிறுத்தப் போவதாக எச்சரித்திருக்கிறது. ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதும் அதன் கடன் வழங்குவதற்கான நிபந்தனைகளில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளது. மக்களின் தகவல் அறியும் உரிமையை வழங்குவதற்கு நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட பிரேரணை என்ற மொட்டையே நஞ்சூற்றிக் கருக்கிய அரசு, அமெரிக்கா வற்புறுத்தும் ஊடக சுதந்திரத்தைப் பூரணமாக வழங்குவதற்கு முன்வருமா என்பது சந்தேகத்துக்குரிய மற்றொரு விவகாரம்.

மொத்தத்தில் அமெரிக்காவின் எச்சரிக்கையை, நிபந்தனையை அரசு அலட்சியப்படுத்துமா அல்லது இனியும் வீறாப்புப் பேசுமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்ப்போமே!

# பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராக 2,691 உரிமை மீறல் முறைப்பாடுகள்

## மனித உரிமை ஆணைக் குழுவில் பதிவு

கொழும்பு, ஜூலை 24

மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பாக 2009 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மனிதஉரிமைகள் ஆணைக் குழுவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளுள் பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராகவே அதிகமானவை கிடைத்துள்ளன.

இந்தக் காலப்பகுதியில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பாக 11 ஆயிரத்து 732 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அவற்றுள் 2 ஆயிரத்து 691 முறைப்பாடுகள் பொலிஸ் திணைக்களத்துக்கு எதிரானவை.

மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பாக 2009 ஆம் ஆண்டில் 5 ஆயிரத்து 454 முறைப்பாடுகளும், 2010 ஆம் ஆண்டில் 4 ஆயிரத்து 205 முறைப்பாடுகளும் 2011 ஆம் ஆண்டின் ஜூன் மாதம் வரை 2 ஆயிரத்து 73 முறைப்பாடுகளும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளுள் இரண்டாவது இடத்தைப் பெற்றிருப்பது கல்வித் திணைக்களம் ஆகும். அதன் எண்ணிக்கை 253 ஆகும்.

ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளில் 2 ஆயிரத்து 329 முறைப்பாடுகளுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனிடையே, மனித உரிமைகள் மீறல்களுடன் சம்பந்தப்படாத சுமார் ஆயிரத்து 500 வரையான முறைப்பாடுகளும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கிடைத்துள்ளன.

கடந்த 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வைத்து ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகரவினால் எழுப்பப்பட்ட வினாவுக்குப் பதிலளித்த போதே அமைச்சர் தினேஷ் குணவர்தன இந்த விவரங்களை வெளியிட்டார்.

(த-22)

# சீனத் தூதுவரை அவமானப் படுத்திய முக்கிய அமைச்சு ஒன்றின் செயலாளர்

## அரச உயர் மட்டத்தில் விசாரணை

கொழும்பு, ஜூலை 24

அரசின் முக்கிய அமைச்சொன்றின் செயலாளர் தம்மை அவமானப்படுத்தியதாக இலங்கையிலுள்ள சீனத் தூதுவர் திருமதி யுன்க் க்ஷிபுன் அரசுக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

அமைச்சின் செயலாளர் சீனத் தூதுவரை அவமானப்படுத்தியமைக்கான காரணம் என்ன என்று தெளிவாகத் தெரிவிக்கப்படாத போதிலும் இதனால் தாம் கடும் மனத் தாக்கத்துக்கு உள்ளானதாக தூதுவர் அரசின் உயர்மட்டங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அந்த முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தகாலத்தில் இலங்கைக்குப் பெருமளவில் உதவிகளை வழங்கியுள்ள சீனா இன்றும் இலங்கைக்குப் பெரிய அளவிலான கடன் மற்றும் நிதிக்கொடுப்பனவுகளை வழங்கிவரும் நாடாகும்.

சர்வதேசத்திலிருந்து போர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும் சீனா இலங்கைக்குப் பக்கபலமாகக் கைகொடுத்து உதவி வருகிறது.

இத்தகைய நட்பு நாடொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தூதுவர் ஒருவரை அவமானப்படுத்திய சம்பவம் தொடர்பாக அரச உயர் மட்டங்கள் குறிப்பிட்ட செயலாளரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (த-22)

# சிவப்பு சிமெந்து கலந்த அரிசி 'தவிட்டரிசி' என விற்பனைக்கு!

கொழும்பு, ஜூலை 24

தவிட்டரிசி எனக் கூறப்படும் சிவப்பு சிமெந்து கலந்த அரிசி நாடு முழுவதும் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து நுகர்வோர் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அரிசி ஆலை உரிமையாளர்களின் இந்த வலையில் சிக்கவேண்டாம் என்று வர்த்தகர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏறாவூரிலுள்ள அரிசி ஆலையொன்றில் தவிட்டரிசி என்ற பெயரில் சிவப்புச் சிமெந்து கலந்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஒன்பது மூடை அரிசி கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த அரிசி ஆலை உரிமையாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டார் என ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி எம். எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வர்த்தக நிலையங்களிலும், உணவு உற்பத்தித் தொழிலகங்களிலும் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையின் போது பாவனைக்குதவாத உணவு பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஒ)

# மன்மோகனின் அமைச்சுப் பதவியையே நானும் வகிக்கிறேன் என்கிறார் மேர்வின்

கொழும்பு, ஜூலை 24

இந்தியாவில் பிரதமர் மன்மோகன் சிங் வகிக்கின்ற அமைச்சுப் பதவியையே நானும் வகிக்கிறேன். இவ்வாறு மக்கள் தொடர்பு மற்றும் பொதுசன அலுவல்கள் அமைச்சர் மேர்வின் சில்வா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேர்வின் மேற் கண்டவாறு கூறினார்.

2011 ஆம் ஆண்டு 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக மக்கள் தொடர்பு மற்றும் பொதுசன அலுவல்கள் அமைச்சு செலவிட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்று சுனில் ஹந்துன்நெத்தி கேள்வி எழுப்பினார்.

இந்தக்கண்காட்சிக்கு இரண்டு லட்சத்து 84 ஆயிரத்து 500 ரூபா செலவிடப்பட்டதாக அமைச்சர் பதிலளித்தார்.

இதனால் ஆற்றப்பட்ட பணிகளை விவரிக்குமாறு சுனில் ஹந்துன்நெத்தி எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதிலளிக்க மறுத்துவிட்டார். (ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Knowledge Universe

**Centre for International English**

**IELTS**
VIP Coaching Centre

**KU Centre Opens**
Monday-Friday
9 AM - 5 PM

Knowledge Universe Sri Lanka

You can be a professional/ Student/Just a self starter ,Learnt at KU or somewhere else ,now you can Register for your next IELTS exam locally at KU-Jaffna.

**IELTS** REGISTRATION CENTRE in cooperation with BRITISH COUNCIL

**KU offers IELTS Preparation Classes with modern and our own developed high impact teaching methodology

ESOL

**No 75,Temple Road,Jaffna. Hot line:0777302882**
**For more info : www.kugroup.info**

## மரண அறிவித்தல்

### அருட் சகோதரி மேரி பிளசிடா யோசப் (தி.கு)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்.திருக் குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி பிளசிடா யோசப் (22.07.2011) வெள்ளிக்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின் பூதவுடல், இன்று (24.07.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் இல்லத்தில் நடைபெறும் நல்லடக்க ஆராதனையின் பின்னர் இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*121, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
அருட்சகோதரி யோலண்ட், மத்தியாஸ்
மாகாணத்தலைவி.

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் சதய நட்சத்திரம் 1982 இல் பிறந்த இந்தியாவில் கணினிப் பொறியியலாளராக (Soft ware Engineer Google ) பணி புரியும் எவ்வித தீய பழக்கமும் அற்ற மகனுக்கு அழகிய சிவந்த நிறமுடைய நற்பண்புகள் நிறைந்த பட்டதாரி மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.

விளம்பர இல: 4164, மே/ப உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

யாழ். K.K.S வீதிக்கு அருகில் புதிதாக கட்டப்பட்ட இரண்டு மாடிகளைக் கொண்ட வீடு அனைத்துத் தளபாட வசதிகளுடனும் உள்ளது.

A/C Hall, A/C Large 2 Bed Rooms, Attached Bath Rooms, Western Toilets, Servants Toilets, Large Car parking

மொத்தமாக
7 அறைகளைக் கொண்டது.
நிறுவனங்கள் மட்டும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: இல.88, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0776487264

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு கலைவாணி வீதியில் 6.3 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773658485

## தேவை

வெள்ளவத்தையில் புதிதாக ஆரம்பிக்க உள்ள உணவகத்துக்கு சமையல்,றொட்டி போடுபவர்கள், கிளீனர்கள், சப்ளையர்கள், ஆட்டோ றைவர்கள் உடனடியாகத் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளலாம்.
0779226588, 0112501327 (தங்குமிடம், சாப்பாடு இலவசம்) பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.பல்கலைக்கழக உத்தியோகத்தர் ஒருவரின்சிறியகுடும்பத்துக்குகொக்குவில், திருநெல்வேலி பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:
0777834603

## வர்த்தகப் பெருமக்களே...

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**தொடர்புகளுக்கு:-**
**0729994777**

## BIT CORNER

நாளை முதல் Professional ICT Education

கொழும்பு பல்கலைகழகத்தின்

**BIT - SEMESTER 2**

பரீட்சைக்கான
இலவச மீட்டற்பயிற்சி வகுப்புக்கள்




*25.07.2011 தொடக்கம் திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி ஆகிய ஐந்து நாட்களும் காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணிவரைவகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பரீட்சைக்கான model வினாக்களும் கடந்தகால பரீட்சை வினாக்களும் தகுந்த விளக்கத்துடன் செய்துவிடப்படும்.*

வெளிமாணவர்கள் எவரும் பங்குபெறலாம்.

NO 14, PALALY ROAD
THIRUNELVELY MARKET JUNCTION
JAFFNA. *077 6621745*

## ஹீரோ, கென்டன் காட்சியறை



HERO CYCLES
KENTON

சிறியோர் முதல் பெரியோர் வரையானஅனைவரினதும்
சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்
மற்றும் புதிய லேடீஸ் பைக் என்பனவற்றை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்



பலவர்ணங்களில்
புதிய லேடீஸ் சைக்கிள்

ஒரிஜினல் ஹீரோ
லேடீஸ் சைக்கிள்களும்
ஆண்கள் சைக்கிள்களும்
பெற்றுக்கொள்ளலாம்.





**ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்**
**ஸ்ரார் ரேடர்ஸ்**
இல.258, 260, மானிப்பாய் வீதி.
ஐந்துசந்தி. யாழ்ப்பாணம். தொ.பே.: 021 4921672

(49)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவில்லும்

## அமரர் ஆறுமுகம் பாலசுப்பிரமணியம்

மலர்வு :
16.01.1941

உதிர்வு :
23.06.2011

கடந்த 23.06.2011 அன்று கனடாவில் இறைபதமடைந்த எமது
அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு நேரிலும்
தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்
மற்றும் பல்வேறு உதவிகள் புரிந்து எமது
துயரங்களில் தோள் கொடுத்த
உறவினர்களுக்கும் அன்புள்ளங்களுக்கும் மனமார்ந்த
நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:

மோகன்
(Simcoe Auto Group Owner Sutton)
கனடா, தொ.பே: +16477090285
பத்மா (மகள்) கனடா
தொ.பே: +14168465657
செல்லிடப் பேசி: +14167248118

பத்மன் (மகன்) கனடா
தொ.பே: +16472800889
ராஜன் (மகன்) ஜேர்மனி
தொ.பே: +4915203551696
சீலன் - ஜேர்மனி
தொ.பே: +4971191245000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நெடுந்தீவு – குறிகாட்டுவான் இடையே

# 'வடதாரகை' படகுச்சேவை நேற்று முதல் ஆரம்பமானது

யாழ்ப்பாணம்,ஜூலை 24

நெடுந்தீவு - குறிகாட்டுவான் கடல் போக்குவரத்துச்சேவையில் நேற்று சனிக்கிழமை முதல் புதிய படகான வடதாரகை - II இணைந்துள்ளது. இது துறைமுகத்துக்கு வெளியில் நங்கூரமிட்டு நிற்கும். அங்கிருந்து பயணிகளை சிறிய படகில் ஏற்றி கரை சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

'வடதாரகை' - II நெடுந்தீவுத் துறைமுகத்தினுள் செல்லக் முடியாத வகையில் துறைமுகம் ஆழம் குறைந்து உள்ளமையால் அதனை ஆழமாக்கும் வரை இந்தப் படகை சேவையில் ஈடுபடுத்துவதில்லை என முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஏற்கனவே புதிய படகுச் சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு இடம் பெற்ற போதும் சுமார் மூன்று மாதங்கள்வரை இந்தப் புதிய படகு குறிகாட்டுவானிலும் ஊர்காவற்றுறையிலும் மாறிமாறி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தற்போது துறைமுகம் ஆழமாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தப் படகைச் சேவையில் ஈடுபடுத்தி மற்றும் ஒரு படகின் உதவியுடன் பயணிகளைச் கரை சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்தச் செயற்பாட்டை முன்னரேயே செய்திருக்கலாம் எனப் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-7)

### பாதிக்கப்பட்ட மக்களுக்காக

# வரணியில் 5 வீடுகளை படையினர் அமைக்கின்றனர்

வரணி,ஜூலை 24

வரணி வடக்குக் கிராம அலுவலர் பிரிவில் அரசின் நிதி உதவியுடன் பாதுகாப்புப் படையினரால் 5 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி பிரிவில் கறுக்காய் மற்றும் குறண்டிபிட்டி பிரிவுகளில் வறுமைக்கோடு, இடம்பெயர்வு ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு இந்த வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சிமெந்துக் கற்களால் கட்டப்படும் இந்த வீடுகள் சுமார் 3.5 லட்சம் பெறுமதியானவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

கட்டுமானத்துக்கான மரங்கள் குருநாகலை பிரதேசத்தில் இருந்து கொண்டுவரப்பட்டதாகவும் கல்நார்க் கூரைத் தகடுகள் பொருத்தப்பட்டுள்ளதுடன் விரைவில் இந்த வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் படையினர் தெரிவித்தனர். (த-122)

## நெடுந்தீவுப் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

நெடுந்தீவு, ஜூலை 24

நெடுந்தீவு மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்க கடற்படையினர் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

இதற்கென கடல் நீரை நன்னீராக்கும் இரண்டு பெரிய இயந்திரங்களைத் தருவித்து நாளொன்றுக்கு 30 ஆயிரம் லீற்றர் நீரை விநியோகிக்க நெடுந்தீவுக் கடற்படையினர் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளனர்.

இந்தத் திட்டம் பலாலியில் உள்ள அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் குறித்துப் பரிசீலிக்கப்பட்டு ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அங்கீகாரம் கிடைக்கப் பெற்றதும் அதற்கான வேலைகள் தாமதமின்றி ஆரம்பிக்கப்படவுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர். (த-111)

# விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு பல்வேறு தரப்பினரதும் உதவிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தால் கைதடியிலுள்ள தொழிற்பூங்காவில் பராமரிக்கப்பட்டுவரும் விழிப்புலனற்றோரின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக நலன் விரும்பிகள் சிலர் கடந்த சில நாள்களாக உதவிகள் வழங்கி வருவதாக யாழ். விழிப்புலனற்றோர் சங்க நிர்வாகிகள் மகிழச்சி தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தனது சொந்த நிதியிலிருந்து ரூபா பத்தாயிரத்தை வழங்கியுள்ளார்.

ஊரெழு கிழக்கு, நாவலம்பதி இளைஞர்கள் சிலர் 20 பெட்டி பிஸ்கட்டையும், பதினோராயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களையும் வழங்கியுள்ளனர்.

பிரபல தொழிலதிபரும் 'ராசா டீசல் என்ஜினியறிங்' உரிமையாளருமாகிய இராசா வாமதேவன் தொழிற்பூங்காவில் தங்கியுள்ளோரின் பொழுது போக்குக்காக 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை வழங்கியதுடன் மாதந்தோறும் உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார்.



டென்மார்க்கில் வசிக்கும் கைதடி தெற்கைச் சேர்ந்த பூ.தர்மலிங்கம் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான பிளாஸ் ரிக் கதிரைகள், மேசை என்பனவற்றை வழங்கி உதவியதுடன் வெளிநாடுகளில் வசிக்கும் ஏனைய தமிழ் உறவுகளைக் கொண்டு மேலும் பல உதவிகளைச் செய்வேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இப்படியாக தமது அடிப்படைத் தேவைகளை நிவர்த்தி செய்ய முன்வரும் இந்த உள்ளங்களுக்கு தொழிற்பூங்காவில் தங்கி இருக்கும் தாம் நன்றிகளையும் மனமகிழ்வுடன் கூறுகின்றோம் எனவும் அவர் கள் தெரிவிக்கின்றனர். (த-288)

# காரைநகர் பிரதேச சபைக்கு போதிய ஆளணி இல்லை

யாழ்ப்பாணம், ஜூலை 24

காரைநகர் பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு போதிய ஆளணியினரோ வாகன வசதியோ தம்மிடம் இல்லை எனக் காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனிடம் தெரிவித்துள்ளார்.

காரைநகரில் பாதைகளை சீர் செய்தல், துப்பரவு பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச சபைச் செயலாளரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் எடுத்துரைத்த போது பிரதேச சபை செயலாளரினால் மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபைக்கான போதிய ஆளணியினர் நியமிக்கப்படவில்லை எனவும், வளப்பற்றாக்குறை காணப்படுவதாகவும், வாகன வசதிகள் எதுவும் இல்லை எனவும் பிரதேச சபைச் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரனுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து காரைநகர் பிரதேச சபைக்குப் போதிய ஆளணியினரையும், வாகன வசதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி மேற்கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (த-60)

## கால்நடைகளுக்குத் தடுப்பூசி ஏற்றல்

கொடிகாமம், ஜூலை 24

வரணி பிரதேசம் , மிருசுவில் பிரதேசம் ஆகிய இடங்களில் தற்சமயம் கால் நடைகளுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி கால்நடை உத்தியோகத்தர் அலுவலக அனுசரணையுடன் இந்த நடவடிக்கை இடம்பெறுகின்றது.

கோடை காலத்தில் கால்நடைகளுக்கு கால்வாய் நோய், அடைப்பான் போன்ற நோய்களுக்கு இரண்டு வகையான இந்தத் தடுப்பூசிகள் ஏற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-122)

## வடமாகாணத் திணைக்களங்களில் பதவி வெற்றிட விவரங்கள் திரட்டல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

கூட்டுறவு பரிசோதகர்கள், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள், அபிவிருத்தி உதவியாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள் உட்பட பட்டதாரி வெற்றிடங்களுக்கு ஆள்சேர்ப்பு விரைவில் இடம்பெறவுள்ளது.

எனவே வடமாகாணத்தில் உள்ள சகல திணைக்களங்களின் தலைவர்கள், அமைச்சு செயலாளர்கள் மேற்படி பதவிகளில் உள்ளவெற்றிடங்கள் தொடர்பான விவரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண பொது நிர்வாகப் பிரதி பிரதம செயலாளர் கேட்டுள்ளார்.

அத்துடன் பின் தங்கிய பிரதேசங்களில் நீண்ட காலமாக வேலை செய்தவர்களின் விவரங்களையும், கஷ்டப் பிரதேசத்தில் இருந்து வசதியான பிரதேசத்துக்கு இடமாற்றம் பெற விரும்பும் அலுவலர்களின் பெயர் விவரங்களையும் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அவ்வாறு வசதியான பிரதேசங்களில் நியமிக்கப்படுபவர்கள் தொடர்ந்து 10 வருடங்கள் கடமையாற்ற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-302)

## தண்ணீர் தேடி அலையும் கால்நடைகள்

வரணி, ஜூலை 24

மேய்ச்சலுக்குச் செல்லும் கால்நடைகள் தண்ணீர் குடிப்பதற்காக நீர் நிலைகளைத் தேடி அலையும் நிலை வரணிப் பிரதேசத்தில் பரவலாகக் காணப்படுகின்றது.

கடும் கோடை நீடிப்பதாலும் மழை பலமாதங்களாக பெய்யாததாலும் சிறிய நீர் நிலைகள் நீர் வற்றி உள்ளதுடன் அவை சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றன. இந்த நிலையில் கால்நடைகள் தண்ணீர் குடிக்க குளம் குட்டைகளைத் தேடி அலைவதை அவதானிக்க முடிகின்றது. (த-122)

# கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்கு பணியாளர்களை நியமிப்பதில் அசமந்தம்

### கல்லூரிச் செயல்பாடுகளில் பின்னடைவு

வண்ணை , ஜூலை 24

யாழ்ப்பாணத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரிக்கு புதிய நிரந்தர ஊழியர் நியமனங்களை வழங்கக் கொழும்பு தலைமையகம் பின்னடிப்பதாக தெரியவருகிறது.

ஜப்பான் ஜெக்கர் நிறுவனத்தின் 25 மில்லியன் நிதியுதவியில் கல்லூரிக்கு புதிய இரண்டு மாடிக்கட்டடம் துரிதமாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாத இறுதியில் கல்லூரி புதிய கட்டடத்துக்கு மாற்றப்படவுள்ளது.

இந்த நிலையில் உதவிப் பணிப்பாளரால் ஆளணி கோரப்பட்டதற்கு மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை கல்லூரிகளில் இருந்து இருவரை இடமாற்றம் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1982ஆம் ஆண்டுக்குப் பிற்பாடு யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கல்லூரிக்குப் புதிதாக நியமனம் செய்யப்படாத நிலைமை இருந்து வருகிறது.

திறக்கப்படவுள்ள கல்லூரிக்காக 12 ஊழியர்களை நியமிக்குமாறு உதவிப் பணிப்பாளரால் கோரிக்கை விடப்பட்ட போதே இவ்வாறு இருவரை தலைமைக் காரியாலயம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

போதனாசிரியர்-2, லிகிதர்-1, கணக்காளர்-1, களஞ்சியப் பொறுப்பாளர்-1, கடலோடிகள் (மாலுமிகள்)-2, பகலிரவு காவலாளிகள்-2, படகோட்டி-1, சிற்றூழியர்கள்-2 ஆகியோரையே நியமனம் செய்யுமாறு உதவிப் பணிப்பாளர் கோரி இருந்தார்.

இதனால் எதிர்காலத்தில் கல்லூரிச் செயற்பாடுகளை திறம்பட முன்னெடுக்க முடியாத நிலை ஏற்படும் எனக் கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன. (த-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை பல நோ. கூ.சங்கம்(வ.து)
### பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமை உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1) பதவி : சாரதி** — **வெற்றிடம் 02**
சம்பள குறியீட்டு இல : 312/13
சம்பள அளவுத் திட்டம் : 9950 - 11700
85x10-90x10

**தகைமைகள்**
அ) 5ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் பஸ் வண்டி/லொறி சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

**2) பதவி : வாகனச் சுத்திகரிப்பாளர்** — **வெற்றிடம் 02**
சம்பள குறியீட்டு இல : 314/16
சம்பள அளவுத்திட்டம் : 9200-10650
70x10-75x10

**தகைமைகள்**
(அ) கூட்டுறவுச் சங்கப் பணியாளர் 17 ஆவது சம்பளத் திட்ட பதவி ஒன்றில் ஒரு (01) வருடத்துக்குக் குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) 5ஆம் வகுப்பு கல்விச் சான்றிதழும் நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருத்தலும்

வயதெல்லை 18-45
கூட்டுறவுப் பணியாளருக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
விண்ணப்பப் படிவத்தை வேலைநாள்களில் சங்கத் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை 01.08.2011 ஆம் திகதிக்கு முன்னதாக 'பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம், தெல்லிப்பழை' என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்கவும்.
*குறிப்பு:*
விண்ணப்பதாரர் சங்கப் பணியாளரானால் கடமையாற்றும் சங்கத்தினூடாக விண்ணப்பிக்கவேண்டும்.

பொதுமுகாமையாளர்,
22.07.2011 தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம், தெல்லிப்பழை

## ஓம் சக்தி ஜோதிட நிலையம்

ஜோதிடர் - நரேந்திரன் சுவாமி
தொ.பே. 0779759393
0756794959
இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள சுவாமி அவர்கள் ஜாதகம், கைரேகை, கம்பியூட்டர், ஜோதிடம் என்பன நல்ல முறையில் தீர்த்து வைப்பார். அமுல் கிறீம் ஹவுஸ் அன் பேக்கரி, இல.452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு முன்னாலும் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகிலும் கீழ்மாடி, மேல் மாடி வீடு விற்பனைக்குண்டு.
சுந்தரம் ஞானசுந்தரம்'இல.28, முருகமூர்த்தி வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P:0777030234,0217901059

## அறைகள் வாடகைக்கு

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு மிக அருகில் நான்கு அறைகளைக் கொண்ட மேல்மாடி வீடு சகல வசதிகளுடன் மருத்துவ பீட மாணவர்களுக்கு மட்டும் வாடகைக்கு வழங்கப்படும்.
தொடர்பு:0718565662

## காணி விற்பனைக்கு

ஓட்டுமடச் சந்திக்கு அருகில் மானிப்பாய் வீதியில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் 17½ பரப்பு நெற்காணி விற்பனைக்கு உண்டு. தேவைக்கேற்பப் பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு: 0774030493, 0217903585

## விற்பனைக்கு!

ஐந்து பரப்பு சதுரக்காணி கொக்குவில் மேற்கில் விற்பனைக்குண்டு. காணி அமைந்துள்ள இடம் குளப்பிட்டிச் சந்தியிலிருந்து 1kmற்குள் ஆனைக்கோட்டை றோட்டிலிருந்து 50 மீற்றரில் மண்டைதின்னி நோக்கி போகும் றோட்டில் அமைந்துள்ளது.
தொடர்பு: கு.நவராஜசிங்கம் (குலம்), நித்தியலட்சுமி மரக்காலை, நட்டாதெரு சந்தி, 481கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்.
T.P:0214925337


## STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY

UK → அதிகூடிய கட்டணம் - ரூபா. 150,000/- , Student Visitor Visa
USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0
CANADA → IELTS, Sponsor தேவையில்லை. No age limit
POLAND → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
GERMANY → ஜேர்மன் மொழி தெரியவேண்டிய அவசியமில்லை +With / Without IELTS
CYPRUS → பகுதி நேர தொழில் வாய்ப்பு, விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
Next Intake: Aug.2011
UKRAINE - Aerospace ,Aeronautical Eng, Bio Medical Science, Tele communication ,Bio Medical Science at lower cost
பஸ்னா - 0778 438403, 0771000044, அல்சரா - 0778339943
READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

## SIBM இன் 100% விசா உத்தரவாதத்துடனான

போலந்து Student Visa (Minimum O/L)
Cyprus Student Visa (Minimum A/L 3 Passes)
UK Student Visa - 750,000/-
"September, October intake"
Part time Job Guarantee
SIBM
Hotline : 0777713542
83/1, Penni Quick Lane, Wellawatta,
Tel: 0117546540, 0117546542


## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் கனகம்மா

வேலணையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகம்மா 22.07.2011 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ் சென்றவர்களான காசிப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற தம்பையா தம்பதியரின் அருமை மருமகளும் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் மாணிக்கராஜா, காலஞ்சென்ற சிவராஜா (உரிமையாளர் -மல்லிகா மிக்ஷர்) மற்றும் செல்வராணி, மல்லிகாதேவி, நித்தியலக்ஷ்மி, நவரட்ணராஜா ஆகியோரின் அன்புத் தாயும் அன்னலக்ஷ்மி, தேவிகாராணி, காலஞ்சென்ற குலசிங்கம் ( உரிமையாளர்-குலம் கிறீம் ஹவுஸ்) மற்றும் மனோகரன், ராதா ஆகியோரின் மாமியும் முகுந்தராஜா, மோகராஜா, பிரிதிவராஜா, மைதிலி, மோகனப் பிரகாஸ், தெய்வீகராஜா, சிவாஜினி, கஸ்தூரி, லக்ஷி, துளசி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் பிரதீப், ஷாலினி, திணேஸ், சாரு, தரண், தாரிகா, தனேஷ், ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (25.07.2011)திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"குலம் கிறீம் ஹவுஸ்"*
*ஆலடிச் சந்தி, மானிப்பாய்.* (6136)

தகவல்
குடும்பத்தினர்.

## பதவி வெற்றிடம்
### வெளிநாட்டில் உள்ள கோயில் ஒன்றுக்கு ஓதுவார் தேவை (ஆண்)

**கடமைகளும் பொறுப்புக்களும்:**
ஆலயத்தில் பூஜை நேரங்களிலும் விழாக்காலங்களின் போதும் திருமுறை ஓதுவதுடன் மாலை நேரங்களில் பாராயணம் செய்தல் வேண்டும். மேலும் மிகுதி நேரங்களில் ஆலயத்தின் அனைத்துக் கடமைகளிலும் பங்கேற்கக் கூடியவராகவும் இருக்க வேண்டும்.
**கல்வித்தகைமை**
திருமுறைப் பண்ணிசை அல்லது கர்நாடக சங்கீதத்தில் பட்டம் அல்லது வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் சான்றிதழ் அல்லது இந்தியப் பல்கலைக்கழகங்கள் ஒன்றில் கர்நாடக சங்கீதத்தில் அல்லது திருமுறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
**ஏனைய தகைமைகள்:**
ஆசார சீலராகவும், ஒழுக்கமுடையவராகவும் இருத்தல் அவசியம்.
**வயது**
31.07.2011 அன்று 30 வயதைப் பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்பதாரர் தங்களது சுய விவரங்களை தங்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் பூர்த்தி செய்து தங்களது அனுபவங்களையும் குறிப்பிட்டு 06.08.2011க்கு முன்னர் "இணைப்பாளர், 281/11, கண்டி வீதி, யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


## நிலையான வைப்பு (5 வருடங்களில் முதிர்ச்சி)
## 13.00% வ.ஒ (வ.கி.வீ 10.53%)

ஆகக் குறைந்த நிலையான வைப்பு ரூ.5000

| காலம் | மாதாந்தம் | | முதிர்வின் போது | |
|---|---|---|---|---|
| மாதம் | வருடாந்த வட்டி வீதம் | வருடாந்த கூட்டு வட்டி வீதம் | வருடாந்த வட்டி வீதம் | வருடாந்த கூட்டு வட்டி வீதம் |
| 1 மாதம் | ---- | ---- | 9.00% | 9.38% |
| 3 மாதம் | 9.50% | 9.92% | 10.50% | 10.92% |
| 6 மாதம் | 10.00% | 10.47% | 10.75% | 11.04% |
| 1ஆம் வருடம் | 10.75% | 11.30% | 11.50% | 11.50% |
| 2ஆம் வருடம் | 10.75% | 11.30% | 12.50% | 11.80% |
| 3ஆம் வருடம் | 10.75% | 11.30% | 13.00% | 11.58% |
| 4ஆம் வருடம் | 10.75% | 11.30% | 13.00% | 11.04% |
| 5ஆம் வருடம் | 10.75% | 11.30% | 13.00% | 10.53% |

ISO 9001.2008 தரத்தில் தர முகாமைத்துவ ஒழுங்கமைப்பால் உத்தரவாதமளிக்கப்பட்ட இலங்கையின் முதல் நிதி நிறுவனமாகும்.

மனதில் அமைதியை எற்படுத்துவது
பாதுகாப்பான கைகளில்
நீங்கள் இருக்கிறீர்கள் என்று அறியும்போதே

021 5671813
இல.89,ஸ்டான்லி வீதி,யாழ்ப்பாணம்.
ஒரு நீண்டகால முதலீட்டுத்தராதரம் RAM BBB/P2
18 ஜுலை 1956ல் ஒருங்கிணைக்கப்பட்டது.
நிதி நிறுவணச்சட்டம் 1988 இல 78ன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபையில் பதிவு செய்யப்பட்டது.
Since 1956
Alliance Finance COMPANY PLC
Built on Trust. Powered by Innovation.
கம்பனி இல.PQ93 www.alliancefinance.lk

தலைமை: அலுவகம் அலயன்ஸ் ஹவுஸ்,84,வாட் பிளேஸ்,கொழும்பு 7,இலங்கை. தொ:பேசி 011-2673673 (ext. 128/281/282/283)/ பக்ஸ்: 011-2691090, மின்னஞ்சல்: deposit@alliancefinance.lk
கிளைகள்: கம்ஹா,இரத்தினபுரி,காலி,யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு,திருகோணமலை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடபகுதியில் புற்றுநோய்க்கான சிகிச்சை வசதிகளும் "Trail" மனித நடை பயணமும்

டாக்டர் என்.ஜெயக்குமாரன்.
புற்றுநோய் வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

இலங்கையில் புற்றுநோய்க்கான சிகிச்சைப் பிரிவு முதன் முதலாக கொழும்பு மகரகம பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து புற்றுநோயால் பாதிக்கப்பட்டோர் அங்கேயே சென்று சிகிச்சை பெற்று வந்தனர். தற்போது இவ் வைத்தியசாலை தேசிய புற்றுநோய் சிகிச்சை நிலையமாகத் திகழ்கின்றது.

மக்களின் வாழ்வுக் கால அதிகரிப்புடன் கூடிய புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் ஆய்வுகளின் அடிப்படையில் இலங்கையில் ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு புற்று நோய் சிகிச்சைப் பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணக்கரு உருவாக்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழக நோய் கூற்றியல் பேராசிரியர் பானபொக்கே அவர்களின் 1974 ஆம் ஆண்டு ஆய்வுகளின் அடிப்படையில் வடபகுதியில் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் அடிப்படையிலும் இப் பகுதி மக்களின் முயற்சியினாலும் வடபகுதியில் தெல்லிப்பழையில் ஓர் புற்று நோய் சிகிச்சை நிலையம் அமைப்பதற்காக 1981 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 27 ஆம் நாள் அடிக்கல் நடப்பட்டது. 1983 ஆம் ஆண்டில் கனடாவில் இருந்து கோபோல்ற் கதிரியக்க சிகிச்சை இயந்திரம் (Cobalt machine) தருவிக்கப்பட்டு புற்றுநோய்க்கான கதிர்வீச்சு சிகிச்சை வழங்கலுக்கான வசதிகள் செய்யப்பட்டிருந்த போதிலும் போர்ச்சூழல் மற்றும் வைத்திய நிபுணர் இன்மை போன்ற காரணங்களினால் இது பயனளிக்காது போனதால் கதிரியக்கமுள்ள கோபோல்ற் பதார்த்தமானது அவ் இயந்திரத்திலிருந்து அகற்றப்பட்டு விமானமூலம் எடுத்துச் செல்லப்பட்டது.

இதன் பின்னர் உக்கிரமடைந்த நாட்டுப் பிரச்சினைகளினால் நலிவுற்ற புற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்ந்தும் சிகிச்சைக்காக மகரகம நோக்கிய நெடுந்தூரப் பயணத்தை மேற்கொண்டனர். காலத்துக்கேற்ப அவர்கள் A-9 தரைப்பாதை, கொம்படிப் பாதை, கிளாலிப்பாதை, பூநகரிப்பாதை மற்றும் கடல்வழியாக ICRC வழித் துணையுடன் திருகோணமலை சென்று பின்னர் தரைப்பாதையூடாகவும் ஈற்றில் வான்வழியாக விமானமூலமும் எனப் பயணித்தனர். இவ்வாறு மகரகம சென்றோர் அங்கு மொழிப்பிரச்சினை, உறவினர்களின் நீண்டகாலப்பிரிவு, நீண்டகால சிகிச்சை, மனக்கிலேசம் மற்றும் பணச்செலவு எனப் பல பிரச்சினைகளுடன் சிகிச்சையைப் பெற்றனர்.

மிகவும் பிந்திய நிலையில் புற்று நோயுடன் இனங்காணப்பட்டவர்கள் சிகிச்சையைத் தவிர்த்தும் கொண்டனர்.

இவர்கள் இவ்வாறான கடினமான பிரயாணத்தில் ஏற்படும் கஷ்டங்கள் மற்றும் பிரச்சினைகள் காரணமாகச் சிரமமாகச் சென்று நீண்ட கால சிகிச்சையைத் தொடர்ந்து பெறாமல் இருந்த சந்தர்ப்பங்களும் அதிகமாக இருந்தது.

2002-2003 காலப்பகுதியில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக நிலவிய சுமுகமான காலப்பகுதியில் இப்பகுதி மக்களின் வேண்டுகோளுக்கு இணைந்து அப்போதைய அரசின் சுகாதார அமைச்சு மற்றும் வடகிழக்கு சுகாதார திணைக்களத்தின் முயற்சியால் தெல்லிப்பழை G.G பொன்னம்பலம் ஞாபகார்த்த புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை மீளப் புனரமைத்து உலக வங்கியின் அனுசரணையுடன் புதிய கோபோல்ற் கதிர்வீச்சு சிகிச்சை இயந்திரத்தையும் அங்கு கதிர் வீச்சு சிகிச்சைக்காக தருவிக்கப்பட்டது.

இச்சிகிச்சை நிலையத்தில் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கதிர்வீச்சு சிகிச்சை முதன்முதலாக 2005 ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் திகதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அன்றில் இருந்து இன்றுவரை 3011 புற்றுநோயாளர்கள் கதிர்வீச்சு சிகிச்சையைப் பெற்றுள்ளனர்.

இது தவிர யாழ். போதனா வைத்திய சாலையில் 2004 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 14 ஆம் திகதி முதல் புற்று நோயாளர்களுக்கான உள்ளக விடுதி வசதிகளுடன் மருத்துவ ரீதியான சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான வசதிகள் வடபகுதியில் இருந்தும் இன்னமும் புற்றுநோயாளர்கள் மகரகம தேசிய புற்றுநோய் வைத்திய சாலைக்கு நோய் கூற்றியல் பரிசோதனைகளுக்காகவும் மற்றும் நவீன கதிர்வீச்சு சிகிச்சைக்காகவும் அனுப்பப்பட்டு வருகின்றனர். இவர்கள் குறிப்பாக மமோகிராம், என்பு ஸ்கான், குறுந்தூர கதிர் வீச்சு சிகிச்சை, நவீன நெடுந்தூர கதிர் வீச்சு சிகிச்சை (Linear Accelerator Treatment) மற்றும் கதிர்வீச்சு அயடீன் சிகிச்சைக்காக அங்கு அனுப்பப்படுகின்றனர்.

இவ்வாறான பூரணத்துவம் அடைந்த சிகிச்சை வசதிகள் இங்கு இல்லாமையை உணர்ந்த "Colours of Courage Trust" நிறுவனத்தினர் "Trail" என்னும் மனித நடை பயணத்தை இம்மாதம் முதலாம் திகதி தேவேந்திரமுனையில் ஆரம்பித்து எதிர்வரும் 27 ஆம் திகதி பருத்தித்துறை முனையை அடையவுள்ளனர். இப்பயணத்தின் போது நன்கொடையாகப் பெறப்படும் பணத்தைக் கொண்டு வடபகுதியின் புற்றுநோய் சிகிச்சை வசதிகளை மேம்படுத்த பல கட்டட நிர்மாணம் மற்றும் இயந்திரக் கொள்வனவுகளும் செய்யவுள்ளனர்.

இப்பயணத்தில் முடிவில் 220 மில்லியன் இலங்கைப் பணத்தை சேர்க்க எண்ணியுள்ளனர். யாழ்.மாவட்டத்திலும் எதிர்வரும் திங்கள் முதல் புதன் கிழமை வரை பெருமளவு பணம் நன்கொடையாகப் பெறப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Trail மனித நடை பயணத்தின் நன்கொடை பணத்தைக் கொண்டு யாழ் போதனா வைத்தியசாலையில் புற்று நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக அதிகவனிப்புப் பிரிவு (High Dependency Unit) ஒன்று பெண்கள் புற்றுநோயாளர் விடுதியின் ஒரு பகுதியில் வடிவமைக்கப்படும். இவர்களுக்கு தரமான கட்டில்கள், உடல் தொழில்பாடுகளை அவதானிப்பதற்கான உபகரணங்கள், இரத்தப் பரிசோதனை உபகரணங்கள், ஒட்சிசன் வழங்கும் வசதிகள் மற்றும் பொழுது போக்கு சாதன வசதிகள் என்பன ஏற்படுத்தப்படவுள்ளன.

இது தவிர தெல்லிப்பழை கதிர்வீச்சு சிகிச்சைப்பிரிவுடன் மிகவும் அண்டிய சுமார் 2.5 ஏக்கர் நிலபரப்பில் கதிர்வீச்சு சிகிச்சைக்காக வரும் நோயாளர்கள் தங்குவதற்காக 30 கட்டில்கள் கொண்ட ஆண், பெண் விடுதிகள், கதிரியக்க அயடீன் பிரிவு, குறுந்தூர கதிர் வீச்சு சிகிச்சைக்கான கட்டடம் மற்றும் CT Simulator இயந்திரமும் அதற்கான கட்டடமும் கட்டுவதற்கான திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை வட பகுதி புற்றுநோயாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 4 மணிக்கு தெல்லிப்பழை கதிர்வீச்சு நிலையத்தின் அருகே கொள்வனவு செய்யப்பட்ட நிலப்பரப்பில் நடைபெறும். இந்நிலப்பரப்பை இலவசமாகத் தந்த மற்றும் கொள்வனவு செய்ய உதவியவர்களுக்கு இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

எனவே இந்த Trail மனித நடை பவனி மூலமாக நாட்டின் சகல சமூகத்தினரிடமும் இருந்து நன்கொடையாக சேகரிக்கப்பட்ட நிதி மூலம் விரைவில் வடபகுதியில் உருவாகும் நவீன மயப்படுத்தப்பட்ட புற்றுநோய் சிகிச்சைக்கான கட்டமைப்புக்கள் கடந்த 30 வருடங்களாக யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களுக்கு ஒரு நல்லெண்ணத்தின் சமிஞ்சையாக அமையும் எனலாம்.

புற்றுநோய் சிகிச்சைப்பிரிவை மேலும் Linear Accelerator போன்ற நவீன கதிர்வீச்சு இயந்திரங்களும் தருவிக்கப்பட்டு மேம்படுத்த மேலும் 650 மில்லியன் இலங்கைப் பணம் தேவைப்படும். இவ்வாறான உதவிகள் மூலம் இவ் வளர்ச்சிகள் எதிர்காலத்தில் ஏற்பட வேண்டும் என்று நாம் இச் சந்தர்ப்பத்தில் வேண்டுவோமாக. ⁕

# 200 ஆவது தொடரில் கண்ணகிபுரம்

வானொலி நேயர்களின் நாடகங்களைக் கேட்கும் தாகத்தை நிவர்த்தி செய்யும் முகமாக 'யங் ஏசியா' தொலைக்காட்சி நிறுவனம் ஒகஸ்ட் 5ஆம் திகதி 2009ஆம் ஆண்டு முதல் கண்ணகிபுரம் என்ற பெயரில் தமிழிலும் 'கண்ணகிபுர' என்ற பெயரில் சிங்களத்திலும் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தொடர் நாடகமாக இரு மொழிகளிலும் ஒலிபரப்பி வருகின்றது.

29 ஜூலை 2011 அன்று தனது 200 ஆவது தொடரை ஒலிபரப்பவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஒரே நேரத்தில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் ஒரு நாடகம் இலங்கையில் ஒலிபரப்பாகின்றமை இதுவே முதல் தடவையாகும். இலங்கையில் வாழும் மக்களுக்கிடையே எவ்வித பேதத்தையும் பார்க்காது, எல்லோரையும் ஒன்றாகவே நோக்கும் பண்பு இந்த நாடகத்தில் உள்ளடங்கியிருப்பதும் சிறப்பம்சமாகும்.

சகிப்புத்தன்மை, சகவாழ்வு என்பவற்றை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள ''கண்ணகிபுரம் வானொலி நாடகம் சமூக மேம்பாட்டுக்கான மாற்றங்களை வெளிப்படுத்தி வருகின்றது.

நீண்ட காலமாக நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் மக்கள் உளவியல் ரீதியாக எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதையும் இந்த நாடகம் வெளிப்படுத்துகின்றது.

இந்த நாட்டு மக்கள் மூன்று இனங்களாக வேறுபட்டுத் தனித்தனியாக வாழ்ந்து கொண்டிருந்ததை மாற்றியமைக்கக் கூடியவகையில் இந்த நாடகத்தின் கதையம்சம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை வெளிப்படுத்தி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி சகல இனமக்களிடையேயும் நல்லிணக்கப்பாட்டைக் கொண்டுவரும் எண்ணத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்காக யதார்த்பூர்வமான கண்ணகிபுரம் என்ற கிராமத்தை உருவாக்கி அதற்கு ஏற்புடைய வகையில் கதாபத்திரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. நல்ல, கெட்ட கதாபாத்திரங்களின் ஊடாக வானொலி நேயர்களின் மனதில் நன்நெறியை வலுப்படுத்தக் கூடிய வகையில் கதையம்சம் அமைந்துள்ளது.

இந்த நாடகம் தற்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய வர்த்தக சேவைகளிலும் பிராந்திய ஒலிபரப்புச் சேவைகளான ரஜரட்ட எப்.எம்., கந்துரட்ட எப்.எம்., வயம்பஹண்ட, கொத்மலை எப்.எம்., தென்றல் எப். எம்., பிறை எப்.எம்., மற்றும் யாழ்.எப்.எம்.. ஆகிய சேவைகளில் வாரத்துக்கு இரு தடவைகள் ஒரே நேரத்தில் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.45 மணிமுதல் 7 மணிவரையில் ஒலிபரப்பப்படுகின்றது.

ஆயினும் தென்றல் எப்.எம். சேவையில் மாத்திரம் இந்த நாடகத் தொடர் அதே நாள்களில் மாலை 5.45 மணிமுதல் 6 மணிவரை ஒலிபரப்பாகி வருகின்றது.

கண்ணகிபுரம் நாடகத்தின் இறுதியில் கேள்வியை ஒலிபரப்பி அதற்குச் சரியான விடையை அனுப்பும் நேயர்களில் 5 அதிர்ஷ்டசாலிகளுக்குப் பரிசில்களையும் வழங்கி வருவது யாவரும் அறிந்ததே.

கண்ணகிபுரம் இன்று இலங்கையில் சமூக சீர்திருத்தக் கொள்கைகளை மக்களிடையே வலுவடையச் செய்யக் கூடிய வகையில் இலங்கையின் வானொலியில் பெருமைக்குரிய நாடக மரபை மறுமலர்ச்சியடையச் செய்யக்கூடிய வகையில் அதன் தயாரிப்பாளர்களும் யங் ஏசியா தொலைக்காட்சி நிறுவனமும் பங்களிப்பை வழங்கி வருகின்றன. ⁕

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்போது விற்பனையில்...

தரமான மின்பிறப்பாக்கிகள்



RATO

(650W - 5V வரை பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய்)

KAMA

தற்போது கிளிநொச்சியிலும் யாழ்.நகரிலும் தரமான மின்பிறப்பாக்கிகளை குறைந்த விலையிலும் உத்தரவாதத்துடனும் பெற்றுக்கொள்ள

## Jaffna Electrical

**Show Room**

141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
TP: 021 222 5766, Fax: 021 222 8378

135, ஏ-9 வீதி,
கிளிநொச்சி.
TP: 021 228 0008

## விற்பனைப் பிரதிநிதி (Sales Representative) தேவை

இலங்கையில் முதற்தர விற்பனையில் முன்னோடிகளான *Vimal Brand* தயாரிப்புகளை யாழ்.குடாநாட்டில் விநியோகிப்பதற்கு 2,3 வருட அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதி (Sales Representative) தேவை.

தொடர்புகளுக்கு:

*S.V.Murugesu (SVM)*
*154, Hospital Road, Jaffna.*
*E-mail:vimaloil@sltnet.lk*

## காணி விற்பனைக்கு

மேற்கு கொழும்புத்துறை வீதியில் சங்கக் கடைக்கும் விறகு காலைக்கும் முன்னால் உள்ள கிணற்றுடன் கூடிய 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 021 790 3642
(இரவு 7.30 -9.30)

## வீடு தேவை

அரச அலுவலகம் ஒன்றை இயக்குவதற்கு கிளிநொச்சியில் ஏ- 9 வீதிக்கு அருகில் (200 M தூரத்துக்குள்) வீடு தேவை. கரடிப்போக்குச் சந்தியில் இருந்து புதிய மருத்துவமனை வரையான பகுதி விரும்பத்தக்கது.

தொடர்பு: 0777862353, 0779046207

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கைதடியில் கண்டி வீதியில் அரசினர் முதியோர் இல்லம் சாந்தியகம் முன்பாக அமைந்த ஒழுங்கையில் நாலேகால் (4¼) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 0775440293

## காணி விற்பனைக்கு

கோப்பாய், இராச வீதியில் கல்வியியல் கல்லூரிக்கு அண்மையில் அமைந்துள்ள 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு : 0771936594, 0771710787

# IMMEDIATE VACANCIES

LUXURY EMULSION · KENLUX · Colour Box · Sunny · DEBEER

## SALES EXECUTIVES (PROJECTS)

- Age below 32 Yrs, and should have excellent interpersonal skills
- More than 3 years experience in Sales and Customer handling (projects)
- Preference will be given to those who have experience in Paints or Hardware field
- Fluent in English language and Communicate in TAMIL LANGUAGE would be an added advantage
- Should have a valid Driving License
- Willing to work in any part of the Island

Apply with complete CV and indicating the post on the top left hand corner of the Envelope to reach us within 7 days to the address below.

C.P.T. General Manager,
CAUSEWAY PAINTS Lanka (pvt) Ltd.
15, Noel Mendis Mawatha
Modarawila Industrial Estate, Panadura

# Mega Offer

| Printer | UPS | Router | Monitor | Dongle |
|---|---|---|---|---|
| Epson<br>Laser Printer - 11000/=<br>Ink Jet Printer - 4600/=<br>Photo Printer - 23500/=<br>CD Printer - 26500/= | DCP 650VA - 3800/=<br>1200VA - 9900/=<br>1KVa to 10KVa | D-Link<br>4 Port- 6300/=<br>4Port Wireless 6800/=<br>Single Port - 3000/= | 19" Dell -10500/=<br>16" Topview - 9250/=<br>19" Asus - 11500/=<br>Kingston 4GB pen drive 900/= | MF180 - 3500/=<br>E 153 - 4000/=<br>Huawei - 5000/=<br>ZTE MF112 - 4750/=<br>Optus - 5250/=<br>D-Link - 5600/= |

## Thirumurugan Com Net

No.259, KKS Road, Jaffna
No.05, Thirunagar Road, Kilinochchi
T.P_021 222 7835

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

Head phone, Woofer
Mother Board, Web camera
Key Board, Mouse



நம்பமுடியாத விலையில் நம்பகரமான உத்தரவாதத்துடன்

EPSON EXCEED YOUR VISION

D-Link Building Networks for People

## வாடகைக்கு யாழ்நகரில் இடம் தேவை

கல்வி நிலையம் ஒன்றிற்கு யாழ்ப்பாணத்தில் பிரதான இடத்தில் 2500 முதல் 5000 சதுரஅடி கொண்ட வீடு அல்லது வர்த்தக நிலையமொன்றில் ஒரு தளம் உடனடியாகத் தேவை. விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்

Union Development and investment Co. (Pvt) Ltd
104/11 Grand pass Road, Colombo-14
Tel No: 011 4796752 Mobile: 0777 260816
E mail: general@udiclk.com

Skyline





*1969 ஆண்டிலிருந்து சகலவிதமான மின்சார இலத்திரனியல் உபகணரங்களை உத்தரவாதத்துடன் வழங்கிய எமது நிறுவனம்*

**Jaffna Electrical**

தற்போது தரமான கணனிகளையும் கணனி உதிரிப்பாகங்களையும் விற்பனை செய்கின்றது என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# JAFFNA ELECTRICAL

LG No 1 Dealer in SriLanka

Authorized Dealer for Abans



**Show Rooms :**

141, Power House Road, Jaffna.
T.P: 021 222 8378, 5766.

No.135, A-9 Road, Kilinochchi.
T.P: 021 228 0008


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய கட்டடங்களை ஏக்கத்துடன் பார்க்கும் ஓமந்தை மத்திய கல்லூரி மாணவர்கள்

நாவற்குழி,ஜூலை24

வவுனியா, ஓமந்தை மத்திய கல்லூரியின் புதிய கட்டடங்கள் திறந்துவைக்கப்படாமையால் பாடசாலை மாணவர்கள் இப்போதும் தறப்பாள் கொட்டில்களில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த கால யுத்தத்தில் இப்பிரதேச பாடசாலைக் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

வடக்கின் துரித மீட்சித் திட்டமாகிய என்றிப் திட்டத்தின் கீழ் கட்டடப் புனரமைப்புக்கென 50 லட்சம் ரூபா இந்த வருட ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்டது.

கட்டடங்கள் யாவும் துரித கதியில் புனரமைக்கப்பட்டு வர்ணங்களும் பூசப்பட்டுள்ளன. ஜூன் மாத நடுப்பகுதியில் இவை திறந்துவைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில் உள்ளூராட்சித் தேர்தல் செயற்பாடுகளில் அரசியல் தலைவர்கள் இருந்தமையால் அவர்கள் வரவில்லை எனக் கூறப்படுகிறது.

இப்பிரதேசத்தில் உள்ள உள்ளூராட்சி சபைக்குரிய தேர்தல் ஏற்கனவே நடைபெற்று முடிந்தமையால் திறப்பு விழாவில் அரசியல் தலைவர்களும் நாட்டம் செலுத்தவில்லை. அழகான கட்டடங்களை அண்ணாந்து பார்த்தபடியே மாணவர்கள் தறப்பாள் கொட்டிலின் வெம்மைக்குள் கற்கின்றனர். மழை பெய்யும் நேரத்தில் இவர்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

இதேவேளை - கல்லூரியின் நூற்றாண்டு விழாவை செப்ரெம்பர் மாதம் கொண்டாட பாடசாலையின் பழைய மாணவர்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

ஆனால் புனரமைக்கப்பட்ட கட்டடங்கள் எப்போது திறக்கப்பட்டு தாம் வசதியாக கல்வி கற்க முடியுமென்று மாணவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.(க-121)

## கச்சதீவில் நடமாடியவர்கள் விளக்கமறியலில்

மன்னார்,ஜூலை24

கச்சதீவில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய ஐந்து பேர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் மூவர் கொழும்பையும், ஒருவர் புத்தளத்தையும், மற்றவர் நீர்கொழும்பையும் சேர்ந்தவர்கள். இவர்கள் ஐவரும் கச்சதீவில் காணப்பட்ட போது கடந்த 19 ஆம் திகதி இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அன்று மாலை இவர்கள் கடற்படையினரால் தலை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களிடம் 21 ஆம் திகதி வரை பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டனர். முஸ்லிம்களான இந்த ஐந்து பேரும் சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் விமானமூலம் இந்தியா சென்று பின்னர் கடந்த 18 ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து மீனவர்களின் படகு மூலம் கச்சதீவுக்கு வந்தனர் என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. பின்னர் 22 ஆம் திகதி இந்த ஐந்து பேரையும் மன்னார் மாவட்ட நீதிவான் முன்னிலையில் தலைமன்னார் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர். மாவட்ட நீதிவான் திருமதி கே.ஜீவராணி இவர்கள் ஐவரையும் எதிர்வரும் நான்காம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இவர்கள் இந்தியா சென்றமைக்கான காரணம் இதுவரை தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-601)

## தனியார் பேருந்து தீயினால் நாசமாகியது

மன்னார்,ஜூலை24

மன்னார் மூர் வீதிப் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த தனியார் பேருந்து ஒன்று நேற்றுமுன்தினம் அதிகாலை திடீரெனத் தீப்பற்றி எரிந்து நாசமாகியுள்ளதாகத் தெரியவருகின்றது.

பாடசாலை ஒன்றுக்கு அருகிலுள்ள வீதியிலேயே இந்தத் தனியாருக்குச் சொந்தமான பேருந்து பல நாள்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இது திடீரெனத் தீப்பற்றி எரிந்துள்ளது.

தீயை அணைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதும் அது பயனளிக்காத நிலையில் பேருந்து முற்றாக எரிந்து நாசமாகியது. தீப்பற்றியதற்கான காரணம் இதுவரை தெரியவில்லை. மன்னார் பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(க-601)

## சேவைக்குப் பாராட்டு...



நேர்த்தியான அணிவகுப்பு: மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் சிசில் கொடித்துவக்கு பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கின்றார்.

## அபிவிருத்தி உதவியாளர் நியமனம்

நாவற்குழி,ஜூலை24

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான தேசிய அருங்கலைகள் பேரவையின் அபிவிருத்தி உதவியாளராக திருமதி இந்துமதி நியமனம் பெற்றுள்ளார்.

இவர் மாவட்டச் செயலகத்தில் உள்ள கைத்தொழில் பிரிவுடன் இணைந்து தனது கடமைகளை மேற்கொள்கிறார். பற்றிக் போடுதல், சாறி அலங்காரம் போன்றவற்றை தேசிய அருங்கலைகள் பேரவை மிகவிரைவில் முல்லைத்தீவில் நடத்தவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் அபிவிருத்தி உதவியாளராகக் கடமையாற்றும் எஸ். பொன்கரன் மன்னார் மாவட்டத்துக்குமான பதில் கடமைகளை ஆற்றி வருகின்றார். அங்கும் இதுபோன்ற பயிற்சிநெறிகள் உதவியாளர் பதவிகள் மிக விரைவில் நிரப்பப்படவுள்ளதாகச் சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்ளூர் அருங்கலை முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் முகமாக அரசின் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இத்தகையோரின் பயிற்சியையும் திறமையையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.(க-121)

## விநாயகபுரம் அ.த.கவில் கணினிக் கூடம் திறந்துவைப்பு

மல்லாவி,ஜூலை24

துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட விநாயகபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஐந்து கணினிகளைக் கொண்ட கணினிக் கூடமொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஈ.கே.எஸ்.பி. நிறுவனம் வழங்கிய ஐந்து கணினிகளையும் அதற்கான உபகரணங்கள், தளபாடங்கள் ஆகியவற்றையும் அடிப்படையாகக் கொண்டு இந்தக் கணினிக் கூடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதனைத் திறந்துவைப்பதற்கான அயராத முயற்சிகளில் பாடசாலையின் அதிபரான சு. சத்தியசீலனும் ஆசிரியர்களும் ஈடுபட்டிருந்தனர்.

இந்தக் கணினிக் கூடத்தை துணுக்காய் பிரதேச செயலாளர் குணபாலன் மற்றும் முல்லைத்தீவுச் செயலகத்தைச் சேர்ந்த உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திலீபன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

அடிப்படைத் தேவைகளில் எதுவுமே இதுவரை கிடைக்கப்பெறாத மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள இந்தப் பாடசாலையில் இவ்வாறான கணினிக் கற்கை நெறியை வழங்கக் கூடிய ஒரு சூழல் உருவாகியிருப்பது இப்பிரதேச மக்களுக்கும் மாணவர்களுக்கும் நன்மை கொடுத்துள்ளது.

மின்சார வசதியற்ற இப்பிரதேசத்தில் மின்சாரத் தேவைக்கெனப் பாடசாலைக்கு ஒரு மின்பிறப்பாக்கி வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் அதன் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. இதற்கான எரிபொருளுக்கான செலவைத் தொண்டு அமைப்புக்கள், பொதுச் சேவை கொண்டவர்களிமிருந்து எதிர்பார்ப்பதாக பாடசாலை அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

(க-425)

## தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் கள்ளப்பாடு அ.த.க. சாதனை

முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த கள்ளப்பாடு அ.த.க. பாடசாலை மாணவர்கள் தேசிய மட்டத் தமிழ்த் தினப் போட்டி ஒன்றில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இவர்கள் இவ்வாண்டுக்கான தமிழ்மொழித் தினப் போட்டிகளில் பங்குபற்றி நாட்டார் பாடல் திறந்த போட்டியில் தேசிய மட்டத்தில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவுக் கல்வி வலயத்துக்கும் வடக்கு மாகாணத்துக்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்த இந்த மாணவர்களைப் பலரும் பாராட்டுகின்றனர்.

இந்த மாணவர்கள் வெற்றி தேடித் தந்த நாட்டார் பாடல்களை இப்பாடசாலை ஆசிரியர்களே இயற்றி, இசையமைத்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

(க-ரி)

## வவுனியாவில் சிப்பாய் சகாவால் கொலை

வவுனியா,ஜூலை24

வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் இரு இராணுவ வீரர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இராணுவ முகாமில் நடைபெற்ற விருந்துபசார மொன்றின்போது கொத்து ரொட்டி தொடர்பில் இரு இராணுவ வீரர்களுக்கிடையில் ஆரம்பித்த வாய்த்தர்க்கம் மோதல் சம்பவமாக மாறி இறுதியில் கொலையில் முடிவடைந்தது. சக வீரரைக் கடுமையான முறையில் தாக்கிப் படுகொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் படைவீரர் ஒருவர் வவுனியா காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

மோதலுடன் தொடர்புடைய இராணுவ வீரர்கள் இருவரும் கடுமையான சண்டையில் ஈடுபட்டதாகவும் இதன்போதே ஒருவர் பரிதாபமாக உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் ஹேவாஹெட்ட பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதான நிரஞ்சன் சாமிந்த என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## நலன்புரி நிலைய அடையாள அட்டைகள் வாக்களிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டன

கிளிநொச்சி,ஜூலை24

கிளிநொச்சியில் நலன்புரி நிலைய அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி மீள்குடியமர்ந்த மக்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை மற்றும் தேர்தல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை என்பன இல்லாத கிளிநொச்சியில் மீள்குடியமர்ந்த மக்கள் நேற்று முற்பகல் 10 மணி வரை வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. இதனைக் கேள்வியுற்ற தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பட்டு தேர்தல் திணைக்களத்தின் கவனத்துக்கு இதனைக் கொண்டு சென்றார். இதன் பிரகாரம் நலன்புரி நிலையங்களில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி மக்கள் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர்.

இதன் காரணமாக முற்பகல் 10 மணிக்குப் பின்னர் மக்கள் திரண்டு வந்து வாக்களித்ததை அவதானிக்க முடிந்தது.

இத்தகைய மாற்று ஏற்பாடு மேற்கொள்ளப்படாதிருந்தால் பெரும் எண்ணிக்கையான வாக்காளர்கள் தமது வாக்கை செலுத்த முடியாத அவலநிலை தோன்றியிருக்குமென்று கூறப்படுகின்றது. (க-426-319)

## விவசாயிகள் வாரம்

வவுனியா,ஜூலை24

வவுனியாவில் விவசாயிகள் வாரத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விவசாயிகள் வாரம் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து ஐந்தாம் திகதி வரை வவுனியாவில் கொண்டாடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தாண்டிக்குளத்திலுள்ள விவசாய பண்ணையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்காக விசேட பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன. (க-421)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரியில் காணியுடன் வீடு விற்பனைக்கு

சாவகச்சேரியில் ஏ-9 வீதிக்கு அண்மையில் 5 அறை வீட்டுடன் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வீட்டுடன் 5 பரப்பு அல்லது வீட்டுடன் 10 பரப்புக் காணியும், மிகுதி 5 பரப்பு அல்லது 10 பரப்புகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும். காணி உடன் விற்பனைக்கு உள்ளதால் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்:

0773526211, 0113135438.

தரகர்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

## 31 ஆம் நாள் நினைவலைகள்



தோற்றம் 26.10.1932
மறைவு 25.06.2011

அமரர்
### சின்னையா பரமலிங்கம்

அன்னையாய் தந்தையாய் எம்மைக் காத்து
மின்னாமல் முழங்காமல் ஒரு நாளில்- எம்மைவிட்டு
எங்கு சென்றாய்? எப்போ காண்போம் உன் திரு நீற்று
முகத்தை இனி ?பரராச சேகரத்தான் கழலடிகள்
சென்றனையோ? அடைக நின் ஆத்மா சாந்தி!
ஓம் சாந்தி!

கச்சாய் வீதி,
கொடிகாமம்.
குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் விக்னராஜா
சீவரட்ணம்



பிறப்பு 12 . 07 . 1945
இறப்பு 24 . 07 . 2008

தேன் சொட்டும் உம் பேச்சு
எம்மை விட்டுப்போய் மூன்றாண்டு ஆனதுவோ!
கதறுகிறோம் நாம் இங்கே
பதறுகிறோம் நீர் எங்கே?
அன்பான அரவணைப்பும்
அழகான உம் முகமும் - நாம்
அகிலத்தில் உள்ளவரை அழியாது எம் நெஞ்சில்
அன்பாக நீர் அழைக்கும் பேச்சுக்கள்
ஒவ்வொன்றும் காதோரம் ஒலிக்குதையா !

''விமலகம்'',
கெருடாவில் தெற்கு.
தொண்டைமானாறு. (6098)
குடும்பத்தினர்.
சிவபுத்திரன் - மைத்துனர் .

## German Deutsch Classes

ஜேர்மன், சுவிஸ் டொச் பரீட்சைக்கான வகுப்பு ஆரம்பம்.
இடம்: 464,Hospital Road, Jaffna College.
T.P: 0778245031

## மணமகள்தேவை

திருகோணமலை றோ.க, கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, பிரபல தனியார் வங்கியில் (HNB Bank) வேலை செய்யும் 34 வயதுடைய 5'11'' உயரம் கொண்ட மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: 026 2222727

## அருள் முருகன் திருமணப் பணியகம்

Doctors, Engineers உட்பட உங்கள் பிள்ளைகளது எதிர்பார்ப்புக்களுக்கு அமைய எத்தகைய உள்நாடு /வெளிநாடு மணமக்கள் தேவைக்கும் :0718475114, Systematically & Genuine Services!
03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன்( ஆரியகுளம் சந்திக்கு கிட்டவாக பலாலி வீதியையும் ஸ்ரான்லி வீதியையும் இணைக்கும் லேன்) யாழ்ப்பாணம்.(7.00am -5.00 pm)

## கட்டடம் வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் யூனியன் வங்கியின் முன்பாக நான்கு மாடிகளைக் கொண்ட கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு :
0772247428

## G.C.E.(A/L) -2011

முதன் முதலில் மொடல் பார்க்காமல் பரீட்சையா? வினாத்தாள் போதுமா? விடைகள் வேண்டாமா?
Physics, Biology, Chemistry விடைகளுடன்.
Royal, Vishaka, Trinity,FWC. வீடுவந்து தரப்படும். ஏற்பா தரவு (ரூபா 1000/+ போட்டோப் பிரதிச் செலவு)
அழையுங்கள்வித்தியா. சுழற்றுங்கள்
0777730838 - 226-4814

## விற்பனைக்கு

LA 39 - xxxx மொடல் 207 TATA
உற்பத்தி 1999 ஆண்டு
அலுமினியம் பிற்றிங்கிலான
வாகனம் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:0776079621
(சி/1895)

## காணி விற்பனைக்கு

ஊரெழு கிழக்கில் ஊரெழு- கரந்தன் வீதிக்கு அண்மையில் 47 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்குண்டு. மொத்தக் காணியாகவோ, பகுதியாகவோ கொள்வனவு செய்யலாம்.
தொடர்புகளுக்கு: செ.பகீரதன்,
சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.
தொ.பே : 0775484695, 0217914433

## காணி விற்பனைக்கு உண்டு

தெல்லிப்பழை வீதியில் உள்ள சிறுவிளானில் மெயின் றோட் அருகில் 34 பரப்புக் காணி வெட்டுக் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: மத்தேசு அருளப்பு
தொ.பே. இல. 0779037518, 0779459186
பெரியவிளான், ஆத்தியோலை

## DIPLOMA IN CIVIL SOCIETY PROJECT MANAGEMENT

சமூக நல தொண்டு நிறுவன (VOLUNTEER SECTOR) தொழில் வாய்ப்புகளுக்காக எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் இப்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன, விண்ணப்பிக்க விரும்புவோர் பின்வரும் முகவரிக்கு எழுதுவதன் மூலம் விண்ணப்பப்படிவத்தையும் ஏனைய விவரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். தொலைக் கல்வி முறையில் நடத்தப்படும் இந்தப் பயிற்சி நெறியை நீங்கள் வீட்டில் இருந்தவாறே உங்கள் வசதிக்கேற்ப கற்றுப் பயனடையலாம். பயிற்சிநெறி முடிவில் சான்றிதழ் வழங்கப்படுவதோடு தொழில் வாய்ப்பிற்கான ஆலோசனைச் சேவையையும் பெற்றுக் கொள்ளலாம்.

Programme Coordinator (DCPM)
[illegible] Resource,
P.O.Box 206,
Kandy. (5783)

## காணி விற்பனைக்குண்டு

மகாத்மாவீதி, நெல்லியடி (300m) பயன்தரு மரங்களுடன் (தேசி, தோடை, மாதுளை, கமுகு) 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776093481 பண்டித்தறை, நெல்லியடி.

## கோழிக் குஞ்சு விநியோகம்

தரமான No.1 Prima புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் 28.07.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| ★ சூட்டிபாம் சென்ரர் | - 0778996085 |
| ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு | - 0776904590 |
| ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம் | - 0774656377 |
| ★ நல்லூர் பாம் சென்ரர், பருத்தித்துறை | -0771392593 |
| ★ நல்லூர் பாம் சென்ரர், கனகபுரம் வீதி, கிளிநொச்சி | - 0776225944 |

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். 021 222 6944

## சிவபூமி முதியோர் இல்லத்துக்கான பதவி வெற்றிடங்கள்

- ✱ நிர்வாக அலுவலர்
- ✱ சிற்றூழியர்கள்

மேற்படி பதவிகளுக்குக் கல்வித் தகைமை, நல்லொழுக்கச் சான்றிதழ், வேலை அனுபவம் பற்றிய விவரம் ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும்.
வயது -40-60 (ஆண்கள்)
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி : 01.08.2011
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

தலைவர்,
சிவபூமி முதியோர் இல்லம்,
தொல்புரம்,
சுழிபுரம்.

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 26.08.1937
மறைவு 24.07.2000

அமரர்
அம்பலவாணர் குலசேகரம் J.P.
(இளைப்பாறிய நூலகர், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்)

என்றும் உங்கள் நினைவுடன்...
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி பிள்ளைகள்.

கைதடி, நுணாவில்,
சாவகச்சேரி. (6105)

## நன்றி நவிலல்



P.M. செல்லையா

கடந்த 02.07.2011 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த எமது அன்புத் தந்தையின் மறைவை முன்னிட்டு எமது இல்லம் வந்து துக்கத்தில் பங்கேற்றவர்களுக்கும், தொலைபேசி, ஈமெயில் மூலம் ஆறுதல் நல்கிய பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள் அலுவலர்களுக்கும் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் மேலும் பல வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனம்நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி.
T.P- 077 725 5543,021 320 7234
மனைவி,
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபின் வழி தமிழ் வளர

இலக்கியக் காட்சி - 95

""மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்''- தொல்காப்பியர், தமிழ்மொழி வழக்குக்கு வகுத்துச் சொன்ன ஆணை அது! மொழிக்கு மட்டுமன்று; எவ்வகை வழக்குக்கும் பொருந்தும் மரபு எனினும் வழக்கு எனினும் ஒக்கும். (மரபு என்பது வழக்கு, வரலாறும், இலக்கணம், பண்பாடு முதலிய பல பொருள் தரும் ஒரு விழுமியச் சொல்!) வழக்கெனப்படுவது உயர்ந்தோர் வழக்கமே என்பதைத் தொல்காப்பியர்,

*''வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே*
*நிகழ்ச்சி அவர்கட் டாக லான''*

என்று, மாந்த வாழ்வின் உலகியல் இயக்கம், உயர்ந்தோர் வழக்கத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளது என்னும் காரணத்தோடு கூறிச்சென்றார்.

உண்மையை உணராக் கண் புதைந்த மாந்தர் தொகை பெருகிவிட்ட இந்தக் காலத்தில் எல்லாவகை மரபுகளும்- பண்பாடுகளும் குழப்பப்பட்டும் திரிக்கப்பட்டும் மாற்றப்பட்டும் வருகின்றன. இந்தக் குழப்பத்தாற்றான், தமிழன் தலைகீழாக மாற்றப்பட்டுத் தாழ்நிலையுற்றான்! விரித்துச் சொல்லக் காலமும் இடமும்போதா.

மொழிப்பண்பாடு சீர்குலைய எல்லாம் சீரழியும், இந்த உண்மையை தமிழினப் பகைவர் நன்குணர்ந்து செயற்படுகின்றனர்! நிற்க,

'நிகழ்ச்சி' என்ற மரபுவழிவந்த சொல்லை மாற்றி, 'நிகழ்வு' என்று ஆளத்தலைப்பட்டுள்ளனர். 'நிகழ்வு' என்னும் சொல்லின் மரபன்மையை விளக்கி பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள், 'நங்கூரம்' என்னும் ஏட்டில் எழுதியுள்ளார்.

தொல்காப்பியர், நிகழ்வு என்பதை நிகழ்காலத்தைக் குறிக்கும், நிகழ்ச்சி என்பதைச் சம்பவத்தைக் குறிக்கும் ஆண்டுள்ளமையைக் காணலாம். அந்த மரபே அண்மைக் காலம்வரை கொள்ளப்பட்டு வந்தது இன்றும் சிலர் இந்த மரபைப் போற்றியே பேசியும் எழுதியும் வருகின்றனர். ஆனால், ஓரிரு பத்தாண்டுகளாக மரபு மாற்றத்துக்குட்பட்டு ஊடகங்கள் பலவும் மரபில்லாத நிகழ்வு என்னும் சொல்லையே எழுதியும் பரப்பியும் வருகின்றன.

*''எப்பொருள் எச்சொல்லில் எவ்வாறு உயர்ந்தோர்*
*செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே''*

என்று இலக்கண நூலான நன்நூலில் பவணந்தி முனிவர் மொழிமரபு பற்றிக் கூறியுள்ளார். மரபுகள் மாறாதனவா?

என்பது ஒரு வினா! மாற வேண்டிய மரபுகள் மாறியே வருகின்றன, அவை காலத்தால் தாமே மாற்றமடைவன. வலிந்து செயற்படும் மாற்றம், மாற்றமல்ல, குழப்பங்கள் என்பதை அறிவுடைய நன்மக்கள் உணர்வர். எவற்றிலும் உயர்ந்தோரால்- கல்வியறிவுடைய சான்றோரால் வரவேற்கப்படும் மாற்றங்களே உண்மையானவையும் - நன்மையானவையும் - நிலையா னவையுமாகும்! மாற்றங்களுக்குள் ளும் மரபு இருத்தல் வேண்டும். அதாவது, மாற்றமும் மரபு வழிப்பட்டே நிகழ வேண்டும். மரபுவழிப்படாத மாற்றத்தை உயர்ந்தோர் ஏற்க மாட்டார். சொன்மரபு மாற்றம் பற்றித் தொல்காப்பி யரும், பவணந்தி முனிவரும் முறையே,

*''கடிசொல் இல்லைக் காலத்துப் படினே''*

(கடிசொல்= களையப்படுஞ்சொல் அல்லது நீக்கப்படுஞ் சொல்)- என்றும்

*'' பழையன கழிதலும் புதியன புகுதலும்*
*வழுவல கால வகையி னானே''*

என்றும் கூறியுள்ளனர். இங்கும் மாற்றங்கள் கால வகையால் தாமே நிகழ்வன என்பதை, காலத்துப் படினே, காலவகையினானே என்னும் தொடர்களால் கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது.

(எழுத்து, சொல், தொடர், பொருள், மரபு) உள்ளிட்ட மொழிவழுவை காண-கேட்க நேரும் போதெல்லாம் மொழியறிவும் கல்வியறிவும் உடைய சான்றோர், நெஞ்சம் உறுத்தப்பட்டு நொந்துபோவார்! இனி, தண்டவாளத்தில் ஓடுவதும் பல பெட்டிகளைத் தொடுத்ததுமாகிய நீளமான ஒரு வகை வண்டி, புகைவிட்டபடி ஓடியதால் முற்காலத்தில் அதனை ''புகைவண்டி'' என மக்கள் வழங்கினர். அந்த வண்டி இந்தக் காலத்தில புகைவிடாமல் ஓடுகிறது. அதனால், அதை ''தொடர்வண்டி'' என்று பெயர் மாற்றி உரைத்தலே சாலும் என்று மொழி ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் வகுத்துச் சொன்னார். தனித் தமிழ்ப் பற்றாளரும்- தமிழுணர்வாளருமாகிய தாமும் அவ்வாறே வழங்கினார். இந்த நாளில் அவ்வண்டியை மரபில்லாத ''தொடருந்து'' என்னுஞ் சொல்லால் சில ஊடகங்கள் குறிப்பதைக் காணலாம்.

உந்து = motor , அது ஆகு பெயராய் வீதியிற் பயணஞ் செய்யப் பயன்படும் பேருந்து முதலியவற்றைக் குறிக்கும். ஆனால், தொடர்வண்டி, முச்சக்கர வண்டி, உழவு இயந்திரம், வானவூர்தி, பெருங்கப்பல் போன்றவற்றை, 'உந்து' என்னுஞ் சொல்லால் வழங்கலாமா? அந்த மாற்றம் மரபு வழுவாகாதா? என மொழியியல் வல்லார் - சொல்லாய்வறிஞர் எண்ணி உரைப்பாராக.

மேலும், ஒன்றை மற்றொன்றினின்று வேறுபடுத்தி உணர்த்துவன அவ்வப் பொருளுக்குச் சிறப்பாயுள்ள அடையாளங்களே. எனவே, வேறுபடுத்திக் காண்பதை அடையாளங்காணல் என்பதே சரியானதாகும். ஒருவரை மற்றொருவரிலிருந்து வேறுபடுத்தி அறிய அல்லது ஒருவரை யாரென அறிவதற்காக வழங்கப்படும் அட்டை அடையாள அட்டை என்றே வழங்குதலைக் காண்க. ஆனால் அடையாளங் காணலை 'இணங் காணல்' என்கின்றனரே! இனம் என்பதற்கு அடையாளம் என்பதா பொருள்? இனம் என்பதற்கு கூட்டம், உறவு, சொந்தம், சாதி வகைமுதலியனவே பொருளாகும் என்பர் மேலோர். ஆக, இங்கு காட்டிய நிகழ்வு, தொடருந்து, இனங்காணல் என்பவற்றை ஆராய்ந்து மெய்ப் பொருள் காண்பார், அவற்றின் வழுவை நீக்கி, நிகழ்சி - தொடர்வண்டி - அடையாளங்காணல் என்று கூறும் உயர்ந்தோர் வழக்கையே கடைப்பிடிப்பது பற்றிச் சிந்திப்போம்.

*''பண்புடை யார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்'' - வள்ளுவன்*

அவ்வை

---

# முள்ளுக்குள் பூக்கள்

சிறுகதை



அந்திநேரம் பகல் முழுவதும் தன் கதிர் கரங்களை விரித்து நின்ற களைப்பால் உடல் முழுவதும் செக்கச் சிவந்தவனாகப் பொன்னொளி பரப்பியவாறு மேற்கு வானில் மறைந்து கொண்டிருந்தான் கதிரவன். பறவைகள் தங்கள் இருப்பிடம் நாடிச் சென்று கொண்டிருந்தன. தொழிலாளிகளும் உழைப்பாளிகளும் தங்கள் கடமைகளை முடித்துக் கொண்டு தங்கள் தங்கள் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார்கள். பாவம் வான்மதி எங்கே போவாள்? தன் வீட்டு வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு வீட்டின் பின்புறமாக உள்ள ஓர் ஒதுக்குப்புறத்தில் உள்ள பூவரசம் மரத்தின் வேரில் அமர்ந்து கொண்டு மாலைப்பொழுதின் அழகை இரசிக்கலானாள்.

திடீரென வான்மதியின் பார்வை ஓரிடத்தில் நிலைக்கலாயின. அதுவொரு அழகிய சின்ன மலர் மனதைக் கொள்ளை கொள்ளும் அழகில் ஒரு மழலையின் புன்னகை போல் புன்னகைத்துக் கொண்டிருந்தது. அந்த மலர் மலர்ந்ததைக் கண்டு வான்மதி ஆச்சரியப்படவில்லை.

ஆனால் அந்த மலர் மலர்ந்துள்ள சூழ்நிலையைக் கண்டு மெய்மறந்து விக்கித்துப் போனாள். உயிரற்று முட்கள் நிறைந்து காணப்பட்ட மரத்தில் அந்த மலரின் கொடியானது தன்னுடலைப் பலவாறு வளைத்து நெளித்து சுழித்து ஒவ்வொரு முள்ளிடமும் இருந்து தன்னுடலைப் பாதுகாத்துப் போராடி ஓர் அழகிய சின்ன மலரை மலரச் செய்துள்ளது. அதைப் பார்க்கும் போதுதான் வான்மதிக்கு அதிர்சியாகவும் ஆச்சரியமாகவும் இருந்தது. மீண்டும் மீண்டும் அம்மலரின் அழகையும் கொடியின் பிணைப்பையும் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு ஏதோ சிந்தனை வயப்பட்டவளாய் தன்னுடைய வாழ்க்கையின் பாதையைத் தான் கடந்து வந்த அந்தத் துன்பமான மேடுகள் பள்ளங்கள் கரடு முரடான தடைப்பாறையாகத் தான் அடிபட்டு விழுந்து இரத்தம் சிந்திக் கண்ணீர் வடித்து இன்னுமே காயாமல் ஈரலிப்பாய் இருக்கும் தன் வாழ்க்கைச் சுவடுகளை மீண்டும் ஒருமுறை இரை மீட்டிப் பார்க்கின்றாள்.

வான்மதி பிறந்து மூன்று மாதத்திலே தன் தாயை இழக்கும் பாவியாகிவிட்டாள். தாயை இழந்தவளுக்கு இவ்வளவு விரைவில் தந்தையையும் தந்தையின் அன்பு, பாசம், அரவணைப்புக்களையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து அப்பா என்று உரிமையோடு அழைக்கும் அந்தச் சொல் சித்தியின் வரவால் சிறிது சிதைந்து போனது. வான்மதியின் வாழ்வில் துன்பமே குடிகொண்டது. விதியின் வலையின் வசமாகச் சிக்கிக் கொண்ட மீன் போல் தன் சித்தியின் எடுபிடிக் கொடுமைக்கு விதிவசமானாள். அவளின் தந்தையோ சித்தியின் பின்னால் காலைச் சுற்றிய பாம்பு போல் முந்தானையை பிடித்துக் கொண்டு கண்ணே பொன்னே மானே மயிலே என்று சித்தியின் அதிகாரத்துக்கு அடங்கிப் போய்விட்டார்.

வான்மதிக்கு ஐந்து வயதாகும் முன்னரே சித்தியும் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாகி விட்டார்.



தனக்குத் தம்பி, தங்கை கிடைத்து விட்டார்கள் என்ற சந்தோசத்திலும், தனக்குத் துணையாக இருவர் இருக்கிறார்கள் நாங்கள் இனி மூன்று பேரும் சேர்ந்து ஆடலாம், பாடலாம், விளையாடலாம் என்று குழந்தை வான்மதியின் பிஞ்சு உள்ளம் சிறு வண்டுபோல் சந் தோசத்தில் கற்பனைக் கோட்டை கட்டிப் பறந்தாள். இருந்தும் என்ன பயன். அவர்கள் வளர வளர வான்மதி வெறுக்கப் பட்டாள். தன் குழந்தைகளைப் பார்க்கக் கூடாது, பேசக்கூடாது, சேரக்கூடாது என்று கட்ட ளையும் இட்டுவிட்டாள். அதுமட்டுமன்றி அடுப்பங் கரையும் சமைக்கும் இடமுமே அவ ளுக்கு நிரந்தரமாகி விட்டது. வான்மதி தான் கட்டிய எண்ணக் கோட்டை மண் கோட்டையாகச் சரித்ததை நினைத்து வேதனைப் பட்டாள். தன் தாயை நினைத்து நினைத்து அழலானாள்.

கண்ணீரே அவளுக்கு நிரந்தரமாகியது. அவளின் பிஞ்சு உள்ளம் நஞ்சாய் மாறியது. பூப்போன்ற கள்ளம் கபடம் இல்லாத கண் ணாடி போன்ற சின்ன மனம் கல்லில் விழுந்த கண்ணாடி போல் நொறுங்கிச் சிதறுண்டு போனது. சித்தி தன் பிள்ளைகளை அள்ளி அணைத்து அர வணைத்து அன்புடன் பேசியதை பார்த்துப் பார்த்துத் துடித்தாள். பாசத்திற்காய் தவித்தாள். அன்புக்காய் ஏங்கினாள். பாவம் வான்மதி என்ன செய் வாள்..? அவளது ஆசைகள், தவிப்புகள் எல்லாம் வானத்து நிலவாகவே இருந்தது. அன்பை எதிர்பார்த் தாள் அதிகாரமே அவளுக்குக் கிடைத்தது.

இவ்வாறு இருக்கும்போது தான் சித்தியின் அக்கா குடும்பம் ஒரு நாள் சித்தி வீட்டுக்கு வந்தார்கள்

(16 ஆம் பக்கம் பார்க்க)

செ.மனோராதா
திருக்குடும்பக் கன்னியர் மடம், மானிப்பாய், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதச்சுவடு



பெண்ணே!..
நீ கடற்கரையில்
நடந்து செல்கையில்
உன் பாதங்கள்
உருவக்கிய
உலக அதிசயத்தை!.....
கடல்....
தொட நினைத்து அதை
அழித்ததை எண்ணி
உன் காலடியில்
மன்னிப்பு கேட்பது
தெரியவில்லையா
அலைகளாக...

- மைதிலி

## அரை மனிதன்

ஆடை இல்லா
மனிதன்
மட்டும்
அரை மனிதன்
அல்ல
காதல் இல்லா
மனிதனும் கூட...

- நீலா.

## காதல் கொலைகாரி



- ரித்தன்

அலை கடலை நீ பேசிய
வார்த்தைகளுக்கு
அணை கட்ட முடியாத
அரசன் நான்...

என்னை காதல் கொலை
செய்தவள் நீ பாவம்
தண்டனை மட்டும் எனக்கு...

அடி பெண்ணே எத்தனை நாள்களாய்
உனக்குள் இந்தத் திட்டம்
குற்றம் செய்தவனை விட
குற்றம் செய்ய தூண்டிய உனக்கே
தண்டனை தரவேண்டும்...

தீர்ப்பை மாற்றி எழுத முடியாமல்
தவிக்கும் நீதிபதியும் நானே
தண்டனை அனுபவிக்கும் குற்றவாளியும்
நானே

## உண்மை

இறைவா நீயும்
காதலித்து இருப்பாயோ!
பின் எதற்காக
பூமி சுற்றிக் கொண்டே
இருக்கிறது,
காற்று உலாவிக்
கொண்டே இருக்கிறது,
பூ வாடி கொண்டே
இருக்கிறது...

- நிஷான்.



## உண்மையை சொல்லுங்கள்

ஜாதி
மதம்
மொழி
அந்தஸ்து
வேலை
அழகு
காமம்
பணம்
குடும்ப பின்னணி
இவை எல்லாவற்றுக்கும்
அப்பாற்பட்டதுதான் காதல்
என்கிறான் நண்பன்....

பிறகு,
காதலில்
என்னதான் இருக்கிறது...???

அளவு கடந்த அன்புதான் காதல்
என மீண்டும் வாதிடுகிறான்....

அதற்கு
ஒரு பூனைக்குட்டியோ
நாய்க் குட்டியோ
போதாதா
நண்பர்களே,தோழிகளே...???
உண்மையை சொல்லுங்கள்...

- வீணா.

## உலக அதிசய அழிவு

இனியவளே...
நீ ஒவ்வொரு
முறையும்
நகத்தை வெட்டும்
பொழுதும்
உலக
அதிசயங்களில்
ஒன்றை
அழிப்பதாகத்தான்
நான்
நினைக்கிறேன்....

-குமரன்

## எது தவறு

பெயர் வைப்பதில் பெரியவன்
மனிதன் தான்...

கடவுளுக்கும் பெயர் வைத்த
பெருந்தகை இவன்...

அடையாளம் கண்டு கொள்ள
பெயர் அவசியம் இவனுக்கு...

பிறக்கும் போதே பெயரோடு
பிறந்தவன் இல்லை மனிதன்...

இயற்கைக்கு எல்லாம்
பெயர் வைத்தவன் இவன் தான்...

பெயரில்லாமல்
ஒருவன் வாழ்ந்தால்...

பெயரில்லாதவன் என
அவனுக்கும் பெயர் வைப்பான்...

காலப்பெயர்...
காதல் பெயர்...
ஞானப்பெயர்...
காலப்பெயர் மனிதனை
பிரியவைகள்...

காதல் பெயர்
இங்கேதான் இவன்
விருப்பப்படி...
மனிதர்களுக்கும்...
உறவுகளுக்கும்...
கண்டுபிடிப்புகளுக்கும்...
கனவுகளுக்கும்...
பெயர் வைத்துக் கொண்டான்...

ஞானப்பெயர்
பயணம் முடிந்து..
பாதை முடிந்து..
நரைத்துப் போகும் நேரத்தில்..
ஏற்கனவே வைத்த
பெயரெல்லாம்...
இப்போது
தவறாகத் தெரியும்...

இது பல பேருக்குத்
தெரிவதே இல்லை...

எப்படியோ
பிறப்பு முதல்
இறப்பு வரை
பெயர் அவசியமாகிறது...
பெயர் என்பது
அடையாளம் தானே தவிர
அடைக்கலம் இல்லை...

பெயரில் மரியாதை
பார்ப்பது கூடாது...
அம்மாவுக்கு மட்டும்
கடைசி வரை
தெரியாமல் போனது...

'அப்பாவின் பெயரைச்
சொல்வதில் தவறில்லை'
என்று...

- மனோகலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிக்கப்படும் கரையோரங்களும் பிடுங்கப்படும் கடலுரிமையும்

ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

ஆனை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே எனத் தமிழில் ஒரு பழமொழி உண்டு. காலப்போக்கில் பஸ் வரும் முன்னே சிங்களக் குடியேற்றம் வரும் பின்னே என்றொரு பழமொழி வழக்குக்கு வந்தாலும் ஆச்சரியப்பட எதுவுமில்லை.

அண்மையில் பருத்தித்துறைக்கும் தேவேந்திரமுனைக்கும் இடையே ஒரு பஸ் சேவை ஆரம்பிக்கப்படப் போவதாகவும் தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடனேயே இந்தத் திட்டம் தொடங்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

நாளாந்த பஸ் சேவைகளைச் சீராக நடத்தவே பருத்தித்துறை பஸ் டிப்போவுக்குப் பஸ்கள் போதாத நிலையில், பஸ் விட்டுத் தேசிய ஐக்கியத்தைக் கட்டி வளர்க்கும் திட்டம் ஏன் முன்வைக்கப்படுகிறது என்பதுதான் புரிந்து கொள்ள முடியாத புதிராக உள்ளது. இந்த வழித்தடத்தில் ஒரு சிலர் கதிர்காமத் திருவிழா நாள்களில் அதாவது வருடமொருமுறை சென்று வருவதுண்டு. அதைவிடப் பருத்தித்துறைக்கும் தேவேந்திரமுனைக்குமிடையிலான உறவு முறைத் தொடர்போ அல்லது வர்த்தக, கலாசாரத் தொடர்போ எதுவுமே கிடையாது. அப்படியான நிலையில் இப்படி ஒரு பஸ் சேவைக்கான தேவை ஏன் எழுகிறது?

### பிளாஷ்பாக்

சில வருடங்கள் பின்நோக்கிப் பார்ப்போமானால் இந்தப் பஸ் சேவை, ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட, இனி ஆரம்பிக்கப்படவுள்ள பஸ் சேவைகளின் உள் நோக்கங்களைப் புரிந்து கொள்ள முடியும். இதன் பின்னால் நீண்டகால அடிப்படையில் தமிழ்ப் பிரதேசங்களைச் சிங்கள மயப்படுத்தும் நோக்கமும் சிறிது சிறிதாக அரித்து தமிழ் நிலங்களை அபகரிக்கும் நோக்கமும் உள்ளடங்கியிருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொக்கிளாய் ஒரு பாரம்பரிய தமிழ் விவசாயக் கிராமமாகும். குளக்கோட்ட அரசன் காலம் முதல் தென்னை மரவாடி என்ற தனித்துவமான வன்னிமையின் ஒரு பகுதியாக இது விளங்கி வந்தது.

1983 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்தில் நீர்கொழும்பிலிருந்து சில மீனவர்கள் வந்து வாடியமைத்து சில மாதங்கள் அங்கு தங்கி மீன் பிடித்துச் செல்வ துண்டு. வருடத்தில் மூன்று அல்லது நான்கு மாதங் களே அவர்கள் அங்கு தங்கியிருப்பர்.

1983 இனக் கலவரத்துடன் இம்முறை நின்று போனது. பின்பு இரண்டு மூன்று வருடங்கள் கழித்து மீண்டும் தொழில் ஆரம்பிக்கப்பட்டுச் சிங்களவர்கள் வந்த போது நீர்கொழும்பு, காலி ஆகிய பிரதேசங்களிலிருந்து சம்மாட்டிகள் வர ஆரம்பித்தனர். ஆனால் சீசன் முடிந்து சம்மாட்டிகள் போகும் போது அவர்களுக்குக் கூலிகளாக வந்த மீனவர்கள் அங்கேயே குடிசை போட்டுத் தங்கி கடலேரி மீன்பிடியில் ஈடுபட்டனர்.

கொக்கிளாய்க்கும் நீர்கொழும்புக்கும் நேரடியாகவே பஸ் ஓட ஆரம்பித்தது. குடியேறும் சிங்களவர்களின் தொகையும் அதிகரித்தது. காலப்போக்கில் மீனவர் குடியேற்றங்கள் என்ற பேரில் சிங்கள மீனவர்கள் அங்கு நிரந்தரக் குடியேறிகளாக்கப்பட்டனர். கொக்கிளாய் ஆலயப் பங்கு ஆதிக்கத்தையும் தங்களுக்கென அபகரித்துக் கொண்டனர்.

அடிக்கடி கொக்கிளாய் விவசாயிகளின் மாடுகள் இறைச்சிக்காகக் களவாடப்படுவது தொடர்பான பிரச்சினைகளில் இரு பகுதியினருக்கும் முறுகலும் மோதல்களும் ஏற்பட்டதை அடுத்து இராணுவ முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

இதையடுத்து சிறு சிறு சம்பவங்களை வைத்துத் தமிழ் இளைஞர்கள் வேட்டையாடப்பட்டனர். மோதல்களும் விஸ்வரூபம் எடுத்தன. 1994 இல் அங்கிருந்த தமிழ்மக்கள் முற்றாகவே அரச படைகளால் வெளி யேற்றப்பட்டனர்.

இன்று கொக்கிளாய் தனிச் சிங்களக் கிராமம். தென்னை மரவாடி என்ற வன்னிமை இருந்தமைக்கான அடையாளங்கள் கூட அழிக்கப் பட்டுவிட்டன. கொக்கிளாயில் மீன்பிடி உரிமை முற்றுமுழுதாகவே சிங்களவர் கைக்குப் போய் விட்டது.

இது கொக்கிளாய்க்கும் நீர்கொழும்புக்கும் பஸ் விட்ட கதை. இதேபோன்று நாயாறுக்கும் நீர் கொழும்புக்கும் பஸ் விடப்பட்டு அங்கும் சிங்கள மீனவர்களின் ஆதிக்கம் மேலோங்கியது. ஆனால் போர் காரணமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை.

### எதிர்காலத் திட்டம்

இப்படியான ஒரு நிலையில்தான் பருத்தித்துறை தேவேந்திரமுனை பஸ்சேவை ஆரம்பிக்கப்படுகின்றது.

இது முழு வடபிராந்தியக் கடலையும் சிங்கள ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வரும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் ஒரு நீண்ட கால வேலைத் திட்டத்தின் ஒரு பகுதிதான் என்பதற்கான சான்றுகளை உற்று நோக்கினால் அவதானிக்க முடியும். இன்னும் சொல்லப்போனால் வடபகுதி மீனவர்களால் காலம் காலமாகப் பேணப்பட்ட கடலுரிமையைப் பறிக்கும் ஒரு படுமோசமான நடவடிக்கையின் ஆரம்பம்தான் இது.

> கேவலம் என்னவென்றால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ, ஈ.பி.டி.பியினரோ அரசுடன் இணக்க அரசியல் நடத்திக் கொண்டு இவை பற்றி வாயே திறக்காமல் மறைமுக ஆதரவு வழங்கி வருவதுதான்.

கொக்கிளாய் தொடக்கம் கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு, பொக்கணை, சுண்டிக்குளம், பருத்தித்துறை, மயிலிட்டி, நெடுந்தீவு, பூநகரி, மூன்றாம்பிட்டி, தலைமன்னார், மன்னார், சவுத்பார் அரிப்பு, குதிரைமுனை எனக் கற்பிட்டி வரையான கடற் பிரதேசம் அதிக மீன் விளைச்சல் தரும் கண்டத் திட்டுக்களைக் கொண்ட பகுதிகளாகும். இந்தப் பகுதிகளில் காலம் காலமாகத் தமிழ்மக்களே தொழில் செய்து வந்தனர்.

இன்று இந்தக் கடற்பிரதேசங்கள் தமிழ் மக்களிடமிருந்து திட்டமிட்டுப் பறிக்கப்படும் அபாயம் தோன்றி யுள்ளது. முன்பு ஒரு காலத்தில் புறக்கோட்டை மீன் சந்தை அதிகாலையில் மயிலிட்டி, முல்லைத்தீவு மீன் லொறிகளுக்காகக் காத்திருக்கும் ஒரு நிலைமை இருந்தது. அதுமட்டுமன்றி சுண்டிக்குளம் இறால் இலங்கைக்கு அந்நியச் செல வாணியை ஈட்டிக் கொடுத்தது. இவ்வாறே நவாந் துறை, பள்ளி முனை ஆகிய பகுதிகளில் பிடிக்கப்படும் கடல் அட்டைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

### தடைகளும் கொலைகளும்

ஆனால் போர் காரணம் காட்டப்பட்டு எமது மீனவர் கள் கடலில் இறங்கி மீன் பிடிப்பது கடற்படையினரால் தடை செய்யப்பட்டது. மீறிக் கடலில் இறங்கியவர் களில் பலர் கடற்படையினரால் சுடப்பட்டுச் சடலங் களாகக் கரையொதுங்கினர். பல கரையோரக் கிராம மக்கள் பீரங்கித் தாக்குதல்கள் காரணமாகத் தங்கள் கிராமங்களை விட்டு வெளியேறினர். இன்னும் பல மீனவக் கிராமங்கள் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் மக்கள் சூனியப் பிரதேசங்கள் ஆக்கப்பட்டன.

இன்று போர் முடிந்து இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. கடலில் எமது மக்கள் தொழில் செய்யப் பாஸ் நடைமுறை, கடற்படை ரோந்துகள் எனப் பல வித இடையூறுகள் விளைவிக்கப்படுகின்றன.

அதுமட்டுமன்றி இன்னும் பல கரையோரக் கிராமங்களில் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரிலும் கண்ணி வெடி அகற்றப்படவில்லை எனச் சொல்லப்பட்டும் தமிழ் மக்கள் குடியேற்றப்படவில்லை. அவர்கள் சுதந்திரமாகத் தமது கடற்தொழிலை மேற்கொள்ள அனுமதிக்கப்படவுமில்லை.

ஆனால் கரையோரமாக உள்ள பிரதான வீதிகளிலிருந்து ஏராளமான குறுக்கு வீதிகள் காட்டுப் பக்கமாகப் போடப்படுகின்றன. காட்டுக்குள் சகல வசதிகளுடனும் கூடிய குடியிருப்புகள் அமைக்கப் படுகின்றன. இவை இராணுவத்தினருக்கான குடியிருப்புகள் எனக் கூறப்படுகின்றன. உண்மையில் நடக்கப் போவது மீனவர்களைப் பெற்றோர்களாகக் கொண்ட இராணுவ வீரர்களின் குடும்பங்கள் இந்தப் பகுதியில் குடியேற்றப்படவுள்ளன.

### அரசின் திட்டம்

அவர்களுக்குச் சகல விதமான வளங்களும் அவர்கள் கடற்றொழில் செய்ய வழங்கப்படும். இதன் மூலம் அரசு இரு விடயங்களை நிறைவேற்ற முயல்கிறது. ஒன்று சிங்களக் குடியிருப்புகள் மூலம் எமது மண்ணைச் சிங்கள மயப்படுத்தி எமது நில உரிமையைச் சிதைப்பது. மற்றது கடற்படையின் உதவியுடன் இங்கு குடியேற்றப்படும் சிங்களவர்கள் வடபகுதிக் கடல் வளத்தைக் கைப்பற்றுவது, பருத்தித்துறைக்கு - தேவேந்திரமுனைக்குப் பஸ் விடுவது இந்த நோக்கத்தின் ஒரு ஆரம்ப நடவடிக்கைதான்.

இது மட்டுமல்ல திருமலையிலிருந்து முல்லைத் தீவு வரை பெரும் பெரும் பாலங்கள் அமைக்கப்பட்டு வீதி ஜப்பானிய உதவியுடன் நவீன மயமாக்கப்பட வுள்ளது. ஏற்கனவே வாழைச்சேனையிலிருந்து திருமலை வரையான பாதை பெரும் பாலங்கள் அமைக்கப்பட்டுச் செப்பனிடப்பட்டு வருகின்றது.

அதாவது தென்னிலங்கை சிங்களக் குடும்பங்கள் ஏ-9 வீதிக்கு வராமலே கரையோரப் பாதையூடாகவே தங்கள் தொடர்புகளைப் பேணக் கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமன்றி அறுகம்பை, பாசிக்குடா போன்ற சுற்றுலா மையங்களின் விஸ்தரிப்பும் குச்சவெளியில் அமைக்கப்படவுள்ள சுற்றுலா விடுதித் தொகுதியும் ஒரு இயல்பான சிங்களக் குடியேற்றங்களுக்கு வழி திறந்துவிடும்.

அதுபோன்றே வடக்கில் முல்லைத்தீவு, முள்ளி வாய்க்கால், சுண்டிக்குளம், மயிலிட்டி போன்ற பகுதிகளில் இராணுவக் குடியிருப்புகள் என்ற பேரில் எமது நில உரிமையும் கடலுரிமையும் பறிக்கப்பட வுள்ளன.

### வடக்கும் அபகரிக்கப்படும்


மட்டக்களப்பில் ஒரு அம்பாறை உருவாக்கப் பட்டது போல் திருமலை மாவட்டத்தில் ஒரு சேருவில உருவாக்கப்பட்டது போல் வடக்கிலும் பல அம்பாறைகளும் சேருவில-களும் தோன்றும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதில் கேவலம் என்னவென்றால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ, ஈ.பி.டி.பியினரோ அரசுடன் இணக்க அரசியல் நடத்திக்கொண்டு இவை பற்றி வாயே திறக்காமல் மறைமுக ஆதரவு வழங்கி வருவது தான். மீனவர் சங்கங்களின் ஒன்றியத் தலைவர்கள், தமிழக மீனவர்களுக்கும் வடபகுதி மீனவர்களுக்கு மிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் ஏற்படுத்த முனைகின்றனரே ஒழிய இந்தப் பெரும் ஆபத்தையிட்டு அக்கறைப்படுவதில்லை.

தனிப்பட்ட சலுகைகளுக்காகத் தமிழினத்தையே விற்பவர்களால் வேறு எதைத்தான் செய்ய முடியும். எனவே அபிவிருத்தி என்ற பெயரில் எமது நிலவுரிமையும் கடல் வளமும் பறிக்கப்படுவது தொடர்பாக மிகவும் விழிப்புடன் இருக்கவேண்டும். வெள்ளம் வரும் முன்பே அணை கட்டுவதே சிறந்த வழியாகும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 172




அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1.அமெரிக்காவுக்குத் தலையிடியாக இருந்தவர் இவர்.
3. நீரில் அமிழாதது
4.கனிக்கு முந்தியது.
7. ஆதாரம்/ ருசு
8. ஆதாயம்
10. உரிய பொருத்தப்பாடு
12. மாலை
13. கண்ணகி காட்சியளிப்பது இந்தக் கோலத்தில்
14. காலம் பூப்பெய்துவதையும் குறிக்கும்
15. உடுப்பு
16. மறி
17. இஸ்லாமியர் போற்றுவது இவரை
19. கிறிஸ்தவர்களின் புனித நாள்கள்
21. மாவரைக்கப் பயன்படுவது
22. திங்கள்

### மேலிருந்து கீழ்

1. தோழன்
2. தமிழரின் இனப்பிரச்சினை விவகாரம் பேச்சு இந்த நாட்டிலும் நடந்தது.
3. தொட்டால் அதிர்ச்சி தரும்
4. துஷ்டத்தனம் உடையவன்
5.மகள்
7. ஏவுகணை வகை
9. நாயகன்
11. ஒன்று சேர்தல்
12. கற்பு மிக்கவள்
13. மறிப்பு
15. துலா தாங்கும் மரம்
166. பொருத்தமான
17. தாய்
18. மாடுகளின் குதிரைகளின் சப்பாத்து

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 170 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) சங்கதி (4)கதவு (6)வியாபாரம் (8)தக (10)கர்ப்பம் (11) மிருகம். (13)பாதி (14) மாடி. (15)நன் (17) இதிகாசம். (19)கண். (20)ரதி (21) உண்ணி. (22) குடம் (23)மண்ணில்.

### மேலிருந்து கீழ்

(1)சப்தமி (2)கவி. (3)தியாகம். (4)கரப்பான் (5)தம்பதி (7) பார் (9)கருமாதி. (12)கடிகாரம் (15) நம் (16)விண்ணில் (17)இங்கு (18) சதி (19)கண்ணி. (21)உண்.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 170 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **ஜே.கொலஸ்ரீன்**, யா/ மத்திய மகா வித்தியாலயம், வயாவிளான்.

2 ஆம் பரிசு — **வி.பத்மாவதி,** சம்புளியவத்தை, வல்வெட்டித்துறை.

3 ஆம் பரிசு — **நர்மதா பரஞ்சோதிநாதன்,** இல. 16/1, கைலாய பிள்ளையார் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

4 ஆம் பரிசு — **ரதீஸ்கந்தராசா மல்லிகாதேவி,** சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

5 ஆம் பரிசு — **பே.ஆரோக்கியமேரி,** 6 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

### பாராட்டுப் பெறுவோர்

**சி.பரமேஸ்வரஜெயம்,**
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

**செல்வி ஐ.திரிசாள்,**
இல.M/ 22 A , நாவலடி ஒழுங்கை, வண்- வட மேற்கு, யாழ்ப்பாணம்.

**செ.சுதாகர்,**
இல.17/ A தவசிக்குளம், வவுனியா.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.
யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 172**
*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 03.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலை மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.172 க்கான விடைகள் 07-08-2011 ஞாயிறு உதயனில் ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

# முள்ளுக்குள்...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித்தியின் இரண்டு பிள்ளை களுக்கும் நிறைய விளை யாட்டுப் பொருள்கள் கொண்டுவந்து கொடுத்தார்கள். அவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அவளுக்கு கண்ணீர் கடலாகப் பெருகி வழியத் தொடங்கிவிட்டது. இதனைப்பார்த்த சித்தியின் அக்கா வான்மதியையும் அழைத்து எனக்கும் ஒரு பொம்மையைத் தந்தார்.

வான்மதி சந்தோசத்தின் உச்ச எல்லைக்கே சென்று விட்டாள் இன்றுதான் அவள் பிறந்தது முதல் என்னைப் பார்த்திருந்தாள் குழந்தை உள்ளம் குதூகலிக்கத் தொடங்கிவிட்டது. அந்தச் சந்தோசத்திலே அன்று இருந்த சுமையான வேலையும் அவளுக்கு இலகுவாகவே இருந்தது.

வான்மதியின் இந்தச் சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் இந்தச் சின்ன வயதில் அவள் செய்யும் வேலைகளையும் பார்த்த சித்தியின் அக்காவுக்கு என்ன எண்ணம் தோன்றியதோ தெரியவில்லை விடை பெற்றுக் கொள்ளும் வேளையில் வான்மதியை தன்னுடன் அனுப்புமாறும் தான் கொண்டு சென்று வளர்க்கப் போவதாகவும் சித்தியிடம் கேட்டு விட்டாள்.

முதலில் மறுத்த சித்தி பின்னர் என்ன எண்ணினாளோ? ஒப்புக் கொண்டு விட்டாள். வான்மதியின் தந்தையும் இதற்கு உடன்பட்டதை எண்ணும்போது வான்மதியே பொம்மையாகி விட்டாள்.

ஆனாலும் மனதில் கொஞ்சம் சந்தோசம் ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது. இந்த மகிழ்வற்ற சூழலில் சித்தியிடம் இருந்து தனக்கு விடுதலை கிடைத்து விட்டது என்று எண்ணிச் சந்தோசப் பட்டவளாகச் சுவாமி அறையில் தூசு படிந்திருந்த தன் அன்னையின் படத்தைக் கழற்றிக் கொண்டு தம்பியையும் தங்கையையும் இறுதியாக ஒரு முறை பார்த்துப் புன்னகைத்து விட்டு விடைபெற்றுக் கொண்டாள்.

ஆனாலும் காலதேவனின் காலக்கெடு அவளை விட்டபாடில்லை. விதி சித்தியின் அக்காவுடன் சென்றவளுக்குப் புதிய இடமும் புதிய முகங்களும் புதிய சூழலும் என்று கண் பார்க்கும் எல்லாமே புதுமையாகக் காணப்பட்டது. சித்தியின் அக்காவின் வீடு பஸ்தரிப்பிடத்துக்குச் சற்று அருகில் நகர்ப் புறத்திலே காணப்பட்டது. விடுதி போன்று பல அறைகளைக் கொண்ட பெரிய வீடாகவே இருந்தது. ஆனால் அந்தப் பெரிய வீட்டில் சித்தியின் அக்காவும் பிள்ளைகளும் மட்டுமே இருக்கின்றார்கள். கணவர் இறந்து பல வருடங்களாகி விட்டன. அதனால் சித்தியின் அக்கா கிராமப்புறங்களில் இருந்தும் தூர இடங்களில் இருந்தும் வரும் வாடிக்கையாளர்களுக்கு தங்குமிடம் வசதி, உணவு போன்றன கொடுத்து அதற்குரிய பணத்தைப் பெற்று வாழ்ந்தார் அதிலும் தங்குவதற்கு மூன்று நாள்களுக்கு மேல் அனுமதிப்பதில்லை என்று அறிவித்தல் போடப்பட்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையிலே, வான்மதி அங்கு வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அத்துடன் வாடிக்கையாளருக்குத் தேவையான உணவு, அவர்கள் கேட்கும் பொருள்கள் தேவைப்படும் நேரத்துக்கு ஏற்ப தயார் செய்து கொடுக்க வேண்டிய பொருள்கள் , அவர்கள் வரும் முன்னரும் சென்ற பின்னரும் அவர்கள் பாவனைக்குப் பயன்படுத்திய அனைத்தும் தூய்மைப்படுத்தி மீண்டும் எதிர்பார்க்கும் தன்மைக் குரியனவாக அவை வைக்கப்பட வேண்டும். சின்னவளான வான்மதி சின்னக் கைகளால் செய்யும் அளப்பரிய வேலைக்கும் சித்தியின் அக்கா குறை சொல்லி குற்றம் கூறிக் கொண்டே இருப்பார். யார்மீதும் உள்ள வெறுப்புக் கோபங்களுக்கும் வான்மதியே உள்ளாக வேண்டிய நிலை தோன்றலாயிற்று.

நாளுக்கு நாள் அதிகாரமும் வேதனை தரும் வார்த்தைகளும் வான்மதியைத் தொடர்ந்தன. வான்மதிக்கு வாழ்க் கையே வெறுத்துவிட்டது. தன்னைத்தானே நொந்து கொண்டாள். இரக்கமே இல்லாத மனித உள்ளங்களை நினைத்து வேதனைப்பட்டாள். உப்புச் சப்பு இல்லாத உணவு போல் வான்மதியின் வாழ்வும் துன்ப துயரங்களைச் சுமந்தவையாகவே ஓடிக்கொண்டிருந்தது. வான்மதியும் வளர வளர வருகின்ற வாடிக்கையாளர்களின் கழுகுக் காமக் கண்களும் வான்மதியை சில சமயங்களில் கொத்தித் தின்னும்படியாக பார்க்கலாயின. வான்மதி வாழ்வதை விட இறப்பதே மேல் என எண்ணினாள்.


ஆனாலும் முடியவில்லை. வழி தெரியாமல் சில முயற்சிகளை செய்தும் பலன் கிடைக்காத போது அவ்வாறான தற்கொலை முயற்சிகளை கைவிட்டாள். ஒவ்வொரு நாளும் உயிரை விட மானத்தைக் காப்பாற்றுவதற்கு அவள் வாழ்வும் போராட்டமாக அமைந்துவிட்டது. திடீரென ''வான்மதி வான்மதி'' என்ற குரல் கேட்டு சிந்தனை கலைந்தவளாக ''இதோ வாரேன் சித்தி'' என்று கண்களில் கண்ணீர் சிந்த எழுந்து கொண்டாள்.

அப்போது இங்கும் அதேபோல மலர்க்கொடி ஒன்று முட்செடிகளின் நெருக்குதலுக்கும் மேலாக உயர்ந்து; மலர்கள் பல சூடிச்சிலிர்த்து ஆடி அசைந்தன. அழகிய பூங்கொடி போல் துன்பமும் துயரங்களும் எங்கும் எப்பொழுதும் எல்லோருக்கும் இருக்கவே செய்கின்றன. அவற்றை எதிர்கொண்டு வென்று வாழ்வதன் மூலமே மகிழ்ந்து நிலைத்திருக்க முடியும்.

அந்த மலர்களின் அழகும் மணமும் அந்த இடத்திற் பரவிப் பரவசமூட்டியது. அதைப் பார்த்த வான்மதியின் மனத்திலும் ஒரு மகிழ்ச்சியும் சுறுசுறுப்பும் மலர்ந்தது. உற்சாகமாகத் துணிவும் கனிவும் சேரத் தன் மனத்தில் உறுதியை வரவழைத்துக் கொண்டவளாய் வாழச் சிறகடிக்கும் பறவையாய் பறந்தாள். அவளது இளமையும் எழிலும், சித்தியின் அன்புக்குள் மலர்வதாக அவளுக்குத் தோன்றியது. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வி.லோகினி, தரம்10 ஏ,
யாழ்.ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.




அ.சோபிஜன்,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.



எஸ்.அனுஜன், தரம் 6 ஈ,
யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி.




வி.மேரிகில்டா, தரம் 8,
யாழ்.சென்.தோமஸ்.றோ.க.பெண்கள் பாடசாலை



பா.தர்மிகா, தரம் 3
யாழ். கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி



ச.தர்சன், தரம் 5,
அ.மி.த.க.பாடசாலை, வல்வெட்டித்துறை.

## என் மனதில் உள்ளது



என் பெயர் மாது
நான் வீட்டில் சாது
என் மனம் வெறும் கோது
நான் விடுவதில்லை தூது

அம்மா சொல்வார் தினமும் திருமுறை ஓது
எனக்குத் தெரியாது சூது
என்னிடம் இருக்கும் திறமை ஏது
அதை சிந்தித்துப் பார்க்கிறேன் இப்போது

நான் அறிவொளியாய் வருவேன் எப்போது
காலம் கடந்துவிடும் அப்போது
என் ஆசைகள் நிறைவேறும் போது
மனதிலே உற்சாகம் தாங்காது.

சி.மாதுரியா, 4பி,
யா/சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை.

## அதிசய உண்மைகள்

- உலகிலேயே மிக நீளமான சுரங்கப்பாதை ஜப்பானில் உள்ளது.
- மனித மூளை ஆயுள்காலத்தின் பத்துக்கோடி செய்திகளைச் சேமித்து வைக்கும் திறன் கொண்டது.
- திமிங்கலத்தின் வாயில் நரம்புகளே இல்லை.
- முதன்முதலில் காகிதத்தை உருவாக்கியவர் சீனாவைச் சேர்ந்த சாய்லூன் என்ற அறிஞராவார்.
- குரங்குகள் மற்றைய பிராணிகளை விட அதிக மூளை வளர்ச்சி பெற்றவை.

சா. பபிதா, தரம் 8'ஏ'
யாழ்.கோண்டாவில் இராமகிருஸ்ணா மகா வித்தி

## நவலோகங்கள்

- பொன்
- இரும்பு
- தாமிரம்
- ஈயம்
- வெள்ளி
- நாகம்
- துத்தநாகம்
- கஞ்சம்
- பித்தளை

## குமாரியை வாழ வைத்த கோழி



ஒரு ஊரில் கோழி ஒன்று வசித்து வந்தது. அந்தக் கோழிக்கு ஒவ்வொரு நாளும் உணவு கொடுத்து குமாரி வளர்த்து வந்தாள். அந்தக் கோழியும் குமாரிக்கு முட்டை இட்டுக் கொடுக்கும். ஒரு நாள் குமாரி தனது அம்மாவைப் பார்க்கச் சென்றதால் கோழிக்கு உணவு கொடுக்க மறந்துவிட்டாள். பசியால் சோர்ந்து உணவு தேடி அங்குமிங்கும் அலைந்த கோழி ஓரிடத்தில் பார்த்த பொழுது ஏதோ மினுமினுத்ததால் அதன் அருகில் சென்று பார்த்த போது அங்கு தங்கம் கிடந்ததைக் கண்டது. அதைப்பாரத்த கோழி ''நீ யாராவது மனிதருடைய கையில் கிடைத்திருந்தால் பயனாக இருக்கும்'' என்று கூறிக்கொண்டிருக்கும்போது குமாரி தனது அம்மாவைப் பார்த்துவிட்டு வந்து கொண்டிருந்தாள். கோழி தங்கத்தை தனது சொண்டினால் தூக்கிக்கொண்டு போய் குமாரியின் மடியில் போட்டது. அதைப்பார்த்த குமாரி சந்தோசமடைந்து அந்தத்தங் கத்தை விற்று செல்வச்செழிப்போடு வாழ்ந்ததோடு கோழியையும் நன்றியுணர்வோடு நன்றாகப் பராமரித்தாள்.

சி.சிலக்ஷன், 7பி, யாழ். புற்றளை மகாவித்தியாலயம்.

## சிந்தனைத் துளிகள்....

- ★ தவறுகளை ஒப்புக்கொள்ளும் தைரியமும், அதைத் திருத்திக் கொள்ளும் பலமும்தான் உண்மையான வெற்றிக்கு வழி.
- ★ இன்பத்தின் உயர் கோட்பாடு உடல் நலம். உடல் நலத்தின் உயர் கோட்பாடு உடற்பயிற்சி
- ★ உயர்ந்த உன்னதமான கடமைகளை நிறைவேற்றுவதற்காகப் பிறந்தவன் நீ என்று. எப்பொழுதும் எண்ணு!
- ★ தன்னுடைய மனதைக் கட்டுப்படுத்தித் தன்னுடைய ஆதிக்கத்தில் வைத்துக் கொள்ளும் ஆற்றலைப்பெற்றவன் விரும்பக்கூடிய எல்லாவற்றையும் அடைந்துவிடுவான்.

## விடுகதைகள்

01. அவனுக்கு வீடு, மற்றவர்களுக்கு வலை அது என்ன?
02. கண்ணீர் விட்டே கடைசி வரை ஒளி தருவான் அவன் யார்?
03. வீடு வாசல் காப்பவன், விசுவாசமாய் இருப்பவன், கடிக்கவும் மாட்டான், குரைக்கவும் மாட்டான், கதவை ஒட்டிக்கிடப்பான் அவன் யார்?
04. இருந்த இடத்தில் இருந்தபடி காலம் காட்டுவான் அவன் யார்?
05. செம்பு நிறைய சிவப்பு முத்துக்கள் அது என்ன?
06. தூக்கம் வந்தால் தானாக மூடும் கதவுகள் அவை எவை?

விடைகள்
01.சிலந்திவலை
02.மெழுகுவர்த்தி
03.பூட்டு
04.கடிகாரம்
05.மாதுளம்பழம்
06.கண்இமைகள்

கு.கஜாலி, தரம் 04 ஏ, யா புனிதஜோண்பொஸ்கோ வித்தியாலயம்

## நாடுகளும் சிறப்புப் பெயர்களும்

★ ஆயிரம் வாவிகள் உள்ள நாடு?
பின்லாந்து

★ ஐரோப்பாவின் நோயாளி எனக் கூறப்படுவது?
துருக்கி

★ மரகதத் தீவு?
அயர்லாந்து

★ இருண்ட கண்டம் எது?
ஆபிரிக்கா

★ பொற்கோபுரம் உள்ள நாடு?
பர்மா

★ 7குன்றுகள் இருக்கும் நகரம்?
ரோம்

★ தங்கப் போர்வை உள்ள இடம்?
அவுஸ்ரேலியா

சா.ஸ்ரீ.ந்துஜா, கோண்டாவில்.

## சுற்றுச் சூழலைப் பாதுகாப்போம்

இயற்கையைப் போற்ற மனிதன் கற்றுக்கொண்ட போதே நாகரீகம் தொடங்கி விட்டது. நாகரீகம் நாள் தோறும் வளர்ந்து கொண்டிக்க பண்பாடும் மாற்றம் பெற்று வருகிறது. அதே போல் இயற்கைச் சூழல் மாற்றம் பெறுவதால் அதன் மிகச்சிறந்த வளங்கள் குறைய ஏதுவாகின்றன. அறிவியலும் நாகரீகமும் வளர்ந்தாலும், பண்பாடும், பயனும் நிலைத்திருக்கப் பாடுபடுவதே இயற்கையோடு இணைந்து வாழ்வதாகும். இயற்கை சூழல் மாசடைவதற்கு முக்கிய பங்கு வகிப்பது மனிதனுடைய செயற்பாடுகளும், சூழலைப் பாதுகாப்பதற்கான அறிவின்மையும் ஆகும்.

''நீர் இன்றி உலகு ஆகாது'' என வள்ளுவர் கூறியுள்ளார். நீர் எமக்கு மட்டுமன்றி உலகில் வாழும் ஜீவராசிகளுக்கும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. நீர் மாசடைவது மனித செயற்பாடுகள் ஆகும். அவற்றில் நீர் நிலைகளில் குப்பைகளை வீசுதல், கழிவு நிரை நிர்நிலைகளுக்குள் விடுதல், வாகனங்கள், மிருகங்களை நீர் நிலைகளில் வைத்துக் கழுவுதல். கழிவு எண்ணெய்கள் நீருடன் சேருதல் போன்ற மனித நடவடிக்கைகளால் நீர் நிலைகள் மாசடைந்து விடுகின்றன.

இன்று உலகில் நிலத்தின் வலை அதிகரித்து கொண்டே செல்கின்றது.காரணம் தேவையற்ற கட்டடங்கள், தொழிற்சாலை என்பவற்றுக்காக அதிகளவு இடங்களை ஒதுக்குவதோடு இருந்த விலங்குகளை பாதைகளில் வீசதல், பொலித்தீன்களை எரித்தல் போன்ற காரணங்களால் மாசடைந்து வருகின்றது. நிலங்கள் மாசடைவதனால் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற நிலங்களாகக் காணப்படுவதில்லை இதனால் நாம் நிலத்தை பயனுள்ளவாறு உபயோகிக்க வேண்டும்.

இன்றைய உலகு ஒரு நவீனமயமாக்கலுக்கு உட்பட்டுள்ளது. அதாவது நவீன இயந்திரம், தொலைக்காட்சி, தொலைபேசி என்பவற்றைக் கூறலாம். எனவே நாம் இயற்கை சூழலை பயனுள்ள வகையில் கழித்து எதிர்கால சந்ததியினரையும் வாழவைக்கவேண்டும். விவசாயத்தில் பண்டைக்காலம் போல் இயற்கை உரத்தையும், கிருமிக்கொல்லிகளையும் பயன்படுத்த வேண்டும். காடுகளை அழிக்காமல் பல மரங்களை நாட்ட வேண்டும். கால் நடை வளம் பெருக உடனே வழிவகைகளை கையாள வேண்டும்.''அயவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு'' என்பதை நாம் இப்போது அனுபவித்து கொண்டிருக்கின்றோம் என்றே கூறலாம். இதனால் இயற்கையான எளிமையான வாழ்வை கடைப்பிடிப்பதால் மனித இனம் நிறைவான வாழ்வைப் பெற்று உய்யும் நாம் அனைவரும் இயற்கையோடு இயைந்த இனிய வாழ்வுக்கு எம்மை தயாரித்து கொள்வோமாக! நாமும் வாழ்வோம் எம்மைச்சார்ந்துள்ள பறவைகள், விலங்கினங்கள்,மரம், செடி, கொடி, போன்றவற்றையும் பாதுகாத்து வாழச் செய்வோம்.

ப.தயாளன், தரம்-9, கிளிநொச்சி ம.வி.

## விடை தெரியுமா? 117

### உங்களுக்கும் பரிசில்கள்

1. வளம் என்பதன் ஒத்தசொல் எது?
2. இலக்கிய நோபல் பரிசை வென்ற ஆங்கிலேயன் யார்?
3. இலங்கையில் மிருகங்களின் சரணாலயம் எங்கு உள்ளது?
4. தருமத்தில் சிறந்தவன் யார்?
5. மாயமான நிலப்பகுதி எந்தக் கண்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது?

### விடைகள் 115

01.வட ஆபிரிக்காவில்
02.பீஜிங்
03.ஆல்பட்ராஸ்
04.டிங்கோ
05.சபோன் தாற்றன்

### பரிசு பெற்றவர்கள் விவரம்

★ தவசீலன் பிருந்தா, தரம் 8 ஏ, யாழ்.இந்து மகளிர் கல்லூரி.
★ ஜ.சம்பவி, தரம் 8 ஈ, யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
★ ஜ.சாரங்கன், தரம் 8 ஜீ, யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி.
★ சி.நிரோஜன், யாழ். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 29.07.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 24.07.2011 முதல் 30.07.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

ஆறுதலான, மாறுதலான அனுபவங்களைச் சந்திக்கலாம். குடும்பத்தில் கலகலப்பு, குதூகலம் குடிகொள்ளும். எந்தக் காரியத்தையும் யோசித்து திட்டமிட்டுச் செய்வீர்கள். பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பு நிகழும். கடன் மிகுதிகள் வசூலாகும். ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். தொழில் ரீதியான விடயங்கள் சிரமம் இல்லாமல் அனுகூலமாகவே அமையும். உறவினர்கள் மத்தியிலும், ஊரார் மத்தியிலும் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். உழைப்பால் உயர்வு காணவும், தொழிலில் அபவிருத்தி காணவும் சந்தர்ப்பம் சாதகமாக அமையும். ஏட்டிக்குப் போட்டியான பேச்சுக்களையும், கடும் வார்த்தைகளையும் தவிர்க்க வேண்டும். கொடுக்கல் வாங்கல்களில் நாணயத்தைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். எதிர்பார்த்த பணவரவுகள் வராமல் இழுத்தடிக்கலாம். செலவுகள் அதிகரிப்பதால், பற்றாக்குறை உண்டாகும். பெண்களால், பொழுது போக்கு விடயங்களால் ஆறுதல் அடையலாம்.

### இடபம்

எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம். பொழுது போக்கு, கேளிக்கை விடயங்களில் நாட்டம் செல்லும். வெளியூர் பயணம் செல்லலாம். திட்டமிட்ட வேலைகளைக் காத்திருந்தாவது முடிப்பீர்கள். கணவன் மனைவி இடையே பாசம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். உடல் ரீதியான உபாதைகள் அவ்வப்போது ஆள்கொண்டு, உங்களின் உற்சாகத்தைக் குறைக்கலாம். மற்றவர்களின் செயற்பாடுகளால் கோபம் அடைந்து, அடிக்கடி எரிந்து விழலாம். உடன் பிறப்புகளுடன் மனஸ்தாபம், சச்சரவு உண்டாகலாம். பொலிஸ் தொடர்பான விடயங்களும் சாதகமாக இருக்க வாய்ப்பு இல்லை. மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தடைப்பட்ட சில வேலைகள் திடீரென முடிவுக்கு வரும். வரவுகளை விட செலவுகள் கூடும். பெண்கள், பயணங்கள் பொழுதுபோக்கு விடயங்களால் சந்தோஷம் உண்டு. எதிர்பார்த்த பணவரவுகள் வரும். உறவினர்கள் சந்திப்பு நிகழும். சுகமான அனுபவங்களை எதிர் கொள்ளலாம்.

### மிதுனம்

செலவு, அலைச்சல்களுக்கு ஆள்படலாம். சிறிய வேலை ஒன்றுக்குப் பல முறை அலையலாம். மறதியால் அவதிகளுக்கு ஆளாகலாம். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். திட்டமிட்ட வேலைகளில் மாற்றங்கள் செய்யலாம். தொழில் துறை, உத்தியோகம், வியாபாரம், இயந்திரங்கள் பராமரிப்பு, வேலையாள்கள் விவகாரங்கள் போன்றவற்றில் பிரச்சினைகளையும், இடர்பாடுகளையும் சந்திக்கலாம். பணிபுரிவோர் மற்றவர்களின் வேலைகளையும் சேர்த்துச் செய்யலாம். வீடு, சகோதரர்கள், பங்காளிகள் வகையில் செலவுகள் ஏற்படலாம். கடன் பிரச்சினைகளை நினைத்து சில நேரங்களில் கவலைப்படுவீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களும் தள்ளிப் போகலாம். சிலருக்கு கண் உபாதைகள் உண்டாகலாம். அரசியல்வாதிகள் சர்ச்சைக்குரிய பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். பெரிய மனிதர்கள் உதவி கிடைக்கும். வீட்டில் வசதி வாய்ப்புகள் கூடும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும்.

### கடகம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். மற்றவர்களால் உங்களின் சில வேலைகளில் தடை ஏற்படலாம். உடல் நலம் இல்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரைப் பார்க்க நேரிடலாம். திட்டமிட்ட காரியங்களில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். சிறு உடல் உபாதைகளை எதிர்கொள்ளலாம். திடீர் வெளியூர் பயணம் செல்லலாம். குடும்ப விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். கடினமாக வேலை செய்தாலும் அதற்கேற்ற பலன் கிடைக்கும். கடந்த காலத்தில் நழுவிப் போன வாய்ப்புகள் எல்லாம் இப்போது தேடி வரலாம். போட்டி, எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போர் கூடுதல் வருமானம் பெறலாம். வீடு, மனை வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. உடன் பிறந்த சகோதரர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்விற்கு வரும். பெண்கள் வழியில் அன்புத் தொல்லைகள் உருவாகலாம். அரசாங்கம், அரசியல், மருத்துவம், அதிகாரிகள் தொடர்பான விடயங்களிலும் அல்லல்கள் இருக்குமே அன்றி, ஆதாயம் இல்லை. காரிய வெற்றி உண்டு. தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம்.

### சிங்கம்

புத்திசாலித்தனமாக சில காரியங்களைச் செய்து, மற்றவர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். கடனாக, கைமாத்தாக கொடுத்த பணம் திரும்பி வரும். ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். ஆடை, அலங்காரப் பொருள்கள் மற்றும் வீட்டுக்குத் தேவையான பொருள்கள் வாங்கலாம். விருந்தினர்கள் வருகையுண்டு. குடும்ப விவகாரங்களில் விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். எந்த விடயத்திலும் அவசரப்பட்டு முடிவுகள் எடுக்காமல், குடும்பத்தினரை ஆலோசித்து முடிவு எடுப்பது நன்மை தரும். வருமானம் வரும் வழிகள் அதிகரிக்கும். மனைவி, குடும்பத்தினரின் நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். சேமித்த பணம் கணிசமாக கைக்கு கிடைத்து புதிய வகையில் முதலீடு செய்வீர்கள். தந்தை, அரசியல்வாதிகள், மருத்துவம், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் செலவுகள், சிரமங்கள் உண்டாகலாம். பெண்கள், பொழுதுபோக்கு விடயங்கள், பயணங்கள் போன்ற வற்றால் சந்தோஷம் அடைவீர்கள். எதிலும் பொறுமை நிதானமாக செயற்பட வேண்டும். வீண் பிடிவாதங்களைத் தவிர்க்கவும். தண்டச் செலவு நேரும். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும்.

### கன்னி

பிள்ளைகள் வழியில் சுபச் செலவுகளைச் சந்திக்கலாம். சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்கு பயணம் மேற்கொள்ளலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். பணவரவுகளுக்கு வாய்ப்புஉண்டு. மற்றவர்கள் பாராட்டும் வகையில் சில காரியங்களைச் செய்வீர்கள். உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். அடிக்கடி உற்சாகம் குறைந்து மந்தம், மறதி ஆள்கொள்ளும். நெடுநேரம் உழைத்தாலும், அதற்கேற்ற பலனோ, பாராட்டோ கிடைக்காது. வெறுப்பு, சலிப்பு, ஆதங்கம் அதி கரிக்கும். உங்களுக்கு எதிராக நன்றாகப் பேசியவர்கள் மறைமுகமாக விமர்சிப்பர். பண விடயங்களிலும் நினைத்தது நடப்பது கடினமே. குடும்ப உறுப்பினர்களின் சுபகாரியங்களை நடத்த மேற்கொண்ட முயற்சிகள் தள்ளிப்போகலாம். பெரிய மனிதர்களின் உதவி கிடைப்பதிலும் இழுபறியுண்டு. தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். எந்த வேலையையும் நாளை, பிறகு பார்க்கலாம் என்று தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் தடையின்றி முடிவுக்கு வரும்.

### துலாம்

ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். உறவினர்கள் சிலர் தங்களின் வேலைகளை உங்களை நம்பி ஒப்படைக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். குழப்பங்கள், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். வீண் பயம் ஆள்கொள்ளும். செலவுகள் கட்டுக் கடங்காமல் செல்லும். வழக்கு தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். எந்த விடயத்திலும், ஆத்திரப்பட்டும், அவசரப்பட்டும் முடிவு எடுக்க வேண்டாம். தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள், மருத்துவம் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். அரசியல்வாதிகளை நம்பி இறங்கிய காரியங்களால் ஆதாயம் பெறலாம். உத்தியோகஸ்தர்கள் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவர். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வகையில் உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். நீண்ட நாள்களாக சந்திக்காத உறவினர்கள் சிலரைப் பார்க்கும் வாய்ப்பு கிடைக்கும்.

### விருச்சிகம்

ஊக்கம், உற்சாகமாக, பரபரப்பாக செயற்படுவீர்கள். உருப்படியான சில வேலைகளை முடித்துக் கொள்வீர்கள். பணவரவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. உறவினர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலையலாம். மற்றவர்களுக்காக உங்களின் கைப்பணத்தை செலவிடலாம். வேலைப்பளு அதிகரிக்கும். தொழில் ரீதியான அபிவிருத்திகள் தொடரும். எதிர்பாராத வகையில் ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். அடிக்கடி உணர்ச்சி வசப்படுவது, மற்றவர்களிடம் கோபதாபங்களை காட்டுவது போன்றவை நேரிடலாம். நிதானத்தை இழக்காமல் பொறுமையாக நடந்து கொள்ள வேண்டும். கணவன் மனைவி இடையே சிறு சிறு பிரச்சினைகள் உருவாகி மனஸ்தாபம் ஏற்படலாம். மற்றவர்களின் குறைகள், குற்றச்சாட்டுகளுக்கு ஆள்படலாம். சகோதரர்கள், பங்காளிகள், பொலிஸ் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் குழப்பங்களுக்கு ஆள்படலாம். தந்தை தொடர்பான வகையில் தொந்தரவுகள், சிரமங்கள் நேரலாம். அரசு தொடர்பான காரியங்களில் இழுபறி நேரும்.

### தனுசு

குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். பண வரவுக்கும், உதவிகள் பெறுவதற்கும், சந்தோஷமான அனுபவங்களுக்கும் உகந்த நாள். ஆடை, ஆபரணங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். வருமானம் அதிகரித்து சேமிப்பு உயரும். நீண்ட நாள்களாக வாங்க நினைத்த பொன், பொருள்களை வாங்கலாம். கடன் விவகாரங்கள் கட்டுக்குள் வரும். பிள்ளைகள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். பெரிய மனிதர்கள் உதவி கிட்டும். அரசியல், மருத்துவம், அதிகாரிகள், தந்தை தொடர்பான விடயங்கள் சசாதகமாக இல்லை. சொந்த விடயங்களைப் பற்றி மற்றவர்களிடம் விவாதிப்பதை தவிர்க்க வேண்டும். எந்த வேலையையும் தங்கு, தடையின்றி முடித்துக் கொள்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தினரிடம் முன்வைத்த கோரிக்கை நிறைவேறும். நிலம், பூமி தொடர்பான விடயங்கள் நினைத்தது போல நடக்கலாம். சகோதரர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். அதேநேரத்தில், பழைய வாகனங்களை வைத்திருப்போர் தொல்லைகளுக்கு ஆள்படலாம். பெண்கள் வகையில் தொல்லைகள் நேரும்.

### மகரம்

பணவரவுகளைப் பெறலாம். அடுக்கடுக்காக பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். மற்றவர்கள் செலவில் உங்களின் தேவைகள் நிறைவேறலாம். பிள்ளைகள் வழியில் செலவுகள், சிரமங்கள் ஏற்படலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். கனவுத் தொல்லைகள் உண்டு. சகோதரர்கள் குறித்த கவலைகள் உண்டாகலாம். அவர்கள் தொடர்பான விடயங்கள் உங்களின் பொறுமையை சோதிப்பதாக அமையலாம். கடன் பிரச்சினைகளால் கலக்கம் அடையலாம். தொழில், உத்தியோக ரீதியான சலுகைகள் கிடைப்பதும் தள்ளிப் போகலாம். கணவன் மனைவி இடையே பிரச்சினைகள் ஏற்பட்டு அன்னியோன்யம் பாதிக்கப்படலாம். எதிர்பாராத விரயச் செலவுகளைச் சந்திக்கலாம். தந்தை, அரசியல், மருத்துவம், அதிகாரிகள், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக இல்லை. பிள்ளைகள் வகையிலும் அதிருப்தி ஆதங்கங்களே. அதேநேரத்தில், தொழில் ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். மனதில் இனம்புரியாத சந்தோஷம், மகிழ்ச்சி குடிகொள்ளும். சில பொருள்களை சகாய விலைக்கு வாங்கலாம். அலைச்சல், திரிச்சல் உண்டு.

### கும்பம்


பொறுப்புகளால் போராட்டமான நிலைமையைச் சந்திக்கலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். எதிர்பாராத செலவுகள் நேரும். கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். புதியவர்கள் சிலரின் உதவி கிடைக்கும். பல நாள்களாக முயற்சித்த சில காரியங்கள் திடீரென நடக்கலாம். பொறுப்புகளை நிறைவேற்றுவதில், அடிக்கடி குளறுபடிகளையும், முட்டுக் கட்டைகளையும் சந்திக்கலாம். தயக்கம், தடுமாற்றம் ஆள்கொள்ளும். எவ்வளவுதான் கவனமாக செயற்பட்டாலும், சில விடயங்களில் சறுக்கல்களைச் சந்திக்கலாம். எதிலும் நல்ல பெயர் எடுக்க முடியாமல் அவதிப்படலாம். தந்தை வழியில் உதவிகள் கிடைக்கும். புதிய பொறுப்புகள் தேடி வரும். வீட்டில் வசதி வாய்ப்புகளை அதிகரிக்க கணிசமான தொகையை செலவிடலாம். நீண்ட தூர பயணங்கள் செல்ல போட்ட திட்டம் நிறைவேறும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் வழியில் உதவி, ஒத்துழைப்பு கிடைக்கும். உங்களின் தேவை ஒன்று நண்பர்கள் கருணையால் நிறைவேறும். ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். தடை, தாமதங்கள் நேரும். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம்.

### மீனம்

பணவரவுக்கும், பொருள்கள் சேரவும், கலகலப்பான அனுபவங்களுக்கும் உகந்த வாரம் ஆதாயமில்லாத அலைச்சல்களுக்கு ஆள்படலாம். விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்யலாம். குடும்பத்தினர் வழியிலும் அன்புத் தொல்லை உண்டு. உடன் பிறப்புக்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். அவர்களுக்காக சில நல்ல காரியங்களை, உதவிகளைச் செய்வீர்கள். நிலம், பூமி வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டுகளைப் பெறலாம். பெண்கள், சகோதரிகள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்ற வழிகளில் சந்தோஷம், சகாயம் உண்டு. கடின உழைப்பு, தடை, தாமதங்கள், கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடுகள், கூட்டு தொழிலில் சிக்கல், வழக்கு விவகாரங்களில் இடர்பாடுகள், சிரமங்கள், உடல் நலக் குறைவால் உங்களுக்கோ, குடும்பத்தினருக்கே மருத்துவச் செலவு போன்றவை நேரலாம். பெரிய ஆதாயத்தை தருவது போல தோன்றிய விடயங்கள் கடைசி நேரத்தில் ஏமாற்றத்தை தரலாம். பணப்புழக்கத்துக்குக் குறைவிருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்விசைப் பாடகர் கலாபூஷணம் கணபதிப்பிள்ளை



சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம்

''சுருதி லய பாவம் நிறைந்து விளங்கும், சுத்த சங்கீதமே சுகம் தரும்'' என்னும் நுட்பம் நிறைந்த பல்லவியைச் சுயமாக உருவாக்கிப் பல மேடைகளில் அதனை லய வேலைப்பாடுகளுடன் இனிதுறப் பாடி அனைவரின் பாராட்டுக்களையும் பெற்றவர் சங்கீத பூஷணம் சு.கணபதிப்பிள்ளை. ஈழத்தின் மரபு வழி தவறாத செவ்விசைப் பாடகர்களுள் முதன்மையான ஒருவராகவும் பல சிறந்த ஆற்றுகை யாளர்களை உருவாக்கிய முதுகலைஞராகவும் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று ஆசிரியப் பணிபுரிந்த நல்லாசிரியராகவும் விளங்கும் இவர் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆவார்.

அமரர்களான கணபதிப்பிள்ளை சுப்பையா - வள்ளியம்மை தம்பதியரின் மகனாக 16.10.1939 இல் பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்துக்கு அருகில் இருக்கும் நெல்லியான் என்னும் சிற்றூரில் பிறந்தார். இவரது தந்தை, பேரன் ஆகியோர் சிறந்த இசைநாடகக் கலைஞர்களாக அக்காலத்தில் புகழ் பெற்றிருந்தனர். சிறு வயதில் தந்தையை இழந்த இவர் தனது பெரிய தந்தையாராகிய வரகவிப் புலவர் பொன்னாலை க.கிருஷ்ணபிள்ளையின் அரவணைப் பிலும் வழிநடத்தலிலும் சிறப்புற வளர்ந்து வந்தார். ஈழத்து இசைநாடக வரலாற்றில் சொந்தமாக இசைநாடகங்களை இயற்றி அவற்றை மேடையேற்றித் தனிமுத்திரை பதித்த கிருஷ்ணபிள்ளையின் இசை நாடகங்களில் சிறு வயதில் இருந்து நடித்து வந்தார். இந்த வகையில் ''கிருஷ்ணலீலா'' என்னும் இசை நாடகத்தில் பாலகிருஷ்ணனாகத் தோன்றிச் சிறப்பாகப் பாடியும் நடித்தும் அனைவரதும் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டார்.

இயற்கையாகவே இசைஞானம் நிறைவாக வாய்க்கப்பெற்றிருந்த இவர் கல்வியுடன் கலைத் துறையையும் இரு கண்களெனப் போற்றி வந்தார். அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த இசையாளர்களான வலங்கைமான் ஆறுமுகம்பிள்ளை, வட்டுக்கோட்டை இரத்தினசிங்கம், வட்டுக்கோட்டைச் சிங்காரவேலு, எஸ்.வி.மாசிலாமணி, இரத்தினசபாபதி போன்ற பலரிடம் சிறு வயதில் இருந்து இசையின் நுட்பங் களைத் தெளிவுறக் கற்றுக்கொண்டார். பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்ட பின் 1959இல் அண்ணா மலைப் பல்கலைக்கழகம் சென்று நான்கு ஆண்டுகள் குரலிசையை முக்கிய பாடமாகவும் வயலினைத் துணைப்பாடமாகவும் கற்று முதல் தரச் சித்தியடைந்து ''சங்கீதபூஷணம்'' என்னும் பட்டம் பெற்று முழுமை யானதொரு செவ்விசைப் பாடகராக 1963 இல் ஈழத்தில் காலடி பதித்தார். இன்னிசை அரசு எம்.எம்.தண்ட பாணிக தேசிகர், ரீ.கே.ரங்காச்சாரியார், எஸ்.வேணுகோபாலை யர், கும்பகோணம் சம்மந்தம் பிள்ளை, எம்.பி.வஜ்ர வேல் முதலியார் போன்ற பல இசைமேதைகளிடம் இசையைக் கற்றதுடன் எமது செவ்விசையின் தலைசிறந்த ஆற்றுகையாளர்கள் அனைவரது இசைக் கச்சேரிகளையும் பல தடவைகள் நேரில் பார்த்துக் கிடைத்த அனுபவத்துடனும் ஈழத்தில் தனது இசைப்பணியைத் தொடங்கினார்.

1963ஆம் ஆண்டு பொன்னாலை வரதராஜப்பெரு மாள் ஆலய முன்றிலில் பாடினார். 1966இல் இசை ஆசிரியர் நியமனத்தைப் பெற்றார். அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயம், காரைநகர் இந்துக்கல்லூரி, யாழ்ரன் கல்லூரி ஆகியவற்றில் பணி தொடர்ந்தார். 1974 ஆம் ஆண்டு ஆசிரியப் பயிற்சியையும் பெற்று அதன்பின் 1976இல் குருநாகல் இந்துத் தமிழ் மகா வித்தியாலயம் வரை தனது இசைத்திறன் கொண்ட ஆசிரி யத்துவத்தை நிலைநாட்டினார். இதன்பின் னர் 1977 ஆம் ஆண்டிலிருந்து யாழ்.மாவட்டத் தின் உதவிக்கல்விப் பணிப்பாளராகவும் வட இலங் கைச் சங்கீத சபையின் துணைத்தலைவராகவும் 1999 இல் ஓய்வு பெறும் வரை ஓய்வில்லாமல் கலைப் பணியாற்றினார்.

இலங்கை வானொலியிலும் தொலைக்காட்சியிலும் சிறப்புத் தரம் கொண்ட பாடகராக இவர் விளங்கி வருகின்றார். ஒவ்வொரு பாடகரிடமும் தனித்துவ மான இயல்புகள் இருப்பது வழமையாகும். ஆனால் எவரிடமும் இல்லாத ஓர் இசைத்திறன் இவரிடம் இருப்பதை நாம் கண்டுகொள்ளலாம். சற்றும் லயம் பிசகாமல், ஸ்வரஸ்தானம் தவறாமல், எடுத்துக் கொண்ட இராகத் தின் வடிவம் கெடாமல் கற்பனாஸ் வரத்தை விந்தையிலும் விந்தையாக பதற்றம் எதுவும் இன்றி பாடவல்ல வல்லவராக இவர் இருக்கின்றமை ஏனையோரிட மிருந்து இவரை வேறுபடுத்திக் காட்டி நிற்கின்றது.

இசையின் ஸ்வரங்கள் ஏழு. இந்த ஏழு ஸ்வரங்களில் கருத்துச் செறிவுள்ள சொற்களை கற்பனாஸ்வரம் பாடும்போது தோற்றுவித்துக் கற்பனாஸ்வரத்தில் கதை சொல்லும் கலைஞராக கணபதிப்பிள்ளை அவர்கள் காணப்படுகிறார். பாதகா, பாதகமநிதா, மதமா, மாபாதகா, ஸமமா, ஸரிஸமமா, பரிகாசமா, பதமா, தாகமா, தநி மநிதா நீ நிதாநி, மாமநிதா நீ ஸரி, தாமதமா, ஸதா ஸாகஸமா போன்ற ஸ்வரக் கோர்வைகளை சொற்களாக உருவாக்கித் தெளிவாகப் பாடும் துணிவும் திறனும் கொண்ட இவர் ஸ்ரங்களினூடாகப் பல விதமான வித்தைகளைக் காட்டுவதி லும் வல்லவர். ஐந்து விதமான நடைகளையும் கற்பனாஸ்வர மாகப் பாடி வயலின், மிருதங் கக் கலைஞர்களுக்கு அதிக வேலை கொடுப்பதும் இவரது இயல்பாகும். ''சுரபத கேசரி'' என அழைக்கப்படும் இவரது கற்பனாஸ்வரம் பாடும் முறையானது தனித்துவமானது என்பதை விட இளம் இசையாளர்களால் கற்றுக்கொள்ளப்பட வேண் டிய இசைப்பகுதியாக உள்ளது.

இசைத்துறையில் நீண்டகால அனுபவ முதிர்ச்சி கொண்ட இவர் ஆற்றுகையாளரும் கூட.

''சோதனைக் கலைஞர்கள் சாதனைக் கலைஞர் களாக இருப்பதில்லை. பத்திரங்களை வைத்திருக்கும் கலைஞர்கள் பத்திரமாகவே இருக்கின்றனர். மேடைக்கு வருவதில்லை. நிறுவனங்களில் இசைப் பணி புரிவோர் மேடையில் சுருதி சுத்தமாகவும் லய சுத்தமாகவும் சங்கதிகளைத் தமது வசதிக்கு ஏற்ப மாற்றாமலும் இசை உருப்படிகளின் பாடாந்தரத்தைச் சிதைக்காமலும் அழகுறப் பாடக்கூடியவாறு தினமும் பயிற்சி செய்ய வேண்டும். மாணவர்களையும் அப்படியே உருவாக்கவேண்டும். இல்லையேல் இசைக்கலையை வளர்க்க முடியாது. உயர் பட்டங்கள் மேடைக் கச்சேரிக்கு உதவப்போவதில்லை. சுருக்க மாகச் சொல்வதானால் ''தராதரம் தரம்தரா'' என்பதே எனது கருத்தாகும்'' என்கிறார்.

வரகவிப்புலவர் பொன்னாலை க.கிருஷ்ணபிள்ளை யால் வளர்க்கப்பட்ட இவர் தனது தாய்மொழியை அழகுறவும் நயமுறவும் பேசியும் பாடியும் எம்மிடையே கலைத்தொண்டு புரிந்து வருகின்றார்.

வசாவிளான் தவமைந்தன்

# மூட்டு வலிக்குச் சிறந்தது கருமுகைத் தைலம்

**கருமுகை**
வேறு பெயர்-மரமனோரஞ்சிதம்
தாவரவியற் பெயர் - Cananga odorata
(கனங்கா ஓடோநேரற்றா)
குடும்பம் - Anonaceae (அனோனேசியே)
ஆங்கிலப் பெயர் - Ylang ylang

பூவென்றால் இதுதான் பூ என்று சொல்லத் தக்கவகையில் Ylang ylang என்று அழைக்கப்படும் கருமுனையானது மர மனோரஞ்சிதம் என்றும் அழைக்கப்படுகிறது கண்வைத்தியத்தில் இது ஒரு முக்கியமான மூலிகை இது சிறு மரவகுப்புக்குரியது.

தனிஇலைகள் பெரியவை. நீண்ட கோழிமுட்டை வடிவிலும் நுனிகூர்மையாகவும் இருக்கும் ஒன்று விட்ட இலை ஒழங்கு பூக்கள் பெரியவை பச்சை கந்த மஞ்சள் நிறமானவை.

நறுமணம்மிக்கவை பச்சை நிறக்காய் கொத்துக் கொத்தாகக் காணப்படும். முதிர்ந்ததும் 6-12 வித்துக்கள் கொண்ட கரு நிறமாக காணப்படும். அதன் பூக்களில் இருந்து அதில் இருந்து ஒரு வாசனை வடித்தெடுக்கப்படுகிறது அத் தைலத்தை மூட்டுவலிக்கு மூட்டுகளில் அழுத்தித்தேய்த்து வர வலி நீங்கும். தலைக்கு வைத்து வர தலைவலி, கபாலக்குத்து ஒற்றைத்தலை வலி நீங்கும். நேத்திர வியாதிகளுக்கு கண்ணில் இடசுகம் ஏற்படும் கருமுகை மொட்டுடன் எள்ளுப்பூ திப்பலி சேர்த்து அரைத்து உலர்த்தி வைத்து அதை முலைப்பாலில் உரைத்து கண்ணில் இட்டு வர கண் புகைச்சல் மாறும்.




**கிளா**
வேறுபெயர்- கிளாத்தி,களா
தாவரவியற் பெயர் Carissa carandas
(கரிசா கராண்டஸ்)
குடும்பம் Apocynaceae (அப்போ சைனேசியே)
சிங்களப்பெயர்-கரம்ப
சமஸ்கிருதப் பெயர்- கரமர்த்தி
ஆங்கிலப் பெயர்- Karanda

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

கிளாவில் பெருங்கிளா, சிறு கிளா என்ற பேதங்கள் உண்டு. இது சிறுசெடி வகுப்புக்குரியது. இது இணைக்கவர் முறைப்படி இரண்டிரண்டாகக் கிளைத்துவளரும். கிளைகள் பிரியும் இடத்திலும், இலைகள் உருவாகும் இடத்திலும் இரண்டிரண்டாக முட்கள் காணப்படும். எதிரான இலைஒழுங்கு. தனி இலைகள் முட்டை வடிவானவை. பங்குனி, சித்திரையில் பூக்கும் பூக்கள் வெள்ளை நிறம், [illegible] சிறு [illegible] சிறப்புநிறம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூ,காய், பழம் ,வேர் என்பன மருத்துவத்தில்



பயன்படுகின்றன. கண்படலை நோய்க்கு பூக்கள் மருந்தாகின்றன. பூச்சாற்றில் 2, 3 துளி கண்ணில் இட்டு வர கண்படலம்,கண் பூ மாறும். காயை ஊறுகாய் செய்து உணவுடன் சேர்த்து சாப்பிட்டவர அசீரணம், மந்தம்,வயிற்றுப் பெருமல் என்பன நீங்கும்.

வேரைக்குடி நீருடன் நாக்குப்பூச்சிக்குக் கொடுக் காலம். கிளாய்க்காயை மிளகாய்த்தூள், மஞ்சள் தூள், உப்பு, உள்ளி வெந்தயம் சேர்த்துக்கலந்து புளித்த மோரிலிட்டு வெயிலில் காயவைத்து நீர் வற்றிய பின் எடுத்து நல்லெண்ணையில் கடுகு தாளித்துச் சேர்த்து ஊறுகாயாக உணவுடன் சேர்த்துக்கொள்ளலாம். அல்லது புளித்தமோரில் காய்க்குத் தக்களவு உப்புச்சேர்த்து ஊறவிட்டும் உணவுடன் சேர்த்துகொள்ளலாம்.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

# பெண்ணின் வளரிளம் பருவத்தில் தேவையற்றவை எவை...?



ஒரு பெண்ணின் வாழ்க்கையில் மிக முக்கியப் பருவம் வளரிளம் பருவம். இந்தப் பருவத்தில் ஒரு பெண்ணுக்குத் தேவையான விஷயங்கள் இருப்பது போல், தேவையற்ற விஷயங்களும் உள்ளன.

இவை கண்டறியப்பட்டு அவற்றை பெண்ணின் பக்கம் நெருங்கா வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும், இது காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல, பருவத்தின் கட்டாயமும் கூட.

**தேவையானவை**

* கல்வியில் கவனம் அல்லது செய்யும் வேலை மற்றும் தொழிலில் கவனம்.
* பெற்றோரை மதித்தல்.
* நேரத்தை முறையாகக் கையாளுதல்.
* தனித்துவம் வளர்த்துக் கொள்ளுதல்.
* இலக்கு நிர்ணயித்தல்.
* தன்னையும் மற்றவர்களையும் மதித்தல்.
* நல்ல புத்தகங்களைப் படித்து சிந்தனையை வளர்த்துக் கொள்ளுதல்.

**தேவையற்றவை**

* தொலைக்காட்சி முன் பெரும்பான்மை நேரத்தை செலவிடுதல்.
* எதிர்பாலினரை ஈர்ப்பதற்காக பொருத்தமில்லாத நடை மற்றும் உடைகளை விரும்புதல்.
* காதல் வயப்படுதல்.
* எதற்கெடுத்தாலும் அடுத்தவர்களைக் குறை கூறுதல்.
* சோம்பேறித்தனம்.

பெண்ணே ! உன் வாழ்க்கை உன் கையில். வாழ்க்கையில் தேவையற்றவற்றை அகற்றி, தேவையானவற்றை முறைப்படுத்தி உனது எண்ணத் தரத்தை உயர்த்திக் கொண்டே வந்தால், உனது வாழ்க்கை வளம் பெறுவது நிச்சயம்.

கட்டுப்பாடற்ற சுதந்திரமும், சுதந்திரமே இல்லாத கட்டுப்பாடும் ஆரோக்கியமானது அல்ல.

வாழ்க்கையில் பின்நாளில், ஒரு பெண் அடைய இருக்கும் பல வெற்றிக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய பருவம் 11-18 வயது வரையாகும்.


இந்த வளரிளம் பருவம், ஒரு பெண்ணின் வாழ்வில் மிக மிக முக்கியம் வாய்ந்த பருவமாகும்.


தவிர்க்க வேண்டிய குணங்கள் மற்றும் பண்புகள்

* கோபம் / ஆத்திரம்
* பொய் சொல்லுதல்
* சோம்பல்
* முயற்சியின்மை.
* ஆர்வமின்மை.
* மதிப்பின்மை
* கவனம் சிதறுதல்
* மற்றவர்களின் கவனம் ஈர்த்தல்.
* இனக்கவர்ச்சி
* பாட்டு / கேளிக்கைகளில் ஆர்வம்.

-இ.பானுஜா

# அன்னையே...





ஒருமுறைதான்-நீ
என் வாழ்வில்
மலர்வாயா...?
உன்
உதிரத்தை
உரமாய்
இட்டாயே
விழுதுவிட்ட
விருட்சமாக-நான்
நிழல்தர
இளைப்பாறிடு
எனக்குள்...
என்
இறுதி
மூச்சுவரை
இருந்திடு
என்னோடு...!

-குட்டி.

# மூன்று ஆயுதம்

பெண்களின் வாழ்க்கையில் வெற்றிக்குத் தேவையான முயற்சி, தன்னம்பிகை மற்றும் ஈடுபாடு ஆகிய மூன்று வலிமையான ஆயுதங்கள் இயற்கையாகவே உள்ளன.

இந்த விலை உயர்ந்த மூன்று ஆயுதங்களை நீங்கள் எவ்வாறு, உங்கள் வாழ்வின் வளர்ச்சிக்கு உபயோகப்படுத்த வேண்டும் என்று தெரிந்து கொள்ள முயற்சி செய்துள்ளீர்களா? இல்லை என்றால், இன்று முதல் முயற்சி செய்யுங்கள். அதுதான் வாழ்க்கை வெற்றிக்கு முதற்படி.

முயற்சி, தன்னம்பிகை மற்றும் ஈடுபாடு இந்த மூன்று ஆயுதங்களை சரியான வகையில், தரமான முறையில் தொடர்ந்து பயன்படித்திய பல பெண்கள், வாழ்வில் வெற்றிக் கனிகளை தொடர்ந்து பறித்த வண்ணம் உள்ளனர்.

-பி.கண்ணா

# பண்பாட்டைத் கற்றுக் கொடுக்க வேண்டுமா...?



-பெண்ணியா

உலகமே வியக்கும் பெண்ணுக்கு, குறிப்பாகத் தமிழ் பெண்ணுக்கு பண்பாட்டைப் பற்றி, வாழும் முறையைப் பற்றி கற்றுக் கொடுக்க வேண்டுமா? உண்மையில் தேவையில்லை !

நலமான வாழ்க்கை முறை, மகிழ்ச்சிகரமான வாழ்க்கை முறை, நிறைவான வாழ்க்கை முறை என்பது ஒவ்வொரு தமிழ்ப் பெண்களதும் பாரம் பரிய சொத்து.

சொல்லப் போனால் அவை ஒவ்வொரு தமிழ்ப் பெண்ணின் இரத்தத்திலும் ஊறியது.

ஆனால் பெண் குறிப்பாக இன்றைய பெண், நாகரீக கலாசார வாழ்க்கை முறை தாக்கத்தால் மனதளவில் தடுமாற்றத்தைச் சில சமயங்களில் எதிர்கொள்கிறாள்

நமது முன்னோர்கள் வாழ்ந்த முறைப்படி வாழ்வதா? அல்லது மேலை நாட்டு நாகரீக முறைப்படி வாழ்க்கை வாழ்வதா? என்ற தடுமாற்றம் இவர்களிடம் உள்ளது.

இரண்டு பண்பாடுகளிலும் உள்ள நிறை மற்றும் குறைகளை நன்கு ஆராய்ந்து எதிர் விளைவுகளை சீர்தூக்கிப் பார்த்து, உணர்ந்து. தீர்க்க தரிசனமான முடிவு எடுக்க வேண்டும், பிறகு அந்த வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

சில பெண்கள் தடுமாற்றம் அடைகின்றனர். குழப்ப நிலைமை ஏற்பட்டு பல நடத்தைகளில் ஈடுபட்டு, உடல் நலப் பிரசினைகளில், மன நலப் பிரச்சினைகளில் சிக்கிக்கொண்டு அல்லல் படுகின்றனர்.

இவ்வாறான வாழ்க்கையால் வரும் அபாயங்களை உணர்த்தி அதன் கோணத்தில் பார்த்து நலத்துடன் வாழ முன்வர வேண்டும்.

வாழ்வாங்கு வாழ்ந்து, உன்னுடைய அடுத்த தலைமுறைக்கு அந்த வாழ்வியலை நல்ல சீதனமாக கொடுக்க முயற்சி செய்.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
"திலகம்",
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



# கங்காவின் கடிதங்கள்

அன்பின் கண்மணிக்கு,

உன் கணவரிடமிருந்து விவாகரத்து வாங்கிவிட்டதாகக் கடிதம் போட்டிருந்தாய். உள் பெற்றோர் தவறான ஒரு ஆளை உனக்காகத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களும் என்ன, வேண்டுமென்றா அவ்வாறு செய்தார்கள். அவனின் வசதியைப் பார்த்து நல்லவனா என்று விசாரிக்கத் தவறி விட்டார்கள். நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும். இனி என்ன செய்யப் போகின்றாய் என்று யோசி.

விவாகரத்துச் செய்வது பெரிய விடயம் அல்ல. அது காலில் பட்ட அசிங்கத்தைக் கழுவுகின்ற மாதிரி... இனி நீ தனியாக வாழ்ந்து வாழாவெட்டி எனப் பெயர் வாங்கக் கூடாது. உடனடியாக ஒரு நல்ல ஆணாகப் பார்த்து திருமணம் செய். அவ்வாறு நீ திருமணம் செய்யவில்லை என்றால் ஆண்களுக்கு மட்டுமல்ல உன்னைச் சுற்றியுள்ள பெண்களுக்கும் இளக்காரமாகிவிடுவாய்.

தனியாக இருக்கும் நீ சும்மா நின்று பேசினாலும் வீணாகக் கதை கட்டுவார்கள். எதுக்கு நீ உன்னையும் வருத்தி ஊரிலும் கெட்ட பெயர் வாங்க வேண்டும்.

பெண்களுக்குக் காலம் கடந்து விடுதலை கிடைக்கின்ற நேரமிது. இப்போது அதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நீ தனியாக இருந்தால் விவாகரத்தான இன்னொரு பெண்ணும் தனியாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைப்பாய். நான் கூற வேண்டியவற்றைக் கூறி விட்டேன். விரைவாக ஒரு நல்ல முடிவு எடுப்பாய் என நம்புகின்றேன்.

அன்புடன்....
கங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 27

## உளநலப் பிரச்சினையும் பூப்பெய்துவதில் பாதிப்பை ஏற்படுத்தும்

*எனது மகளுக்கு 15 வயது ஆகிவிட்டது. அவள் இன்னமும் பூப்படையவில்லை. இதற்கு என்ன செய்யலாம்?*

*திருமதி. தேவநாயகி குலசிங்கம், தெல்லிப்பழை.*

இவ்வாறான நிலைமை பிந்திய பூப்படைதல் (Delayed Menarche) என்று கூறப்படும். துணைப் பாலியல்புகள் விருத்தியடையாத ஒரு பெண்ணில் 14 வயது வரையும் அல்லது துணைப்பாலியல்பு விருத்தியடைந்த ஒரு பெண்ணில் 16 வயது வரையும் முதலாவது மாதவிடாய் ஏற்படாமல் இருக்கும் நிலைமையை நாம் இவ்வாறு கூறலாம்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் சில முழுமையாகத் தீர்வு காணக்கூடிய பிரச்சினைகளாகவும் சில தீர்வு காணமுடியாத பிரச்சினைகளாகவும் இருக்கும்.

முதலாவது மாதவிடாய் ஏற்படும் வயது பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது. பொதுவான காரணிகள் பின்வருமாறு :

1. குடும்பத்தில் ஏனைய பெண்கள் பிந்திய வயதில் பூப்படைந்திருத்தல். இங்கு உடல் ரீதியாக எந்த விதமான பாதிப்போ அல்லது நோயோ இருக்காது. இவர்கள் உயரம் குறைந்தவர்களாக இருக்கலாம். குடும்பத்தில் மற்ற பெண்கள் எந்த வயதில் பூப்படைந்தார்களோ, அந்த வயதில் இவர்களும் பூப்பெய்துவார்கள். ஆகவே நீங்கள் அதுவரை காத்திருக்கலாம். இவர்களுக்கு அநேகமாக எந்தவித சிகிச்சைகளும் தேவைப்படுவதில்லை.

2. சத்துள்ள உணவுவகைகளை உள்ளெடுத்தல் மற்றும் உடல்நிறை. சத்துள்ள உணவுவகைகளை உள்ளெடுக்காமல் இருக்கும் மற்றும் உடல்நிறை குறைவாக இருக்கும் பெண்கள் பூப்படைவதற்குப் பிந்தலாம்.

இவ்வாறானவர்கள் சத்துள்ள உணவை உள்ளெடுத்து, உடல் நிறையை அதிகரிக்கச் செய்வதன் மூலம் பயனடைய முடியும்.

3. உடல் நலப் பிரச்சினைகள்.

வேறு ஏதாவது நீண்டகால நோய்கள் உள்ளவர்கள். (உதாரணம்- சிறுவயதில் சலரோகம் , சிறுநீரகப் பாதிப்பு, புற்றுநோய்) மற்றும் சில வகை ஓமோன் குறைபாடு உள்ளவர்கள் (உதாரணம்- தைரொயிட், கபச்சுரப்பி, பரிவகக் கீழ் சுரப்பிப் பிரச்சினைகள்) உரிய வயதில் பூப்பெய்துவது பாதிக்கப்படலாம்.

இவர்கள் வைத்தியரின் ஆலோசனையைப் பெற்று, ஓமோன் சிகிச்சையோ அல்லது அவர்களின் நோய்க்கான சரியான சிகிச்சையோ பெற்றுக் கொள்ள வேண்டும்.

மேற்குறிப்பிட்டவையே அநேகமான பெண்களின் முதலாவது மாதவிடாய் உரிய காலத்தில் ஏற்படாமைக்கான காரணங்களாக அமைகின்றன.

ஆரம்பத்தில் கூறப்பட்ட வயது எல்லையைத் தாண்டியும் உங்கள் மகள் பூப்படையாவிட்டால் நீங்கள் ஒரு பெண் நோயியல் மருத்துவரின் ஆலோசனையை நாடுவது நல்லது. மருத்துவர் உங்கள் மகளைப் பரிசோதித்து உங்கள் பிரச்சினைக்குரிய சரியான காரணத்தைக் கண்டறிந்து அது குணப்படுத்தக் கூடியதாயின் அதற்கான சிகிச்சை வழங்குவார். அவ்வாறான சிகிச்சையளிக்கக் கூடிய சில காரணங்கள் வருமாறு:

1. பிறப்புவாயிலில் உள்ள சவ்வு அடைப்பை ஏற்படுத்துதல். இதனால் மாதவிடாயின்போது வரும் குருதி வெளியேற முடியாத நிலை ஏற்படும். இவ்வாறானவர்களுக்கு ஒவ்வொரு மாதத்திலும் மாதவிடாய் ஏற்படும் காலத்தில் அடிவயிற்று நோ ஏற்படும். சத்திர சிகிச்சை செய்து அடைப்பை ஏற்படுத்தும் சவ்வை அகற்றுவதன் மூலம் இந்த நிலை குணமாக்கப்படும்.

**டாக்டர் என். சரண்யா,**
**நீரிழிவு நிலையம்.**

2. பிறப்பிலே ஏற்படும் சில குரோமசோம் குறைபாடுகள்.

உதாரணம்: Turner's Syndrome - இவர்கள் அகன்ற தோள்களைக் கொண்டவர்களாகவும் உயரம் குறைந்தவர்களாகவும் இருப்பார்கள். இவர்களுக்கும் சூலகத்திலே குறைபாடு உள்ளவர்களுக்கும் சில ஓமோன்களை வழங்குவதன் மூலம் துணைப் பாலியல்புகளையும், மாதவிடாயையும் ஏற்படுத்த முடியும். ஆனால் இவர்களால் குழந்தை பெற்றுக் கொள்ளமுடியாது.

3. பரிவகக் கீழ்ச் சுரப்பியின் குறைபாடு. இவர்களுக்கு GNRH எனப்படும் ஓமோனை வழங்குவதன் மூலம் இந்த நிலைமையைக் குணப்படுத்தலாம். ஆனால் இது மிகவும் செலவு கூடிய ஒரு முறையாகும். மேலும் பல பிறப்புக் குறைபாடுகளும் மாதவிடாய் ஏற்படாமைக்கான காரணமாக இருக்கலாம். ஆனால் அக்காரணிகள் மிகக் குறைவாகும். எனவே நீங்கள் ஒரு பெண் நோயியல் வைத்தியரைச் சந்தித்துப் பரிசோதித்துக் கொள்வதன் மூலம் உங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளலாம்.

## நான் சிகரெட் பேசுகிறேன்....

ஏய் மனிதனே...
என்னை எப்போதும் உன் உதடுகளால்
அரவணைக்கும் நண்பனே...
நீ ஒரு உன்னதமான தியாகி - ஏன் தெரியுமா?
நீ உன்னைப் பற்றியோ,
உன் உயிரைப் பற்றியோ கவலைப்படாதவன்
என்னை உருவாக்கும் முதலாளிக்கு லாபம்
கிடைப்பதற்காக
உன் உயிரையே துச்சமாக மதித்து வேள்வி நடத்துகிறாய்
ஆமாம், உன் வாயிலேயே வேள்வி நடத்துகிறாய்
எல்லோருக்கும் இறந்த பின்பு தான் கொள்ளிக்கட்டை
வைப்பார்கள்
ஆனால் உனக்கான கொள்ளியை நீயே வாயில்
வைத்திருக்கிறாய்,
உயிருடன் இருக்கும் போதே....
கரி படிந்து இருக்கும் புகைக் கூடு உன் நுரையீரல் இருப்பதை
எப்பொழுதாவது நீ பார்த்திருக்கிறாயா?
'என்னுடைய கலங்கள் எல்லாம் புற்றுநோய்க் கலங்களாக
மாறுகின்றனவே'
என்று அது புலம்புவதை நீ கேட்டிருக்கிறாயா?
உன் இரத்தக் குழாய்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு
அடைபட்டுப் போகிறதே
ஏன் தெரியுமா? உன் அன்புக்குரிய புகையினால் தான்
அதனால் உன் உடல் உறுப்புக்கள் இரத்த ஓட்டம் கிடைக்காமல்
கொஞ்சம் கொஞ்சமாக இறந்து போவதை அறிவாயா நீ?
இளைஞனே, உன் மூளையின் ஆற்றல் குறைந்து போவதை
உணர்வாயா?
உன் உடல் உறுதி தளர்ந்து உன் வாழ்வே அழிந்து போவதை
உணர மாட்டாயா நீ?
வேண்டாம் நண்பா, உன் நன்மைக்காக நான் மன்றாடுகின்றேன்
என்னைத் தூக்கித் தூர எறிந்து விடு...
பிரகாசமான நோயற்ற வாழ்வு உனக்காகக் காத்திருக்கும்.

**டாக்டர் ஆர். ரமாவித்தியா**
நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

# மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் 12

*மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் என்ற இந்தத் தொடர் கட்டுரையின் கருத்தோட்டங்களுடன் நீங்கள் பூரணமாக உடன்பட்டால் "A" எனவும் ஓரளவு உடன்பாட்டால் "B" எனவும் உடன்படவில்லை எனில் "C" எனவும் இக்கருத்துக்களை எதிர்ப்பதாயின் "D" எனவும் ரைப் செய்து 0773604094 என்ற இலக்கத்துக்கு SMS செய்துவிடுங்கள்.*

மனச்சோர்வும் மன அழுத்தங்களும் எம்மனதை ஆக்கிரமிக்கும் பொழுது மதநம்பிக்கை எமக்குக் கைகொடுக்கும். நம்பிக்கையீனங்கள் எங்கும் தலைவிரித்தாடும் பொழுது மதநம்பிக்கை மனதில் நம்பிக்கை ஒளியை ஏற்றும்.

நாம் சோர்ந்துபோக வேண்டியவர்கள் அல்ல. முற்றாக அழிவுற்ற நல்லூர் கந்த சுவாமி கோயில் இன்று புதுப் பொலிவுடன் எழுந்திருக்கவில்லையா? அது போல் எமது சமுதாயமும் உடல் நலத்துடனும் ஆன்மீக பலத்துடனும் மீண்டும் தலைநிமிரும் நம்பிக்கை எமது பேச்சாக மூச்சாக முழுவதுமாக இருக்குமாயின் நாம் எந்த நோய்நிலைகளையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளமுடியும். தற்கொலைகளுக்கும் தற்கொலை முயற்சிகளுக்கும் இனி இங்கு இடமில்லாமல் போகும். எமது மகத்துவம் விழுந்துவிடாமல் இருப்பதில் அல்ல விழும் ஒவ்வொரு தடவையும் வெற்றிகரமாக எழுந்திருப்பதிலேயே தங்கியிருக்கிறது என்று பெரியோர்கள் சொல்வார்கள்.

மத நிறுவனங்கள் பல மருத்துவத் துறையுடன் மேலும் நெருக்கமாகச் செயற்பட ஆர்வமாக இருப்பது ஒரு மகிழ்ச்சிகரமான விடயமாகும். சுகாதார விழிப்புணர்வு நிகழ்வுகளை ஒழுங்கு செய்தலும் அதில் பங்கெடுத்தலும், மருத்துவமனைகளின் விடுதிகளில் பராமரிப்பைப் பொறுப்பெடுத்தல், கலாசார சீரழிவுகளுக்கு எதிராகத் தொடர் நிகழ்வுகளை ஏற்பாடு செய்து எமது இளைய தலைமுறையினரைப் பாதுகாத்தல் எனப் பல விடயங்களில் கோயில் நிர்வாக சபைகள் ஆர்வங்காட்டத் தொடங்கி இருப்பது ஒரு ஆரோக்கியமான மாற்றமாகும்.

எமது சுற்றாடல் அசுத்தமடைவதால் நுரையீரல் சம்பந்தமான நோய்கள், தொற்றுநோய்கள், புற்றுநோய் போன்ற பல கொடிய நோய்கள் ஏற்படுகின்றன. அத்துடன் நுளம்புப் பெருக்கத்தால் பெரிய பல ஆபத்தான நோய்கள் பரப்பப்படுகின்றன. எனவே கோயில் நிர்வாக சபைகள் தமது பகுதிச் சுற்றாடல் பாதுகாப்பில் கூடிய அக்கறை காட்டுதல் விரும்பத்தக்கது. வெறும் காணிகளையும் கோயிற் காணிகளையும் பூங்காவனங்கள் ஆக்குவோம், மரங்கள் நட்டு வளர்ப்போம், கோயில் பெரியவர்களின் வழிநடத்தலில் எம் அகத்தையும் புறத்தையும் தூய்மைப் படுத்துவோம். இது மனித ஆரோக்கியத்துக்குப் பல வழிகளிலும் உதவும். மதங்களில் இருக்கும் மருத்துவக் கருத்துக்களையும் சி[illegible]க் களையும் விஞ்[illegible] பதற்குக் கோயில் நிர்வாக சபைகளில் இருக்கும் இளம் அங்கத்தவர்கள் ஆராய்ச்சிகளைத் தொடங்க முடியும். இதற்கான வழிகாட்டல்களையும் நிதி உதவிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க முடியும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இவ்வாறான ஆராய்ச்சிகளுக்கு உதவுவதற்கான நிதியம் ஒன்றும் இருக்கிறது. இதனைச் சித்தமருத்துவப் பெரியார் ஒருவர் ஏற்படுத்தியிருக்கிறார்.

பல மத நிறுவனங்கள் யோகாசனப் பயிற்சி வகுப்புக்கள், உளவளத் துணை போன்ற சேவைகளை செய்து வருகின்றன. இவை இன்னும் முன்னேற்றம் காணுமாக இருந்தால் எமது சமுதாயத்தின் சுகாதார நிலை மேம்பட உதவியாக இருக்கும்.

30 வருடகால யுத்தத்தால் ஒப்பீட்டளவில் குறைந்தளவு பாதிப்புக்கு உள்ளானவை மத அமைப்புக்களே. அத்துடன் அமைப்பு ரீதியாகச் சுதந்திரமாக இயங்கக்கூடிய நிலையில் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் நிறுவனங்களும் மதநிறுவனங்களே.

இந்த அமைப்புக்களுக்கு ஆயகலைகள் அறுபத்துநான்கில் ஒன்றாகிய மருத்துவக்கலைக்கு அதாவது சுகப்படுத்தும் கலைக்கு உதவவேண்டிய ஒரு கட்டாயக் கடமையும் தேவையும் தற்பொழுது எழுந்திருக்கிறது. மருத்துவத் துறைக்கு அல்லது நோயாளிக்கு உதவுதல் அல்லது நோய்த் தடுப்பு நடவடிக்[illegible] என்பது சரியைத் [illegible] அடங்கும். இந்த சரியைத் தொண்டு மூலம் முத்தியடைந்தவர்கள் பலர் என இந்துமதம் சொல்கிறது.

5500 வருடங்களுக்கு முன் சிந்து வெளிப்பிரதேசத்தில் ஏற்பட்ட மதத்துக்கும் மருத்துவத்துக்குமான நெருக்கம் இன்னும் இறுக்கம் பெற்றுத் தொடர வேண்டும். ஒவ்வொரு கோயிலிலும் சுகாதார மேம்பாட்டுக்குப் பயன்படுத்துவதற்கென புதிதாக ஒரு உண்டியலை வைப்போம். அதில் சேரும் பணத்தை நோய்த் தடுப்பு முறைகளுக்கும் நோயாளர்களின் துயர் துடைப்பதற்கும் பயன்படுத்துவோம். பிறரின் துயர் துடைப்பதன் மூலம் எமது பாவங்களைக் கழுவிக் கொள்வோம்.

**சி.சிவன்சுதன்,**
**வைத்திய நிபுணர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

ஒருவனுக்கு அன்பையும் பரிவையும் உண்மையான சுதந்திரத்தையும் நலத்தையும் கொடுப்பது என்ற அடிப்படையில் மதமும் மருத்துவமும் ஒன்றுபடுகின்றன. இந்த அடிப்படை நோக்கத்தை மதங்களும் மருத்துவத்துறையும் கைகோர்த்து நின்று வெற்றிகொள்வோம்.

(முற்றும்)

**கடந்த 6 வாரங்களுக்கும் கிடைக்கப்பெற்ற SMS முடிவுகள்**

'A' - 200 பேர் - 88.8%
'B' - 09 பேர் - 4 %
'C' - 1 ஆள் - 0.44%
'D' - 15 பேர் - 6.66%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VACANCY

## SALES REPRESENTATIVES IN JAFFNA/ KILINOCHCHI

Looking for Sales Representatives to handle showroom and distibution activities in our **JAFFNA/KILINOCHCHI** office. Remuneration and perks based on Experience/ Qualifications. Please forward your application by e-mail to dilushi@btl-feeders.com or fax **2300689.**

**BTL Lanka (Pvt)Ltd,**
**Level 6, BTL Shipping House,**
**45/2, Braybrooke Street,**
**Colombo- 02.**

## பெருந்திருவிழா

ஆனைக்கோட்டை ஸ்ரீவீரமா பிடாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 11 நாள்கள் இடம்பெறும் இந்தத் திருவிழாவில் எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறு நாள் செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் தி ரு வி ழா வு ம் இடம்பெறும்.

(ம-311)

## Laptop விற்பனைக்குண்டு

சில நாள்கள் மட்டும் சொந்தப் பாவனையிலுள்ள 76500/= பெறுமதியுள்ள Laptop 50,000/=க்கு விற்பனைக்குண்டு.

தொடர்பு:0773644405

## பிறந்தநாள் நினைவு

**கணபதிப்பிள்ளை பாலச்சந்திரன்**



பிறப்பு – 24.07.1981
இறப்பு – 25.02.2008

நாம் இருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.

தகவல் : அப்பா - த.கணபதிப்பிள்ளை
அம்மா - க. இராசமணி
மனைவி - பா. அமுதினி
மகன் - பா. ஜானுசன்
சகோதரர்கள் - க.ரவிச்சந்திரன் குடும்பம்
க. ஜெயச்சந்திரன் குடும்பம், உற்றார், உறவினர்.

4 ஆம் கட்டை, பூநகரி

## மரண அறிவித்தல்



### தம்பிராஜா சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட தாதி உத்தியோகத்தர், சமாதான நீதிவான்)

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தம்பிராஜா சிவலிங்கம் 22.07.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேல்- சரஸ்வதிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், லோகாம்பிகையின் பாசமிகு கணவரும், சிவதரன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், சங்கானை), கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகராணி காலஞ்சென்றவர்களான லலிதராணி, ஜெயராணி ஆகியோரின் அருமைச் சகோதரரும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் யோகேஸ்வரன், தில்லையம்பலம், தாளநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், தவச்செல்வி, புஸ்பாயினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லக்சிகா, ஹரிஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.07.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வட்டுக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

வட்டு.தென்மேற்கு,
வட்டுக்கோட்டை. (சி/2040) (39)

## நீங்காத நினைவலைகள்

6 ஆம் ஆண்டு | 4 ஆம் ஆண்டு





அமரர் சின்னையா வயிரமுத்து | திருமதி வயிரமுத்து தங்கம்மா

05.05.1930 – தோற்றம் – 16.07.1935
29.07.2005 – மறைவு – 23.07.2007
நவமி - திதி - நவமி

பாசத்தின் திருவுருவாய் பண்பின் சிகரமாய்
எமையெல்லாம் பெற்றெடுத்து அரவணைத்துப்
பெருமை தேடித்தந்த எமது முன்னறி தெய்வங்களின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி : மாவை கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை. V.ரவிச்சந்திரன்
தற்காலிக முகவரி : கலட்டி அம்மன் வீதி , யாழ்ப்பாணம். (மகன்)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த, 32 வயதுடைய, அரபு நாட்டில் Quantity Surveyorஆகப் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை

தொடர்பு:0776040651

## தேவை

வியாபார நிறுவனத்துக்குப் பொருத்தமான கட்டடம் தேவை. நகரப் பிரதேசங்களை அண்மித்ததாகவும், குறைந்தது 1500 சதுர அடியிலும் இருத்தல் நல்லது.

கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, சுன்னாகம், மன்னார் பிரதேசங்களில் தேவை.

தொடர்பு: 0771536723

## மணமகள் தேவை

யாழ் இந்து லண்டன் வதிவிட உரிமை பெற்ற 1976ம் ஆண்டு உத்தரம் 1ம் பாதம் 20பாவம் உயரம் 5'8'' உடைய மணமகனுக்கு 1984ஆம் ஆண்டுக்குபின்னர் உயரம் 5'2''க்கு மேல் 5'4''க்குள் O/L என்றாலும் A/L என்றாலும் படித்த அழகான நிறமான பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. ஸ்பொன்சர் செய்து எடுக்கப்படும்.

தொடர்பு: 0775388785

## மணமக்கள் தேவை

அனைத்து இனத்தவர்களிலும் உள்நாடு, வெளிநாடு, பட்டதாரிகள் அரசு,தனியார் துறை மணமக்கள் விவரங்களுக்கு அணுகவும். S.K.சிவகரன், சிவாலயா சர்வதேச திருமண நிலையம், ராமலிங்கம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

T.P:0215681126/0750741451

## காணி விற்பனைக்கு

கோப்பாய் தெற்கில் கல்வியியற்கல்லூரிக்கு சமீபமாகவும் கண்ணகை அம்மன் கோயிலுக்கு அண்மையிலும் நல்ல சுற்றாடலில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

தொடர்பு களுக்கு: 0779059039

## வீடு, காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீடு,காணி விற்பனைக்கு
பருத்தித்துறை மீன் சந்தையில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் 2¾ பரப்பு காணியும் வீடும், வேறு 1½ பரப்பு தென்னங்காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

T.P:0777322510

## நாட்டுக் கோழிக்குஞ்சு விற்பனைக்குண்டு

நாட்டுக் கோழிக் குஞ்சுகள் பெருந்தொகையிலும் கூட கிடைக்கப் பெறும். லங்கா ஃபாம்ஸ் & ஹச்சரீஸ் (Lanka Farms & Hatcheries)

T.P:0722137952

## German, Swiss மொழிகள்

German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் தினமும் நடைபெறுகிறது.

10,Palaly Road,
Jaffna.

தொடர்பு : 0771604823

## காணி தேவை

யாழ்.மாநகர எல்லைக்குள் அலுவலகம் ஒன்றுக்கு 100-300 சதுர அடிக்குட்பட்ட இடம் ஒன்று தேவை.

தொடர்பு : 0777444407

## காணி விற்பனைக்கு

இல.08, சந்தன மாதா கோயில் ஒழுங்கையில் 3¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: மு. ஆனந்தராசா, 29, சந்தன மாதா கோயில் ஒழுங்கை, பாண்டியன்தாழ்வு.
T:P: 021 222 1064 (6096)(20, 22)

## வீடு விற்பனைக்கு

கொக்குவில் சந்திக்கு அண்மையில் கே.கே.எஸ் வீதியில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0777781221

## எங்கள் கடைக்கு ஏற்றது

SAM4S

இரண்டு மாதிரிகள்
ரூ. 22,372/=
ரூ. 33,572/=

இலக்ரோனிக்
கேஸ் ரெஜிஸ்டர்
இப்பொழுது மிகக் குறைந்த விலையில்
புதிய அம்சங்களுடன்

ஒரு வருட உத்தரவாதம்
விற்பனைக்கு பிந்திய சேவை



அழையுங்கள்
0773143444

BUSINESS MACHINES
Co.(Pvt.) Ltd.
#1, Lake Crescent, Colombo - 02.
Tel : 011 2304380 / Fax : 2304381
